உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 307 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 13, திங்கள் 29.09.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily




பேர்த்தை வீழ்த்தியது சென்னை

பக்கம் 18

## காலநிலை

எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல பாகங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியங்கள் நிலவுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடும் இடி, மின்னலுடன் மழை பொழிவதற்கான சாத்தியம் காணப்படுவதால் பொது மக்கள் அதுகுறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# அரசை மாற்றியமைக்கவும் தயங்காது பொதுபல சேனா

### பௌத்தம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும் வலியுறுத்துகின்றார் அதன் தலைவர் கிரம விமலஜோதி தேரர்



கொழும்பு, செப்.29

இலங்கை ஒரு பௌத்த நாடு. அது பல்லின தேசமல்ல. பௌத்தர்கள் எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பிரகடனப் படுத்தியுள்ள பொதுபல சேனா அமைப்பு, பௌத்தர்களின் கரிசனைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் ஆட்சி மாற்றத்தைக்கூட ஏற்படுத்துவோம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற பொதுபல சேனாவின் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அந்த அமைப்பின் தலைவர் கிரம விமல ஜோதி, அரசுக்கு கடும் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

இலங்கை ஒரு பல்லின நாடு என்று கூறப்படுவதை நிராகரித்த அவர் இலங்கை ஒரு பௌத்த நாடு, பௌத்த நாட்டில் அது இஸ்லாமிய தீவிரவாதிகள் மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## பல் சேனாவுடன் இணைந்து 969 அமைப்பு செயற்படும்

### அதன் தலைவர் அசின் விராது கூறுகின்றார்



கொழும்பு, செப்.29

ஜிகாத் தீவிரவாதிகளிடம் இருந்து பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக சிங்கள- பௌத்த அமைப்பான பொதுபல சேனாவுடன் கைகோர்த்துச் செயற்படவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார் மியான்மாரைச் சேர்ந்த சர்ச்சைக்குரிய பிக்குவும், 969 அமைப்பின் ஸ்தாபகருமான அசின் விரர்து தேரர்.

22 ஆம் பக்கம் பார்க்க

**சர்வதேச டைம் சஞ்சிகை விராது தேரர் பற்றி அட்டைப் படக் கட்டுரை எழுதியபோது இவர் ஒரு மியான்மரின் பௌத்த தீவிரவாதி என விமர்சனம் செய்திருந்தது.**

## "மஹிந்தவின் ஆட்சி விரைவில் கவிழும்"

### வயிறெரிந்து சாபமிட்டார் மகனைத் தொலைத்த தாய்

யாழ்ப்பாணம், செப். 29

"மஹிந்தவின் ஆட்சி விரைவில் கவிழும். கடவுள் இருக்கிறார். என்ர பிள்ளையை காணாமற் போகச் செய்தவங்கள் மண்ணோடு மண்ணா எரிஞ்சு போவாங்கள். இவங்கள் எல்லாரும் அழிஞ்சு போவாங்கள்" - இவ்வாறு தனது ஒரே ஒரு மகனைத் தொலைத்து, கணவனையும் இழந்து தனியாகவுள்ள தாய் ஒருவர் ஆணைக்குழு அமர்வு இடம்பெற்ற அரங்கில் கதறி அழுதார்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு முழங்காவில்

22 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சியுடைய அரசியல் குழு நியமனம்

திருகோணமலை, செப்.29

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் எம்.பி. தலைமையில்அரசியல்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கட்சியின் பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் திருகோணமலை நகர சபை பொதுநூலகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி இரு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. காலை 10 மணியிலிருந்து இரவு 7 மணி வரை நடைபெற்ற

22 ஆம் பக்கம் பார்க்க

## போதைப் பாவனையாலும் காணாமற்போயிருக்கலாம்

### காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் தலைவர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், செப். 29

இளம்பிள்ளைகள் பெற்றோரின் கண்காணிப்பு இன்றி தனித்து வாழ்வதற்கு கொழும்பு பாதுகாப்பான இடமல்ல. அவ்வாறு வாழ்வதானது ஆபத்தானது. அவர்கள் போதை வஸ்து பாவனைக்கு இலகுவில் ஆட்பட்டுவிடுவார்கள் - இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவரும், ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியுமான மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கொழும்பில் கராட்டி மாஸ்ரராக இருந்த தனது மகன்

22 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவின் ஊடாகவே கூட்டமைப்பினருடன் பேசலாம்

### இந்தியப் பிரதமரிடம் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த



நியூயோர்க், செப். 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதாக இருந்தால், அது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக மாத்திரமே முன்னெடுக்க முடியும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகத் தெரிவித்துள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## கடலில் தத்தளித்த இந்திய மீனவர் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.29

கச்சதீவுக்கு அண்மித்த நெடுந்தீவு கடற்பரப்பில் பாறைகளுக்கிடையே படகு சிக்குண்டு கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் நால்வரை இலங்கைக் கடற்படையினர் நேற்று மீட்டுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க வந்த மீனவர்களின் ஒரு படகு கடலில் நடுப்பகுதியில் பாறையில் சிக்குண்டதில் மீனவர்கள் படகுடன் தத்தளித்தனர்.

அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் மீனவர்களுடன் படகையும் மீட்டு நெடுந்தீவுக் கடற்கரைக்கு கொண்டு வந்தனர்.

காப்பாற்றப்பட்ட மீனவர்கள் ஊர்காவற்றுறை பொலிசாரிடம் நேற்று மாலை கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ற-14)

## தமிழகத்தின் முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் பதவியேற்பு

சென்னை, செப்.29

தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்த செல்வி ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதையடுத்து, தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக இன்று பதவியேற்கின்றார் ஓ.பன்னீர்ச்செல்வம். தமிழகத்தின் அடுத்த முதல்வரை தேர்வுசெய்வதற்கான அ.தி.மு.க., சட்டமன்ற உறுப்பினர்களின்

22 ஆம் பக்கம் பார்க்க

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

## வடக்கு மாகாண மட்டத்தில் வவுனியா மாணவன் முதலிடம்

யாழ்ப்பாணம், செப்.29

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

22 ஆம் பக்கம் பார்க்க

**யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் மூவர் முதலிடத்தில்**

# பொறியியலாளனாக உருவெடுத்து சேவை செய்வதே எனது இலக்கு

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்ற அபினேஸ்

வவுனியா, செப்.29

"நான் ஒரு பொறியியலாளனாக வரவேண்டும். மக்களுக்கு தேசப்பற்றுடன் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது அம்மா, அப்பாவின் கனவு. அதை நிறைவேற்றுவதுதான் எனது இலட்சியம்"- இவ்வாறு தெரிவித்தார் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 195 புள்ளிகளைப் பெற்று, வடக்கு மாகாணத்திலும், வவுனியா மாவட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுச் சித்தியடைந்த அபினேஸ் தயானந்தரூபன்.



கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரீட்சை முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளன. அதில் வடக்கு மாகாணத்திலும், வவுனியா மாவட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார் த.அபினேஸ். அவரை நேரில் வாழ்த்திய 'உதயன்' அவரிடம் நேர்காணல் கண்டான்.

*கேள்வி:* வடமாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று முதலாம் இடத்தைப் பெற்றதன் மூலம் தற்போது எவ்வாறு உள்ளீர்?

*பதில்:* மிகுந்த மகிழ்ச்சியாகவுள்ளேன்.

*கேள்வி:* இந்த வெற்றி மூலம் ஆசிரியருக்கு என்ன சொல்கிறீர்கள்?

*பதில்:* எப்போதும் எனது வெற்றிக்கு உதவிய ஆசிரியர்களுக்கு நன்றி. ஆசிரியர் செலன் ராஜேஸ்வரி, அதிபர் அருட்சகோதரி திரேசம்மா சில்வா மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களான தீபன் ஜங்கரன் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

*கேள்வி:* உங்களின் இந்த வெற்றிக்கு உங்கள் கற்றல் முறையில் மாற்றம் செய்து கற்றீர்களா?

*பதில்:* நான் நன்றாக வாசிப்பேன். எனது அம்மாவும் அப்பாவும் எனக்கு எப்போதும் ஊக்கம் அளித்தார்கள். கல்வி நிலையத்திலும் பாடசாலையிலும் தந்த ஊக்கம் என்னை படிக்கத் தூண்டியது. படிப்புச் சிந்தனைதான் எனது வெற்றி.

*கேள்வி:* உங்கள் எதிர்கால இலக்கு என்ன?

*பதில்:* நான் ஒரு பொறியியலாளராக வருவதும் மக்களுக்கு தேசப்பற்றுடன் சேவையாற்றுவதும் அம்மா அப்பாவின் கனவை நிறைவேற்றுவதும்தான்.

*கேள்வி:* வெற்றி மூலம் உங்கள் நண்பர்களுக்கு கூறுவது?

*பதில்:* நன்றாகப் படித்து நல்ல குணங்களுடன் இருங்கள். (ந-402)

# விண்வெளி வீரராவதே இலட்சியம்

## யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றவர்களில் ஒருவரான கபிசன்

யாழ்ப்பாணம், செப்.29

நான் விண்வெளி வீரராக ஆக வேண்டும் என்ற லட்சியத்தோடு புலமைப்பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகள் பெறுவேன் என்று ஒரு மட்டையில் எழுதி எனது மேசையில் ஒட்டி வைத்திருக்கிறேன். எனக்கிருந்த நம்பிக்கையும் வாசிக்கும் திறனுமே எனக்கு இந்த உயர் புள்ளியை பெறக் காரணமாய் அமைந்தது - இவ்வாறு தெரிவித்தார் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களில் ஒருவரான இ.கபிசன்.



முதலிடம் பெற்று சித்தியடைந்த யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனான கபிசனுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்த 'உதயன்' அவரிடம் அவரது இந்த வெற்றி குறித்து வினவினான்.

"உயர் புள்ளியை பெற்றதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாறு அதிகூடிய புள்ளிகளைப் பெறுவேன் என்று நான் எதிர்பார்த்திருந்தேன். அதற்கு எனக்கு மிகவும் உதவியாக இருந்த எனது ஆசிரியர், பெற்றோருக்கு மிக கடமைப்பட்டுள்ளேன்.

இனி வரும் காலங்களில் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சைகளிலும் மாணவர்கள் நினைத்தால் என்னைப் போன்று பரீட்சையில் இலகுவாக சித்தி அடைய முடியும்"- என்று தெரிவித்தார் கபிசன். (ந-21.ரி)

# பெற்றோர் கொடுத்த உற்சாகமே வெற்றிக்கு உறுதுணையானது

## யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றவர்களில் ஒருவரான சஞ்சயன்

யாழ்ப்பாணம், செப்.29

கல்வி மூலம் நல்லதோர் நிலையில் நான் மிளிர வேண்டும் என்ற சிந்தனையை எனது தாய் தந்தையர் ஊட்டி வளர்த்தமையும், பரீட்சையில் நல்ல பெறுபேறு பெறுவாய் என்று எனக்கு அவர்கள் தந்த தன்னம்பிக்கையுமே இந்தப் பெறுபேற்றைப் பெற உதவியது - இவ்வாறு கூறினார் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்களில் ஒருவரான பரமேஸ்வரன் சஞ்சயன்.



அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவனான அவரை சந்தித்து அவரது இந்த வெற்றி குறித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பாடசாலையின் அதிபர் நா.கேதீஸ்வரன் மற்றும் எனது வகுப்பாசிரியர் ம.கபிலன் ஆகியோரின் கல்வி சார்ந்த வழிகாட்டுதல் ஊக்குவிப்பு என்பன இந்தப் பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள உறுதுணையாக அமைந்தன. அதனைவிட வீட்டில் எனது தாயாரின் சகோதரியினுடைய கற்பித்தல் முறைமையும் என்னை இந்த பெறுபேறு பெற்றுக்கொள்ள உந்துதலாக அமைந்தது.

தனது தந்தை கூலித் தொழிலுக்கு சென்றும் விளக்குமாறு அடித்துக் கொடுத்தும் பெறுகின்ற சிறுதொகை வருமானத்தில் கற்றல் உபகரணங்களை வாங்கித்தந்தார். அதற்குப் பலன் கிடைத்ததையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஓர் வைத்தியராக வந்து சமூகத்தின் எல்லாத் தரப்பினருக்கும் சிறந்த சேவையினை வழங்கி உயிரைக் காக்கும் உத்தம பணியினை மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம்.

ஒவ்வொரு நாளும் மனப்பாடம் செய்ய வேண்டிய விடயங்களை சரி பார்த்துக் கொள்ளுதல். நேர காலம் பாராது படித்தல், நல்ல பெறுபேறு பெறுவேன் என்ற நேர சிந்தனையை எப்பொழுதும் மனதில் கொண்டிருத்தல் என்பன எதிர்காலத்தில் பரீட்சை எழுதவிருக்கும் என்போன்ற சக மாணவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்தார் சஞ்சயன். (ந)

# மருத்துவராக சேவையாற்றுவதே என்னுடைய எதிர்கால இலக்காகும்

## மன்னார் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற ஆன் பொபிசா கூறுகின்றார்

மன்னார், செப்.29

மருத்துவராக வரவேண்டும் என்பதே எனது ஆசை. அந்த எண்ணத்துடனேயே எனது கல்வியைத் தொடர்கின்றேன் என்று கூறுகின்றார் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி குணசீலன் ஆன் பொபிசா.

பொபிசாவை நேரில் சந்தித்து அவரது இந்த வெற்றி குறித்து அளவளாவினோம்.

"மருத்துவராக வர வேண்டும் என்பதே எனது ஆசை, அந்த எண்ணத்தை மனதில் இருத்தியே எனது கல்வியைத் தொடர்கின்றேன். எனது இந்த வெற்றிக்குப் பாடசாலை அதிபருக்கும், எனக்கு விருப்புடன் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

எனக்கு எந்தவேளையிலும் உறுதுணையாக இருந்த எனது பெற்றோருக்கும் நன்றிகளைக் கூறுகின்றேன்"- என்று தெரிவித்தார் ஆன் பொபிசா. (ந-56)



# தரம் 5 புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளி விவரம்

யாழ்ப்பாணம் 158, மட்டக்களப்பு 158, கிளிநொச்சி 147, முல்லைத்தீவு 147, நுவரெலியா 157, கொழும்பு 159, கம்பஹா 159, களுத்துறை 159, கண்டி 159, மாத்தளை 159, காலி 159, மாத்தறை 159, ஹம்பாந்தோட்டை 155, மன்னார் 157, வவுனியா 158, அம்பாறை 158, திருகோணமலை 158, குருநாகல் 159, புத்தளம் 156, அநுராதபுரம் 155, பொலநறுவை 157, பதுளை 156, மொனராகலை 158, இரத்தினபுரி 157, கேகாலை 159 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



வவுனியா, செப்.29

இந்த வருடம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவன் தயானந்தரூபன் அபினேஸ் 195 புள்ளிகளைப் பெற்று வடமாகாண ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

அபினேஸை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் அவரது வீட்டுக்குச் சென்று வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். (ந)

# ஆளும் கட்சியின் தோல்விக்கு விமல் வீரவன்ஸவே காரணம்

## ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் உதயகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.29

மொனராகலையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆசனங்கள் குறைய காரணம் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ஸ என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அந்தக் கட்சியின் ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் உதயகுமார.

ஊவா மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மொனராகலையில் 10 ஆசனங்கள் இருந்தன. அது 8 ஆக குறைந்தமைக்கு அமைச்சர் வீரவன்ஸவே பொறுப்புக் கூறவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து விலகி சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட உதயகுமாரவுக்கு கடந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டதால், உதயகுமாரவிற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், அவர் சுயேச்சையாக போட்டியிட்டு 3 ஆயிரத்து 781 வாக்குகளை பெற்றார். தான் பெற்ற வாக்குகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு சேர்ந்திருந்தால் மேலும் இரண்டு ஆசனங்கள் கிடைத்திருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, உதயகுமார கடந்த தேர்தலில் 3 ஆயிரத்து 781 வாக்குகளைப் பெற்றிருந்த போதும் தோல்வியையே தழுவியிருந்தார். (ந)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கினாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 13 திங்கள் (29.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 307

# ஐ.நா. விசாரணைகள் தடையின்றித் தொடரும்

## மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

**இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தடையின்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.**

இலங்கை விசாரணை தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிளவுகள் ஏற்பட்டது. இருப்பினும் விசாரணைகள் தடையின்றி முன்னெடுக்கப்படும். எமது விசாரணைகளின்போது கிடைத்துள்ள சாட்சியங்களுக்கு உறுதிப்பாட்டை சேகரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றது என்று அந்த விசாரணைக்குழு விடுத்துள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் ஒரு கட்டமாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சமர்ப்பிப்பு ஆவணங்களை கடந்த வாரம் வெளியிட்டிருந்தது.

இதேவேளை தமது விசாரணைகளுக்கு தற்போது சவால்கள் ஏற்பட்டுள்ளது என்று, விசாரணைக் குழு கடந்த வாரம் ஐக்கிய நாடுகள்

(19 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. விசாரணைக்குழுவிடம் சாட்சியமளித்தார் து.ரவிகரன்

கொழும்பு, செப். 29

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணையில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேரில் சென்று சாட்சியமளித்துள்ளார்.

போரின் போது இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பில் நேரடிச் சாட்சியம் வழங்கியதுடன், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்து கொண்டிருப்பது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைதான் என்பதற்குரிய 40 பக்க ஆதாரங்களையும் அவர் வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், ஜெனீவாவில் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காகச் சென்றிருந்தார். இதன் போது மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணையிலும் சாட்சியமளித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி ஜெனீவா நேரப்படி பி.ப 2.30 மணி தொடக்கம் 4.45 மணி வரையில் அவர் வாய்மூலமான சாட்சியத்தை வழங்கியுள்ளார். இதன் போது அவரிடம் பல்வேறு கேள்விகளை விசாரணையாள்ர்கள் தொடுத்துள்ளனர். அதற்கும் அவர் ஆதாரங்களுடன் பதில்களை வழங்கியுள்ளார்.

குறிப்பாக, இறுதிப் போரில் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள், வேண்டுமென்று காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பிலான விடயங்களை அவர் ஆதாரப் பட்டியல்களுடன் சமர்பித்துள்ளார்.

மேலும் போரின் பின்னர் தற்போது புலனாய்வுத் துறையினரால் மக்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், நில அபகரிப்பு, கட்டமைக்கப்பட்ட

(19 ஆம் பக்கம் பார்க்க)

## சரமாரியாக கேள்விகள் தொடுத்த ஆணைக்குழுவினர்

யாழ்ப்பாணம், செப். 29

இடம்பெயர்ந்து தங்க வைக்கப்பட்டிருந்த அகதி முகாமிலிருந்து யாராவது களவாக வெளியேறிச் சென்றார்களா ?, மக்களுடன் மக்களாக சிவில் உடையில் எல்.ரீ.ரீ.யினரும் வந்தனரா?, மக்களுடன் நின்ற எல்.ரீ.ரீ.யினர் இராணுவத்தினர் மீது சுட்டார்களா ?, உங்களை இடம்பெயர வேண்டாம் என்று யாராவது தடுத்தார்களா ?

இவ்வாறுகாணமற்போனமை தொடர்பில் சாட்சியமளிக்க வந்த உறவுகளிடம் ஆணைக்குழுவினர், போர்க்குற்ற விசாரணைக்குரிய கேள்விகளைக் கேட்டுத் துளைத்தெடுத்தனர்.

காணாமற்போனோர்தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் கிளிநொச்சி

(19 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் இராணுவத்திடம் சகோதரனை ஒப்படைத்தேன்

### இன்றுவரை காணவில்லை என சகோதரி சாட்சியம்

யாழ்ப்பாணம், செப். 29

"ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் எனது சகோதரனை இராணுவத்தினர் விசாரணை என்று அழைத்துச் சென்றனர். அதன் பின்னர் அவரைக் காணவில்லை. இராணுவத்தினரிடம் நாம் ஒப்படைத்த பின்னரே அவர் காணாமற் போயுள்ளார்"- இவ்வாறு காணாமற் போனவரின் சகோதரி ஆணைக்குழு முன்பாக நேற்றுச் சாட்சியமளித்தார்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு முழங்காவில் மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி, நான் எனது தாய், தந்தை மற்றும் இரு சகோதரர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தோம். இதன் போது ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து எனது 20 வயதான சகோதரனை இராணு

(19 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டான் மகன்

### 24 ஆண்டுகளாகியும் காணவில்லை என்று தாய் கதறல்

யாழ்ப்பாணம், செப். 29

காரைநகர் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்ட 24 வருடங்கள் கடந்தும் கிடைக்காத தனது மகனை மீட்டுத் தருமாறு ஆணைக்குழு முன்பாக வயதான தயார் ஒருவர் சாட்சியமளித்தார்.

முழங்காவில் மகாவித்தியாலயத்தில் ஆணைக்குழுவின் அமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த அமர்வில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி எனது மகனும், எங்களது ஊரைச் சேர்ந்த 12 பேரும் படகில் செல்லும் போது காணாமற் போயினர். இவர்கள் சென்ற படகு காரைநகர் கடற்படை முகாமில் இருந்தது என்று அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

அந்தக் காலப் பகுதியில் சண்டை இடம்பெற்றுக் கொண்டிருந்தது. காரைநகர் கடற்படை முகாமில் இருந்த கடற்படையினர் கடலில் சென்று வருவதால் அந்தக் காலத்தில் எங்களது எழுவைதீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் மக்களின் படகுச் சேவை இடம்பெறுவதில்லை. மீன்பிடி படகுகளிலே மக்கள் பயணம் செய்வர்.

எனது மகன் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டி

(19 ஆம் பக்கம் பார்க்க)

## யுவதி சாவு; சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 29

யுவதி ஒருவர் உயிரிழக்கக் காரணமானவர் என்று நம்பப்படும் அராலியைச் சேர்ந்த குடும்பஸ்தரைக் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அளவெட்டியைச் சேர்ந்த இளவயது யுவதி ஒருவர் அவரது வீட்டிலிருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டார். குறித்த யுவதி நேற்றுமுன்தினம் தனது சகோதரியுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது குறித்த நபர் வீதியில் வைத்து அந்த யுவதியை வலுக்கட்டாயமாக தன்னுடன் அழைத்துச் செல்ல முற்பட்டுள்ளார். அதற்கு இரு யுவதிகளும் எதிர்ப்புத் தெரிவித்து அவனிடமிருந்து தப்புவதற்காக அருகில் உள்ள வீட்டுக்குள் ஓடிச் சென்றுள்ளனர். அந்த வீட்டிலிருந்தவர்கள் குறித்த குடும்பஸ்தரிடமிருந்து யுவதியை பாதுகாத்து அவர்களது வீட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

அது தொடர்பில் யுவதியின் தாயாரும் சகோதரியும் சந்தேக நபரான குடும்பஸ்தரது வீட்டுக்குச் சென்று திரும்பி வந்து பார்த்தபோது, குறித்த யுவதி தூக்கில் தொங்கிய நிலை

(19 ஆம் பக்கம் பார்க்க)

## பணம் கேட்போர் குறித்து அவதானமாக இருங்கள்

### காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

காணாமற் போன மகன் தொடர்பில் தகவல்கள் தெரியும் என்று கூறி உங்கள் வீடுகளுக்கு சி.ஐ.டி என்று சொல்லி வருபவர்களை நம்ப வேண்டாம். அவர்கள் உங்களை ஏமாற்றி பணத்தை பறிக்க வருகின்றார்கள். எச்சரிக்கையாக இருங்கள் என்று தெரிவித்துள்ளார் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.

கோவிந்தசாமி வைரக்கா என்பவர் தனது மகன் மற்றும் மருமகன் கடத்தப்பட்டமை தொடர்பில் சாட்சியமளித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆணைக்குழுத் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனது மருமகன் வவுனியா பூவரசங்குளத்தில் தங்கியிருந்த போது, 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி இரவு 12 மணியளவில் வீட்டிற்குள் வந்த சிலர் அவரைக் கடத்திச் சென்றனர்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

## மலர் பண்ணை அமைக்க விரைவில் நடவடிக்கை

### வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம்.செப்.29

வடக்கு மாகாணத்தில் பெண்களுக்கு அதிகளவு வேலை வாய்ப்பை வழங்கும் நோக்குடன் மலர் பண்ணையொன்றை அமைப்பதற்கும் கார்த்திகைச் செடியின் விதை ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு அதற்கான பண்ணை

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.தென்மேற்கு பிரதேசசபை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

வலி.தெற்மேற்கு, செப்.29

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு சில உறுப்பினர்களின் செயற்பாட்டினால் தொடர்ந்து நடத்த முடியாமல் கூட்டத்தை ஒத்திவைத்த தவிசாளர் சபையை விட்டு வெளியேறினார். அதனால் பல அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முக்கியமான விடயங்கள் குறித்து ஆராய்வது தடைப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம்

(19 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் கிளை நூலகத்தால் மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.29
யாழ்ப்பாணம் மாநகர சபையின் நல்லூர் கிளை நூலகம் பிரதேச மாணவர்கள் மற்றும் நூலக உறுப்பினர்கள் இடையே போட்டிகளை நடத்தவுள்ளது.
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக இந்தப் போட்டி இடம்பெறும்.
முன்பள்ளி மாணவர்களுக்கான சித்திரம் வரைதல், தமிழ்பாட்டு, ஆங்கிலப் பேச்சு, தரம் 3 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கு இடையிலான சித்திரப் போட்டிகள், தரம் 6 முதல் தரம் 1-3 வரையான மாணவர்களுக்கு இடையிலான தமிழ், ஆங்கில கட்டுரைப் போட்டி கள், பேச்சுப் போட்டிகள் என்பன இதன் போது இடம்பெறும்.
போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயர் விவரங்களை நல்லூர் கிளை நூலகத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

# தொழில்நுட்ப அலுவலர் தரம் 3 இற்கான பரீட்சை

கரணவாய், செப்.29
இலங்கை மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்படும் மெய்வன்மைப் போட்டிகளுக்கான தொழில்நுட்ப அலுவலர் தரம் 3 இற்கான பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தில் இடம்பெறவுள்ளது.
எழுத்துப்பரீட்சை, வாய்மொழிப் பரீட்சை என இரு பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப்பரீட்சையில் தோற்றுவோருக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இந்தப்பரீட்சையில் வட மாகாணத்தில் இருந்து தமிழ் மொழி மூலப் பரீட்சார்த்திகள் பலர் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-108)

## டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு குழுக் கூட்டம்

நல்லூர் பிரதேச மட்ட டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு குழுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.
நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு திணைக்களத் தலைவர்களை பிரதேச செயலர் கேட்டுள்ளார். (வ-7)

# கனிஷ்ட ஊழியர்களுக்கான பதவி உயர்வு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.29
வடக்கு மாகாண அரச சேவையிலுள்ள கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரம் கோரியுள்ளார்.
மேற்படி போட்டிப் பரீட்சையில் விண்ணப்பிக்க விரும்பும் கனிஷ்ட ஊழியர்கள் வடக்கு மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியை வகிப்பதுடன் விண்ணப்ப திகதிக்கு உடன் முன்வரும் 5வருட காலப்பகுதியில் தொடர்ச்சியாகவும் திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராகவும் இருக்க வேண்டும்.
இது தொடர்பில் திணைக்களத் தலைவரும் உறுதிப்படுத்தியுள்ளதுடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் மொழி, கணிதம் உள்ளடங்கலாக 6 பாடங்களுக்கு குறையாமல் சித்தியடைந்திருக்க வேண்டும்.
இவ்வாறு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல 481, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் கோரியுள்ளார். (வ-288-9)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
கண்டி வீதி, கச்சேரிக்கு முன்பாக 3 பரப்பும் 11½ குழி வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: (52688) (4.6.3)
077 975 8046, 077 969 0615

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**சிவராசா சிவநிரோசன்**
29.09.2014 திங்கட்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெறும் நிரோசனை மேலும் பல பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
செல்லையா வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (47289)(3&4)
வாழ்த்துபவர்கள்: சிவராசா மதனராணி குடும்பத்தினர்.

# நிர்வாகிகள் தெரிவு

வரணி வடக்கு விவசாய சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு வார முற்பகுதியில் இடம்பெற்றது. வரணி வடக்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் இந்தத் தெரிவு இடம்பெற்றது.
புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:-
தலைவர்-வீ.பரமன், செயலாளர்-க.தியாகராசா, தனாதிகாரி வீ.முருகேசபிள்ளை, உபதலைவர் - வீ.பாலசிங்கம், உபசெயலாளர் - க.இராசையா, நிர்வாக சபை உறுப்பினர்கள் வீ.சிதம்பரநாதன் மற்றும் க.பவளம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (வ-122)

## பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள்

யாழ்ப்பாணம், செப்.29
வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஆறாம் கட்டமாக நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 30 பயனாளிகளுக்குதலா ஒருவருக்கு பத்துக் கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார். (வ-7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
பேராதனை பல்கலைக்கழகத்தால் இன்று (29.09.2014) திங்கட்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப்பட்டம் பெறும் செல்வி அமிர்தலிங்கம் அமிர்தினி அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்: சியன் மாமா, அத்தை, அம்மம்மா

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**அமிர்தலிங்கம் மதன்ராஜ்**
29.09.2014 திங்கட்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B.A பட்டம் பெறும் மதன்ராஜ் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
வாலையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (47289)(3&4)
வாழ்த்துபவர்கள்: நண்பர்கள்.

**கடை வாடகைக்கு உண்டு**
யாழ். கஸ்தூரியார் வீதியில் ராஜா திரையரங்குக்கு அருகில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
(சி.15980) (45.6.3)
தொடர்பு: 021 222 2863

**ஒத்துமாறல்**
மட்டக்களப்பில் விஞ்ஞான ஆசிரியராக நகரப் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் யாழ்.மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். (52443)(7.8.3)
தொடர்பு கொள்ளவும்: 077 877 7547

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
இன்று (29.09.2014) திங்கட்கிழமை கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் (BA) பட்டம் பெறும்



சிவலிங்கம் ரதீசன் BA (கொக்குவில்)



சிவநாதன் மேனகதீபன் BA (கருமலை)



அழகரட்ணம் தினேஸ் BA (தாவடி)

இவர்கள் மூவரையும் ஆசீர்வதித்து வாழ்த்துவதுடன் இவர்கள் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற மனதார வாழ்த்துகிறோம்.
(52658)(4.3.6)
வாழ்த்துவோர்: நண்பர்கள்.

**யாழ்/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை**
2014 தரம் 5 புலமைப்பரீட்சையில் பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளனர்.
இவர்களை பாடசாலைச் சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.



செல்வன் சா.சஞ்ஜீபன்
பெற்ற புள்ளி - 173



செல்வன் சி.அனுஜன்
பெற்ற புள்ளி - 165

மேலும் இப்பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பின்வரும் மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| த.நிதர்சன் | - 137 | நி.தமிழ்ச்செல்வன் | - 111 |
| நா.அஜானன் | - 130 | ர.அஸ்வினி | - 109 |
| ஜெ.கிரிசாந் | - 116 | பா.டிலானி | - 109 |
| க.நிகிதா | - 112 | சி.ஆரணி | - 105 |
| வி.டிலக்ஷன் | - 111 | கி.நிதர்சனா | - 101 |

(52685)(12.6)
பாடசாலைச் சமூகம்

**சீரடி சாயி மந்திரின் 6 ஆவது வருட உற்சவப் பெருவிழா-2014**



29.09.2014 மாலை 4.30 மணிக்கு-கொடியேற்றம்
03.10.2014 மாலை 4.30 மணிக்கு விசேட "துனி" பூசை (பாபா சமாதி தினம்)
06.10.2014 மாலை 5.30 மணிக்கு சப்பறம்
07.10.2014 மாலை 4.30 மணிக்கு தேர்த்திருவிழா
08.10.2014 மாலை 4.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா
09.10.2014 மாலை 4.30 மணிக்கு லெண்டித் தோட்ட உற்சவம்
★ அகில இலங்கையில் சீரடி சாயி நாதருக்கு தேர் இடம்பெறும் ஒரே ஒரு ஆலயம் இதுவாகும்.
"சீரடி சாயி மந்திர்"
314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (52549)(4.3.6)
பா.ராகவன் (ஸ்தாபகர்)
T.P: 077 722 2568



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** குடும்பத்தில் நடைபெறும் சில விடயங்கள் உங்கள் கோபத்தைத் தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும். உறவினர்கள் மத்தியில் இருந்த பழைய பகைகள் மாறும்.



**இடபம்:** எந்த ஒரு காரியத்தை செய்யும் முன்பும் அதை எப்படி செய்வது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை தரும். அடுத்தவர் யோசனைகளைக் கேட்டு தடுமாற்றம் அடையாமல் இருப்பது நல்லது.



**மிதுனம்:** எதிர்ப்புகள் அகலும். தெளிவான மன நிலை இருக்கும். செயற்திறன் அதிகரிக்கும். ஆனால், உங்களுக்கு எதிராக சிலர் செயற்படும் சூழ்நிலை இருப்பதால் கவனம் தேவை. நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும்.



**கடகம்:** தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயற்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள்.



**சிங்கம்:** உறவினர்கள் வருகை இருக்கும். அவர்களிடம் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் அன்பாகப் பேசுவது நல்லது. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.



**கன்னி:** எதிலும் சாமர்த்தியமாகச் செயற்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்பாலினத்தாருடன் பழகும்போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும்.



**துலாம்:** தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம்.



**விருச்சிகம்:** குடும்ப விடயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும்போது கவனமாகப் பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின்போதும் கவனம் தேவை.



**தனுசு:** திறமையான பேச்சின்மூலம் எதையும் வெற்றிகரமாகச் செய்து முடித்து ஆதாயம் அடைவீர்கள். தடை நீங்கி காரியங்கள் வெற்றிகரமாக நடைபெற்று முடியும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பயன் கிடைக்கும்.



**மகரம்:** பேச்சால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். மனதில் புதிய தெம்பும் உற்சாகமும் தோன்றும். எதிர்பாராத உதவியால் நன்மை ஏற்படும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளால் நன்மை அடைவார்கள்.



**கும்பம்:** தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன் னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்புகள் ஏற்படலாம்.



**மீனம்:** குடும்பத்தில் அமைதி ஏற்படும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகளுடன் அனுசரித்து நடப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**நாளை**

புரட்டாதி-14 செவ்வாய்க்கிழமை
30.09.2014
திதி: ஷஷ்டி பி.ப.12.14 வரை
நட்சத்திரம்: கேட்டை
மு.இ.09.47 வரை
சுபநேரம்:10.32-12.02 வரை
இராகுகாலம்:03.02-04.32 வரை
சரஸ்வதி பூஜாரம்பம்

## மானம்பூ உற்சவம்

யாழ்ப்பாணம், செப்.29

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய நவராத்திரி விரத பூசை கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 3ஆம் திகதி வெள் ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மானம்பூ திருவிழா இடம்பெறும். சிவாகம சேகரர், சிவஸ்ரீ. ந.இராசேஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (வ-ரி)

## சகோதரத்துவ வார விழா

தென்மராட்சி, செப்.29

மீசாலை வடக்கு வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தின் உலக சகோதரத்துவ வார விழா நாளை தொடக்கம் ஒக்ரோபர் 5 ஆம் திகதி வரை ஞானக் கோட்ட மண்டபத்தில் இடம் பெறும். சகோதரத்துவ வாரத்தில் காலை, மதியம், இரவு வழிபாடும் திருஅருட்பா ஓதலும் இடம்பெறும்.

நிகழ்வுகளில் தமிழ்நாடு சோழ வந்தான் வள்ளலார் சன்மார்க்க சங்கத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, மதுரையைச் சேர்ந்த அ. இராமானுஜம் ஆகியோர் கலந்து கொள்வர்.

எதிர்வரும் 3 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு அறநெறிப் பரீட்சையும் 4 ஆம் திகதி கணினிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு முதலாவது பகுதி பரீட்சையும் இடம் பெறும். (வ-9)


## நீங்காத நினைவில் ஆறாம் ஆண்டு



அன்னை மடியில் 12. 04. 1961

ஆண்டவன்அடியில் 29.09.2008

அமரர் உயர்திரு

க.விக்கினராஜேஸ்வரன்

(B.Sc. PGDE, ISA, SLPS நீக்கவரெட்டிய கல்வி வயலம்).

திதி: 23.09.2014

எப்போதும் இனியானை
எம் மனத்தே வைத்தோமே.
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

பன்னாலை,
தெல்லிப்பழை.

என்றென்றும் பிரிவுத் துயரால் வாடும்
அன்பு மனைவி, குடும்பத்தினர்,
3ஆம் வட்டாரம், நயினாதீவு.


## ஏலம் எடுக்க ஆள்கள் இல்லை

சாவகச்சேரி பிரதேச சபையால் கடந்த 23 நடத்தப்பட்ட ஏல விற்பனையில் ஏலம் எடுக்க ஆள்கள் இல்லாததால் குறித்த ஏல விற்பனை இடம் பெறவில்லை.

குறித்த பிரதேச சபையால் கழித்து ஒதுக்கப்பட்டுள்ள பல விதமான பொருள்கள் அன்றைய தினம் ஏலம் விடுவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. குறித்த பிரதேச சபையின் கச்சாய் உப அலுவலகத்தில் குறித்த பொருள்கள் ஏலத்துக் காக காட்சிப் படுத் தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-122)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் கனடா மார்க்கம் நகரில் வசித்தவருமான

வேலும்மயிலும் கதிரவேலு

திதி : ஷஷ்டி

தோற்றம் 28.08.1940

மறைவு 20.09.2012

அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் நினைவில்

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்
4ஆம் கட்டை, கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

(52678)(7.6.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

சுப்பிரமணியம் தில்லைநாதன்

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் - மந்திகை வைத்தியசாலை)

தோற்றம் 17★03★1949

மறைவு 30★08★2014

ஆயிரம் உறவுகள் எம்மோடு இருந்தபோதும் துணையிரம் என்பது தரணியில் மேலானதே ... போல் விளங்கும் பண்பான அறிவுரைகள் ஓராயிரம் ... ஒளிவிளக்காய் வழிகாட்டும்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

மானிப்பாய் வீதி,

(52679)
(7.6.3)



## ஈரவிழிகளுடன் 2ஆம் ஆண்டில்

அமரர் நடராசா

ஜெயராசா (விஜயகுமார்)

மலர்வு 25.11.1951

உதிர்வு 29.09.2012

எம்வாழ்வில் வசந்தத்தை வரவழைக்க
வருடங்களைக் கரைத்தவரே - அப்பா
தாய்மாரியின் நவநாளில்
தியாகத்திரியணைந்து
ஆண்டிரண்டானதுவோ
ஆறவில்லை எம் மனது
மறைவு தந்த வலிகள்
மாறாத ரணங்களாய்
இறையமைதி பெற்றிடவே
அனுதினமும் வேண்டுகிறோம்.



# செவ்வாய்க்கிரகத்தில் 'டிராபிக்' சமிக்ஞை



அமெரிக்காவின் நாஸா அனுப்பிய கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப் பில் எடுத்த ஒளிப்படத்தில் வர்ண விளக்குகள் போன்ற போக்குவரத்து சமிக்ஞை (டிராபிக் சிக்னல்) வடிவில் ஒளிப்படத்தை பிரிட்டன் யு.எப்.ஓ. ஆர்வலர் ஜோசப் ஒயிட் என்பவர் பார்த்ததாக பதிவு செய்துள்ளார்.

நாஸாவின் கியூரியாசிட்டி விண்கலமானது தற்போது செவ்வாயின் மேற்பரப்பை ஆராய்வதிலும், ஒளிப்படம் எடுப்பதிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து அவர் கூறுகையில்; நாஸா வெளியிடும் ஒளிப் படங்களை நான் தொடர்ந்து பின்பற்றி வருகின்றேன். நாஸாவின் இணையத்தளத்தைத் தொடர்ந்து பார்த்து வருகின்றேன். அப்போது விசித்திரமான இந்த ஒளிப்படத்தை பார்த்தேன் என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நாஸாவின் பதிலுக்காக காத்திருக்கிறோம் என்று அந்த தகவலில் குறிப்பிட்டுள்ளார்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை.

1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது.

3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும்.

அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும்.

1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | 8 | 3 | | |
| 7 | | | 1 | 6 | 9 | | | 2 |
| 6 | | | | 5 | | | | 1 |
| | 3 | 6 | | | 5 | | 2 | |
| | 2 | | 3 | | 1 | | 4 | |
| | 5 | | 8 | | | 9 | 1 | |
| 3 | | | | 8 | | | | 6 |
| 2 | | | 6 | 1 | 7 | | | 4 |
| | | 4 | 5 | | | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 4 | 1 | 9 | 8 | 6 | 7 | 5 |
| 1 | 9 | 5 | 6 | 4 | 7 | 8 | 3 | 2 |
| 8 | 7 | 6 | 2 | 3 | 5 | 4 | 9 | 1 |
| 9 | 6 | 3 | 7 | 8 | 1 | 2 | 5 | 4 |
| 5 | 2 | 1 | 3 | 6 | 4 | 9 | 8 | 7 |
| 7 | 4 | 8 | 9 | 5 | 2 | 3 | 1 | 6 |
| 3 | 1 | 9 | 4 | 7 | 6 | 5 | 2 | 8 |
| 6 | 5 | 2 | 8 | 1 | 9 | 7 | 4 | 3 |
| 4 | 8 | 7 | 5 | 2 | 3 | 1 | 6 | 9 |

# பாடசாலை மாணவரிடையே நடைபெற்ற விவாதப் பயிற்சி

வவுனியா, செப்.29

வவுனியா தமிழ் மாமன்றம் வவுனியா பாடசாலை மாணவர்களின் விவாத ஆற்றலை மேம்படுத்தும் நோக்கோடு பாடசாலை மாணவர்க ளுக்கான விவாத பயிற்சி பட்டறை ஒன்றை வவுனியா தமிழ் மத்திய மகாவித் தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்தது.

மாணவர்கள் மத்தியில் இயல் துறையை வளர்க்கும் நோக்கோடு, தமிழ் மாமன்றம் வருடாந்தம் ஏற்பாடு செய்த மற்றும் செய்துகொண்டிருக்கும் இவ்விவாத பயிலரங்கானது வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடைபெற்று வருகின்றது. தொடர்ச்சியான பயிற்சிகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியதன் பின்னர், வன்னியின் வாதச்சமர் எனும் போட்டி நிகழ்வையும் தமிழ் மாமன்றம் ஏற்பாடு செய் துள்ளது. (வ)

# நீர்பம்பியைத் திருத்தி தருமாறு கோரிக்கை

வவுனியா, செப்.29

வவுனியா தோணிக்கல், தேக்கவத்தை பகுதிகளில் உள்ள மக்களுக்கான பொதுக் குழாய் பம்பியை திருத்தியமைத்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆலடிப் பகுதியில் உள்ள பொதுக் குழாய் பம்பி நீண்ட காலமாக பழுதடைந்துள்ளது. அதனால் நீரைப் பெற முடியாமல் வேறு பொதுக்கிணற்றுக்கும், பொதுக் குழாய் பம்பியில் நீரைப் பெறவும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் குழாய் பம்பியைத் திருத்தியமைக்க உதவுமாறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-402)


# கேள்வி அறிவித்தல்
## துணுக்காய் பிரதேசசபை, வடமாகாணம்

துணுக்காய் அலுவலக வாகனத்தரிப்பிடம் அமைத்தல் ஒப்பந்த இல: CN/NP/MU/TUPS/W/01

01. துணுக்காய் பிரதேசசபையின் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி துணுக்காய் அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, துணுக்காய் பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காகக் கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்பிற்கான (ICTAD) இக்ராட் பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணப் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் (தொலைபேசி: 024 324 3623) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 20.10.2014 வரை காலை 09.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் எனும் இடத்திலிருந்து 29.09.2014 ஆம் திகதியிலிருந்து 20.10.2014வரை காலை 09.00 மணிக்கும் பிற்பகல் 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1500/= செலுத்தி பெற்றக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் எனும் முகவரிக்கு 20.10.2014ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்நிலையில் திறக்கப்படும்.

09. கேள்விகளானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்தேழு - 05.01.2015) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (& Gh மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| CN/NP/MU/TUPS/W/01 | துணுக்காய் அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | 1.11 | 3 மாதம் | C7 அல்லது அதற்கு மேற்பட்டது | 12,000.00 | 02.02.2015 |

11. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 10.10.2014ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு துணுக்காய் பிரதேசசபைக் கட்டடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்,
வடமாகாணம்.

29.09.2014

(லி13976)
(12.3.6)



# ஈர விழிகளுடன் 5ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் கந்தசாமி
பிரபாகரன் (பிரபா)

அன்னை மடியில் 31.10.1978 — ஆண்டவன் அடியில் 23.09.2009

திதி: பஞ்சமி

நித்திய தூக்கத்தில் உன் விழிகள்
தூங்காத கண்கள் இங்கே உன் நினைவில்
ஊமையாய் அழுகுதையா தந்தை உள்ளம்
ஏங்கித் தவிக்குதையா தாய்மனது
ஒரு பூங்கொத்தில் பூத்துக் குலுங்கிய நாம் இன்று
வாசமே இல்லாத பூங்கொத்தாய்....
துடியாய் துடிக்கும் சகோதரர்கள் பிள்ளைகள்
அருவுருக் கொண்டே காலனவன் உயிர்குடிக்க
அரனடி சேர்ந்ததை எண்ணியே
துடித்து துவள்கின்றோம் சோகத்தில்
நேற்று பார்த்த முகம் நேற்று கேட்ட குரல்
காற்றில் ஆடிவரும் ஆடையென
மாறி மாறி எம்மனதில் அலைமோத
உன் பிள்ளைகளுக்கு அப்பாவாய்
மறுபிறவியில் வருவாயா...

என்றும் உன் நினைவில்
அப்பா, அம்மா சகோதரர்கள்.

பிள்ளைகள்: தனுசன், தனுசியா,
குடமியன், வரணி.



# மரண அறிவித்தல்



## திருமதி குணவதி பொன்னுத்துரை

யா/அரியாலையைச் சேர்ந்த திருமதி குணவதி பொன்னுத்துரை 27.09.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தோழர் என்று அன்பாக அழைக்கப்பட்ட ஆறுமுகம் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், மனோகரன் (பிரான்ஸ்), சாரதாதேவி (பிரான்ஸ்), றஞ்சனாதேவி (ப.நோ.கூ.ச.முன்னாள் இலிகிதர்), காலஞ்சென்ற நனோராஜன் (கனடா), தர்மேந்திரன் (பிரான்ஸ்), சறோஜாதேவி, ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவளம், திலகபாலா (பிரான்ஸ்), அன்ரனி (முன்னாள் முகாமையாளர், ப.நோ.கூ.ச), சுமலாதேவி (கனடா), அனுராதா (பிரான்ஸ்), திருஞானம் (பிரான்ஸ்), திருமதி ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திலகவதி, மோகனாம்பிகை, யோகம்மா, காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், இராசலிங்கம் மற்றும் ஜெயலட்சுமி (லண்டன்), செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், றஜிதா, சுஜிதா, பவிதா, கவிதா, அனிதா, லக்ஷிகா, சுபாஜினி, சசிகாந், றஜத், டக்சி, ருஷானி, ஹென்றியேற்றா, பிறட்ரிக் யூட், சார்ள்ஸ், இக்னேசியஸ், கிறிஸ்ரா, றதன், சுஜாஜினி, தினேஷ், தர்மினி, கிரிஷாந், சதீஷ்காந், அனுஷாந், துஸித்ரா, கனிஸ்ரா, துஷ்யந்தன், மனோராஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.4.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.125/48, பாலைவளவு,
A.V.றோட், அரியாலை,
யாழ்ப்பாணம்.

(32677)
(12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
TP:077 628 1421

# சீறியது எரிமலை; 32 பேர் மாயம்



டோக்கியோ,செப்.29
ஜப்பானின் மத்திய பகுதியிலுள்ள ஆன்டேக் எரிமலை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திடீரென சீற்ற மடைந்ததில் மலையேற்ற வீரர்கள் 40 பேர் காயமடைந்தனர். ஒருவர் உயிரிழந்தார். 32 பேரைக் காணவில்லை.
இதுகுறித்து நாகானோ ஆட்சிப் பகுதியைச் சேர்ந்த பேரிடர் மேலாண்மை அதிகாரி ஹனாமுரா கூறுகையில்;
எரிமலைச் சீற்றத்தில் காயமடைந்த அனைவரும், 3,067 மீற்றர் மலையிலிருந்து இறங்க முடியாமல் மலை விடுதிகளில் தங்கியிருந்தனர். அவர்களில் 32 பேர் கடுமையாகக் காயமடைந்துள்ளனர் என்று தெரிவித்தார்.
எரிமலைச் சீற்றம் ஏற்பட்ட பகுதியில் ஹெலிகொப்டரில் செல்வது ஆபத்து என்பதால், பொலிஸார், தீயணைப்புப் படையினர், இராணுவ மீட்புக் குழுவினர் ஆகியோர் அந்தப் பகுதிக்கு கால்நடையாகச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தலைநகர் டோக்கியோவுக்கு 210 கி.மீ. தொலைவில் ஆன்டேக் எரிமலை அமைந்துள்ளது. இங்கு கடந்த 1979 ஆம் ஆண்டுதான் பெரியளவில் சீற்றம் ஏற்பட்டது. (வ)

# தாத்தாவானார் கிளிண்டன்



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனின் மகள் செல்சி அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்துள்ளார். பில் கிளிண்டன், வெளியுறவுத் துறை செயலாளர் ஹில்லாரி தம்பதியின் ஒரே மகள் செல்சி(வயது 34). நிறை மாத கர்ப்பிணியாக இருந்த அவர் மருத்துவமனைக்கு பிரசவத்துக்காக செல்ல அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா தனது பாதுகாப்பு வாகனங்களை அளித்தார். இந்தநிலையில் செல்சி அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.
இது குறித்து அவர் டுவிட்டரில் கூறியிருப்பதாவது:- எங்களுக்கு சார்லட் கிளிண்டன் மெஸ்வின்ஸ்கி என்ற மகள் பிறந்துள்ளதை கொண்டாடி வருகிறோம் - என்றார். (வ)

# மாற்றம் தேவை

## ஐ.நா. பாதுகாப்பு சபை தொடர்பில் ஜி4 நாடுகள் வலியுறுத்தல்

நியூயோர்க், செப்.29
ஐ.நா. பாதுகாப்பு சபையில் உடனடியாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா, பிரேஸில், ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான ஜி4 வலியுறுத்தியுள்ளது.
ஐ.நா. பொது சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு ஜி4 கூட்ட மைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை நியூயோர்க்கில் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார். பிரேஸில் வெளியுறவு அமைச்சர் லூயிஸ் ஆல்பர்டோ பிகர்டியோ மசாடோ, ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் பிராங்க் வால்டர் ஸ்டெயின் மியர் பெடரல், ஜப்பான் வெளியுறவு அமைச்சர் புமியோ கிஷ்கிதா ஆகியோருடன் சுஷ்மா சுவராஜ் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள 2005 ஆம் ஆண்டு மாநாட்டில் ஒருமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டதை நான்கு நாடுகளின் அமைச்சர்களும் சுட்டிக் காட்டினர்.
அந்தக் கூட்டத்துக்குப் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:
ஐ.நா. பாதுகாப்புச் சபையை விரிவாக்கம் செய்து ஏற்கனவே வரையறுக்கப்பட்ட சீர்திருத்தங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். 2015 ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் 70 ஆம் ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. அதற்கு முன்பாக அனைத்து சீர்திருத்த நடவடிக்கைகளையும் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (வ)

# சக்திவாய்ந்த ஏவுகணையை சோதித்தது பாகிஸ்தான்!



இஸ்லாமபாத், செப்.29
பாகிஸ்தானில் ஹத்ப் 9 என்ற ஏவுகணையை நேற்று முன்தினம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. இந்த ஏவுகணை தரையிலிருந்து செலுத்தப்பட்டு, 60 கிலோ மீற்றர் தூரத்தில் தரையில் உள்ள இலக்கை, துல்லியமாக தாக்கும் சக்தி கொண்டது.
இதன்மூலம், இந்திய பகுதிகளையும் பாகிஸ்தானால் தாக்க முடியும். ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதற்காக, விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களுக்கு, இராணுவஜெனரல்ரஷாத்மஹ்மூத், வாழ்த்துத் தெரிவித்தார். இந்த ஏவுகணை, பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றும் என்று அவர் மேலும் கூறினார். (வ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
குமாரவேலு இரத்தினாபரணம்



மண்ணில்
20.04.1932

விண்ணில்
30.08.2014

கடந்த 30.08.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் குமாரவேலு இரத்தினாபரணம் அவர்களின் வீட்டுக் கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (29.09.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

# செய்தியாளர்கள் கொலை சூத்திரதாரி இனங்காணல்

## எப்.பி.ஐ. தகவல்

வொஷிங்டன், செப்.29
அமெரிக்கப் பத்திரிகையாளர் உட்பட மூன்று பேரைக் கொல்லும் ஐ.எஸ். அமைப்பின் காணொலிகளில் உள்ள தீவிரவாதி அடையாளம் காணப்பட்டிருப்பதாக அமெரிக்க பொலிஸ் துறையான எப்.பி.ஐ. தகவல் தெரிவித்துள்ளது. இதுகுறித்து எப். பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் கோமி கூறியதாவது:
அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் ஜேம்ஸ் ஃபோலி, ஸ்டீவன் ஸாட்லாஃப் மற்றும் பிரிட்டன் நாட்டின் மீட்புப் பணியாளர் டேவிட் ஹெயின்ஸ் ஆகியோர் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.
அவர்கள் கொல்லப்படுவதை அந்த அமைப்பு காணொலி எடுத்து சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்பியது. இந்த காணொலிகளில் முகமூடி அணிந்து கொண்டு, கறுப்பு நிற உடையில், கையில் கத்தியுடன் உள்ள தீவிரவாதி அடையாளம் காணப்பட்டுள்ளான்.
அந்தத் தீவிரவாதி தென்பகுதி பிராந்திய ஆங்கில உச்சரிப்புடன் பேசுகிறான். அவன் இடது கையை அதிகமாகப் பயன்படுத்தும் நபராக இருக்க வேண்டும். காணொலிகளைக் கூர்மையாக ஆராய்ந்ததில் அவனுடைய சராசரி உயரம் மற்றும் எடை கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். அந்தத் தீவிரவாதி அடையாளம் காணப்பட்டிருந்தாலும் அவனுடைய பெயரையோ அல்லது நாட்டையோ குறிப்பிட ஜேம்ஸ்கோமி மறுத்து விட்டார். (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னத்தம்பி அப்புலிங்கம்



பிறப்பு
02.10.1937

இறப்பு
09.10.2013

திதி: 29.09.2014

பக்தியுடன் பாசமூட்டி பார் போற்ற வாழவைத்த
உத்தமரே! ஒளி விளக்கே! குருவே!
எங்கள் தந்தையே! எத்திசையில் நாம் வாழ்ந்தாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆனந்தன் வைரவரை வணங்குகின்றோம்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியராகக்
கடமையாற்றிய
திருமதி பாமதி அமிர்தகுமாரின்
திடீர் மறைவையொட்டி
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத்தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், அராலி.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
முன்னாள் ஆசிரியரான
திருமதி
பாமதி அமிர்தகுமார்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்

திருமதி பாமதி அமிர்தகுமார்
[ஆசிரியை-வட்டு மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி ம.வி]



அராலி மத்தி, வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாமதி அமிர்தகுமார் நேற்று (28.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் இராஜசுந்தரம் காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இரட்ணசிங்கம் மற்றும் தவமணி தம்பதியரின் மருமகளும், அமிர்தகுமாரின் (ஊழியர், ஆசிரியர் வளநிலையம் மானிப்பாய்) மனைவியும், சசிகலா (கனடா), சாமலை (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூநாவடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

# இறுதித் தீர்ப்பல்ல

## பா.ஜ.க. கருத்து

டில்லி, செப்.29

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா மேல்முறையீடு செய்யவாய்ப்புள்ளது. தற்போது வெளியானது ஒன்றும் இறுதித் தீர்ப்பு அல்ல என்று பா.ஜ.க. கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பா.ஜ.கட்சியின் துணைத் தலைவர் முக்தர் அப்பாஸ் நக்வி கூறியதாவது:

"இது ஒன்றும் இறுதித்தீர்ப்பு அல்ல. நீதித்துறை சார்ந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதி தான் இது. தனக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான வாய்ப்பு ஜெயலலிதாவுக்கு உள்ளது. இது ஒரு உணர்வுபூர்வமான விடயமாகும். ஜெயலலிதாவின் அரசியல் எதிரிகள், இந்த சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பது துரதிர்ஷடவசமானது என்றார். மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறும் போது, தீர்ப்பின் முழு விவரத்தையும் படித்துப் பார்க்கவில்லை. இந்தநிலையில், நான் கருத்து எதையும் தெரிவிக்க விரும்பவில்லை - என்றார். (வ)

# எனது அடுத்த இலக்கு சோனியா, ராகுல்காந்தி

## சுப்பிரமணியன் சுவாமி சூளுரை



சென்னை, செப்.29

ஜெயலலிதாவுக்கு அடுத்த படியாக காங்கிரஸ் கட்சியின் சோனியா மற்றும் ராகுல் காந்தியை சிறைக்கு அனுப்புவதே தனது வேலை என்று சூளுரைத்துள்ளார் சுப்பிரமணியன் சுவாமி.

ஜெயலலிதாவுக்கு நீதிமன்றம் அளித்த தண்டனை அபாரமானது என்று வர்ணித்துள்ள சுப்பிரமணியன் சுவாமி, அடுத்து சோனியா, ராகுல் காந்தியை சிறைக்குள் தள்ளுவதே தனது வேலை என்று கூறியுள்ளார்.

1996ஆம் ஆண்டே சொத்துக் குவிப்பு வழக்கை ஜெயலலிதா மீது பதிவு செய்த சுப்பிரமணியன் சுவாமி, இது குறித்து கூறுகையில்:

"அவர் ஊழல்வாதி என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் சிறப்பு நீதிமன்ற நீதிபதியும் நேர்மையுடன் நிமிர்ந்து நின்று தைரியமாக சரியான தீர்ப்பை வழங்கியுள்ளார் என்றால் ஓர் இந்தியனாக எனக்கு பெருமையாக இருக்கிறது.

மேலும் ரூ.100 கோடி அபராதம் எல்லாம் அவருக்கு பெரிய விடயமில்லை என்று கேலியும் செய்தார்.

'நேஷனல் ஹெரால்ட்' பத்திரிகை விவகாரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா, மற்றும் ராகுல் காந்திதான் எனது அடுத்த இலக்கு. முதலில் ஜெயலலிதா பற்றியே பரிசீலித்தேன். இப்போது ராகுல், சோனியாவை கிறிஸ்மஸ் தினத்துக்குள் உள்ளே தள்ள முயற்சிகள் மேற்கொள்வேன்" -என்றார். (வ)

# பாகிஸ்தானுடன் பேச்சு இல்லை

## தீவிரவாத நிழல் பின்னணியில்




நியூயோர்க், செப்.29

தீவிரவாத நிழல் பின்னணியில் பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முடியாது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அரச முறைப் பயணமாக அவர் அமெரிக்கா சென்றுள்ளார். நேற்று முன்தினம் அவர் ஐ.நா. சபை கூட்டத்தில் இந்தியில் பேசினார். அப்போது அவர் மேலும் கூறியதாவது:

ஐ.நா. சபை கூட்டத்தில், பிரதமராக முதல் முறையாக உரையாடுவதை மிகப் பெருமையாகக் கருதுகிறேன். இந்திய மக்கள் உலகை ஒரு குடும்பமாகப் பார்க்கின்றனர். வேற்றுமையில் ஒற்றுமை என்பது எங்களது நம்பிக்கை. அதில் நாம் சிறப்பாகவும் இருக்கிறோம். அண்டை நாடுகளுடன் நாங்கள் சிறப்பான உறவைத்தான் எதிர் பார்க்கிறோம்.

இதற்காகத்தான் காஷ்மீரில் வெள்ளப் பாதிப்பின்போது, பாகிஸ்தான் ஆக்ரமிப்பு காஷ்மீருக்கும் உதவிக்கரம் நீட்டினோம். அமைதியான சூழ்நிலையில், பாகிஸ் தானுடன் பரஸ்பர பேச்சு நடத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால், தீவிரவாதம் என்ற நிழலுடன் பேச்சு நடத்த முடியாது. பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை பாகிஸ்தான் தான் ஏற்படுத்த வேண்டும். காஷ்மீர் பிரச்சினை, ஐ.நா. சபையில் எழுப்பக்கூடிய விவகாரம் அல்ல. அது இரு தரப்பினாலும் பேசி தீர்க்கப்பட வேண்டிய விடயம். தீவிரவாதம் தற்போது புதிய வடிவம், புதிய பெயரை கொண்டுள்ளது. சிறியதோ, பெரியதோ, வடக்கோ தெற்கோ, கிழக்கோ மேற்கோ, அதன் மிரட்டலில் இருந்து எந்த நாடும் தப்பவில்லை. இதனால் அதற்கு எதிராக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம்.

தற்போதைய சூழ்நிலையில், ஐ.நா. பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்த வேண்டியது அவசியம். ஐ.நா. அமைப்பை தவிர, பல்வேறு ஜி அமைப்புகளை நாம் ஆரம்பிக்க வேண்டும். வாழ்க்கை முறையை மாற்றவும், ஒரு முகத்தன்மையையும் ஏற்படுத்தவும் யோகா மிகச் சிறந்த பயிற்சியாகும். இதற்காக சர்வதேச யோகா தினத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறு நரேந்திர மோடி பேசினார்.

மேடிசன் சதுக்கத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் சுமார் 20 ஆயிரம் அமெரிக்க வாழ் இந்தியர்களை பிரதமர் நரேந் திர மோடி சந்தித்துப் பேசு கிறார். இந்த நிகழ்ச்சியில், நியூயோர்க் ஆளுநர் உட்பட 46 அமெரிக்க செனட் உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள். சுமார் 2600 முக்கிய பிரமுகர்களுக்கு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (வ)



அரசு பயணமாக அமெரிக்கா சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நியூயோர்க் நகரில் 2011 ஆம் ஆண்டு பயங்கரவாதிகளால் இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். அங்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய மோடி, இரட்டைக் கோபுரத் தாக்குதல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்துக்கும் சென்று பார்வையிட்டார். (வ)

# தமிழ்நாட்டுக்கு தலைகுனிவு

## தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் கூறுகிறார்



சென்னை, செப்.29

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா முதல்வர் பதவியில் இருக்கும்போதே தண்டிக்கப்பட்டதால் தமிழகத்திற்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளதாக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"உப்பைத் தின்றால் தண்ணீர் குடிக்க வேண்டும், தவறு செய்தால் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும்" என்ற இயற்கையின் நியதியை யாராலும் மாற்ற முடியாது. இதற்கு தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதாவும் விதி விலக்கல்ல.

சுமார் 18 வருடங்கள் நடைபெற்ற இந்த வழக்கு ஒரு வழியாக முடிவுக்கு வந்து ஜெயலலிதாவுக்குத் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது.

மேலும், அ.தி.மு.க. பொதுச் செயலர்ளர் ஜெயலலிதா குற்றவாளி என்றும் நான்கு ஆண்டு சிறைத் தண்டனையோடு, 100 கோடி ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு அறிவிக்கப்பட்டதிலிருந்து தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் அ.தி.மு.கவினர் அராஜகத்திலும், வன்முறையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கடைகள், தொழில் நிறுவனங்களை மூடச் சொல்லி அடித்து நொருக்குவதும், பஸ்களைத் தீ வைத்து எரிப்பதும், சாலைகளில் செல்கின்ற பஸ், லொறி, கார், போன்றவாகனங்களை கல் வீசி தாக்குவதும், சாலை மறியல் செய்வதும் என வன்முறையில் ஈடுபட்டு தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கை சீர்குலைப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இந்தச் சம்பவங்கள் நடைபெறும்போது பொலிஸார் கட்டுப்படுத்த முடியாமல் திணறுகின்றனர். ஆளும் கட்சியினரே வன்முறைச் செயலில் ஈடுபட்டுள்ளதால் மத்திய அரசின் பாதுகாப்புப் படையின் மூலம் தமிழகத்துக்குப் பாதுகாப்பு வழங்க நடவ்டிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழக பொலிஸ் இது போன்ற வன்முறை சம்பவங்களை, இரும்புக்கரம் கொண்டு அடக்கி தமிழகத்தில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தரப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பு தவறு செய்பவர்களுக்குப் பாடமாக இருக்கும். ஆட்சி அதிகாரம் கைகளில் இருக்கிறது என ஆட்டம் போடும் ஆட்சியாளர்கள் இதைப் பார்த்த பிறகாவது திருந்திட வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மக்களுக்காக ஆட்சி செய்ய வேண்டும் மாறாக லஞ்சம், ஊழல், முறைகேடு, அராஜகம் என செய்து ஆட்சி நடத்தினால் தண்டனை நிச்சயம் என்பதை இந்தத்தீர்ப்பு நிரூபித்துள்ளது-என்று கூறியுள்ளார். (வ)

# ஜெயலலிதாவுக்காகத் தீக்குளித்த மூவரில் ஒருவர் சாவு

சென்னை, செப்.29

ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்பை ஒட்டி தமிழகம் முழுதும் அ.தி.மு.க. தொண்டர்கள் 3 பேர் தீக்குளித்தனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 4 பேர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் நான்கு ஆண்டு சிறைத் தண்டனையும் ரூ.100 கோடி அபராதமும் விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பைக் கேட்ட அ.தி.மு.க. தொண்டர்கள் தீக்குளித்தனர். இதில் ஒருவர் 60 சதவீத தீக் காயத்துடன் ஆபத்தான முறையில் சிகிச்சை பெற்று வருகிறார். விருகம்பாக்கம் ஐஸ்வர்யா நகரைச் சேர்ந்தவர் வெங்கடேசன் (வயது -45) அவருக்கு திருமணமாகி லட்சுமி என்ற மனைவியும் அமுதா, அன்பரசி, தேவி என மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர்.

தீர்ப்புக் குறித்து கேள்விப்பட்டவுடன் மனமுடைந்து மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்து கொண்டார். உடல் முழுதும் தீப் பற்றியதைப் பார்த்து அயலில் உள்ளவர்கள் ஓடிவந்து தீயை அணைத்தனர். உடனடியாக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் வெங்கடேசனை அனுமதித்தனர். உடலில் 60 சதவிகித தீக்காயம் பட்ட அவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். அதேபோல் அ.தி.மு.க. தொண்டரான ஓட்டோ சாரதியான ரவி குமார் (வயது 30) என்பவர் தீர்ப்பு குறித்து கேள்விப்பட்டு தீக்குளிக்க முயற்சி செய்தார். ஆனால் அருகிலிருந்தவர்கள் உடனடியாக அவரைத் தடுத்து விட டனர். வண்டு ரவி (வயது-45) என்ற ஓட்டோச் சாரதி பெற்றோலை உடலின் மீது ஊற்றித் தீக்குளிக்க முயன்றார். போயஸ் கார்டனில் பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸார் உடனடியாக வண்டு ரவியை மீட்டு அவரிடம் இருந்த பெற்றோலைப் பறிமுதல் செய்தனர். இது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்று அவரை எச்சரித்து அனுப்பி வைத்தனர். இந்த சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (வ)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்தில் நடந்துள்ளது. (ற)

## கட்சி தாவும் நடவடிக்கை தடுக்கப்பட வேண்டும்

### அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவிப்பு



கொழும்பு, செப்.29

கட்சித் தாவும் நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா. கட்சி தாவுவதால் வாக்காளர்கள் ஏமாற்றப்படும் துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது. பல்வேறு சலுகைகளுக்காக அரசியல்வாதிகள் கட்சி தாவி வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"கட்சி தாவும் அரசியல்வாதிகளின் பதவிகள் பறிக்கப்பட வேண்டும், தொகுதிவாரி மற்றும் விருப்பத்தெரிவு அடிப்படையிலான தேர்தல் முறைமையின் மூலம் கட்சித் தாவல்களை தடுக்க முடியும். சிறுபான்மை கட்சிகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

கட்சி மாற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் விரும்பினால் உடனடியாக இடைத்தேர்தல் நடத்தி மக்களின் கருத்தை அறிந்து கொள்ளக் கூடிய முறைமை அறிமுகம் செய்யப்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கும் பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் வேறு கட்சிகளிலிருந்து இடைநடுவில் ஆளும் கட்சிக்கு தாவியோரே. (ற)

## பாலித ரங்கே எம்.பி. கைது

கொழும்பு, செப்.29

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கருவலகஸ்வெவ பிரதேச சபைத் தலைவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் அத்துமீறி பிரவேசித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற)

# எதிர்க்கத் தயார் தேர்தலில் மஹிந்தவை

### ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, செப்.29

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடும் சவாலை எதிர்கொள்வதற்குத் தாம் தயார் என்று கூறியுள்ளார் ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸநாயக்க.

"எனது கட்சியோ அல்லது மக்களோ இதற்கான அழைப்பை விடுத்தால் அதனை ஏற்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

"எந்த ஆட்சியாளரையும் 18 வருடங்கள் தொடர்ந்து ஆட்சி நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது. ராஜபக்ஷவுக்கும் அதற்கான அனுமதியை வழங்கக் கூடாது, நாட்டை ஆள்வதற்கு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் ஒரு ஆட்சியாளருக்கு 12 வருடங்கள் போதும்.

இதன்காரணமாக அடுத்த தேர்தலில் அவரைக் கவிழ்பதற்கான அனைத்து ஆயத்தங்களையும் தயார் படுத்துகின்றோம்.

பொதுவேட்பாளர் குறித்த பேச்சு இன்னமும் தொடர்கின்றன. அது இன்னமும் முடிந்து விடவில்லை. அதனைச் சாத்தியமாக்குவதற்காக எங்களது தரப்பிலிருந்து சாத்தியமான அனைத்தையும் செய்கின்றோம்"- என்று குறிப்பிட்டுள்ளார். (ற)



## ரணில் இன்று பிரிட்டன் பயணம்



கொழும்பு, செப்.29

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இன்று பிரிட்டன் பயணமாகவுள்ளார். ஒரு வார காலத்துக்கு அவர் அங்கு தங்கியிருப்பார் என்று அந்தக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டனில் பல முக்கிய அரசியல்வாதிகளுடனும், பிரிட்டன் வாழ் இலங்கையர்களுடனும் சந்திப்புகளை ரணில் நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட உள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

## தமிழ் அரசியல்வாதிகள் ஐ.நாவில் சாட்சியமாம்

### சிங்கள மொழி ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, செப்.29

இலங்கைக்கு எதிராக சாட்சியமளிக்கும் நோக்கில் தமிழக அரசியல்வாதிகள் ஜெனிவாவுக்குப் பயணம் செய்துள்ளனர் என்று சிங்கள மொழி வார இறுதிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் விசாரணைகளில் சாட்சிமளிக்கும் நோக்கில் தமிழக அரசியல்வாதிகள் ஜெனிவா சென்றுள்ளனர். தமிழக அரசியல்வாதிகள் மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலரும் ஜெனிவாவுக்கு சென்று சாட்சிமளித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழக அரசியல்வாதிகளின் ஜெனிவா பயணத்துக்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அனுசரணை வழங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (ற)

## தோல்விக்கு பொறுப்பேற்று பதவி விலகுவதற்கு தயார்

### டிலான் பெரேரா கூறுகின்றார்

கொழும்பு, செப்.29

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து விலகத் தயார் என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது ஆளும் கட்சி ஹாலியெல மற்றும் பதுளை தேர்தல் தொகுதிகளில் தோல்வியடைந்திருந்தது. ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்களான டிலான் பெரேரா மற்றும் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்த இரண்டு பகுதிகளினதும் தொகுதி அமைப்பாளர்களாக கடமையாற்றுகின்றனர்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சியை இவ்வாறான தேர்தல் தோல்விகள் குறிப்பதாகவும் அதனால் தொகுதி அமைப்பாளர் பதவிகளிலிருந்து விலக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் சிங்கள மொழி ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியபோதே டிலான் பெரேரா மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

"தொகுதி அமைப்பாளர் பதவியைத் துறக்கத் தயார். தேர்தல் தோல்விக்காக ஜனாதிபதி திட்டவில்லை.

தோல்வியடைந்த தொகுதிகளின் அமைப்பாளர்கள் பதவி விலக்கப்பட வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்து. "- என்று தெரிவித்துள்ளார். (ற)

## இலங்கைக்கான ஆதரவில் சர்வதேச ரீதியில் பின்னடைவு

### சிரேஷ்ட ராஜதந்திரியான தயான் ஜயதிலக்க தெரிவிப்பு



கொழும்பு, செப்.29

சர்வதேச அரங்கில் இலங்கைக்கான ஆதரவில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று சிரேஷ்ட ராஜதந்திரியான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஆயினும், சர்வதேச ரீதியான விசாரணைகள் அவசியமற்றது எனத் தெரிவித்து இலங்கை உள்ளிட்ட 22 நாடுகள் கூட்டாக இணைந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளன. எகிப்து தலைமையிலான நாடுகள் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன. இவ்வாறு கூட்டாக இணைந்து இலங்கைக்கு ஆதரவாக அறிக்கை வெளியிடப்பட்டமைவரவேற்கப்பட வேண்டியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 22 நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளது என்று மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் பிழையானது. இதனை ஒரு பிழையான வழி நடத்தலாகவே கருதுகின்றேன். ஏனெனில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 வாக்களிக்கும் உரிமையுடைய நாடுகளில் ஏழு நாடுகளின் ஆதரவு மட்டுமே கிடைத் துள்ளது. இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது 12 வாக்குகள் கிடைத்தன. எனினும், ஆறு மாத கால இடைவெளியில், தற்போது ஏழு நாடுகளின் ஆதரவே கிடைத்துள்ளது "- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ரணில் மற்றும் சஜித் இணைவு விருப்பமில்லாத திருமணத்தைப் போன்றது

### விமர்சிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, செப்.29

ஐக்கிய தேசியக் கட்சியில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஒன்றுபட்டமை, விருப்பமில்லாமல் செய்து வைத்த திருமணத்தைப் போன்றது என்று விமர்சித்துள்ளது ஜே.வி.பி.

இந்தத் திருமணத்தில் கலந்து கொண்டவர்களும் கூட விருப்பமின்றியே சமுகமளித்திருந்தனர் என்றும் அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

"ரணிலின் நோக்கம் வேறு. சஜித் பிரேமதாஸவின் நோக்கம் வேறு. எனினும், சஜித்தை பயன்படுத்தி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு முன்னுக்குச் செல்ல வேண்டும் என ரணில் விரும்புகின்றார். ரணிலை எப்படியாவது தோல்வியடையச் செய்து அதிகாரத்தைக் கையில் எடுப்பது சஜித்தின் முனைப்பாகவுள்ளது. இருவருடைய நோக்கங்களும் நேரெதிரானவை. இதனால், தலைவர்கள் கைபிடிப்பதனால் மாத்திரம் கட்சிக்குள் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

எமது பிரச்சினை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள சமாதானமல்ல. ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கும் பொருளாதாரக் கொள்கையை தற்போதைய ராஜபக்ஷ அரசு முன்னெடுத்து வருகின்றது. அதனால், அரசை வெல்லும் பிரச்சினைக்கு அவர்களால் தீர்வு வழங்க முடியும் என நாம் கருதவில்லை.

சிறந்த மாற்று பொருளாதார கொள்கை இல்லாதவர்களுடன் கூட்டுச் சேர்வது சாத்தியமில்லை"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஏமாற்றினாரா லாரன்ஸ்?



நடன இயக்குநராக இருந்து இயக்குநராக மாறியவர் ராகவா லாரன்ஸ். நாகார்ஜுனா, ஜோதிகா நடித்த 'மாஸ்' திரைப்படம் மூலம் தெலுங்கில் இயக்குநராக அறிமுகமானார். அந்தப் படம் பெரும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அடுத்தடுத்து படங்களை இயக்கும் வாய்ப்பைப் பெற்றார். தமிழில் 'முனி, முனி 2 - காஞ்சனா' ஆகிய படங்களை இயக்கினார். தற்போது 'முனி 3 - கங்கா' படத்தை தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் இயக்கி நாயகனாகவும் நடித்து வருகிறார்.

தெலுங்கில் பிரபாஸ், தமன்னா நடித்து 2012 இல் வெளிவந்த 'ரிபெல்' படம் படுதோல்வியைச் சந்தித்ததால் லாரன்ஸ் கடும் நெருக்கடிக்கு உள்ளானார். அந்தப் படத்தை தயாரித்த பகவான், புல்லா ராவ் ஆகியோருடன் ராகவா லாரன்ஸ் படத்தை 23 கோடிக்குள் முடித்துக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துள்ளார். ஆனால் படத்தின் செலவு 28 கோடி ரூபாய் வரை செலவாகி உள்ளது.


அதனால் மேற்கொண்டு செலவான 5 கோடி ரூபாயைத் திருப்பித் தர வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் கேட்டுள்ளார்கள். ஆனால், அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்க ராகவா லாரன்ஸ் தயங்கியுள்ளார். தொடர்ந்து நடந்த பேச்சுக்களும் பயனளிக்காமல் போகவே ராகவா லாரன்ஸ் மற்றும் அவருடைய உதவியாளர் ராஜ்குமார் ஆகியோர் மீது ஹைதராபாத்தில் உள்ள ஜூபிளி ஹில்ஸ் பொலிஸ் நிலையத்தில் தயாரிப்பாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இதையடுத்து ராகவா லாரன்ஸ் கைது செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## இதெல்லாம் ரூம் போட்டு யோசிப்பாங்களோ?

# கழிவுகளில் உருவான கலைப்படைப்பு














# அடுத்த அனுமானா?

இந்தியாவில், பிறந்து ஐந்து நாள்களேயான சிசுவின் இடுப்புப் பகுதியில் 12 சென்றிமீற்றர் நீளமான வால் போன்ற அங்கமொன்று காணப்பட்டுள்ளது. இதனை வைத்தியர்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர். இச்சிசு கருவில் உருவாகும்போது இரட்டைக் கருவை கொண்டிருந்துள்ளது.

இருந்த போதிலும் குறித்த சிசுவின் உடன்பிறப்பு உடலமைப்பு ரீதியாக முழுமையாக வளர்ச்சியடையாததால் அதனது ஒரு பகுதி இந்த சிசுவின் உடலில் வால் போன்ற அமைப்பில் ஒட்டிகொண்டுள்ளது.

இவ்வால் சுமார் நான்கு மணித்தியால சத்திரசிகிச்சையின் பின்னர் அகற்றப்பட்டுள்ளது. "எனது நான்காவது குழந்தை இவ்வாறு பிறந்ததையிட்டு நான் மிகவும் கவலையடைகின்றேன். இந்தவால் போன்ற அங்கத்தை அகற்றாமல் விட்டுவிட்டால் இவரை அனைவரும் வித்தியாசமாகப் பார்ப்பார்கள். பாடசாலைகளில் எனது குழந்தை வேறு விதமாக நடத்தப்படுவதை நான் விரும்பவில்லை" என்று சிசுவின் தாய் தெரிவித்துள்ளார்.



## இங்கேயும்

# நிர்வாணப் பெண்

கோல்ப் விளையாடும்போது பந்தை 'ஸ்டாண்ட்' ஒன்றில் வைத்து அதை கோல்ப் துடுப்பால் அடிப்பதை நாம் பார்த்திருக்கின்றோம். இந்த கோல்ப் பந்து 'ஸ்டாண்ட்' விதவிதமான வடிவங்களில் இருக்கும். அப்படி ஒரு வித்தியாசமான வடிவத்துக்கு பெண்கள் அமைப்பு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஏனெனில் கோல்ப் பந்தின் 'ஸ்டாண்ட்' ஒரு பெண்ணின் நிர்வாண உடலமைப்பை போன்ற வடிவத்தில் உள்ளது என்பதால்தான் இந்த எதிர்ப்பு.

நிர்வாணப் பெண்ணின் மேல் கோல்ப் பந்தை வைத்து அடிப்பது அருவருப்பாகவும், அதே நேரத்தில் பெண்ணின் தலையை அடித்து வீழ்த்துவது போன்றும் இருப்பதால் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக இங்கிலாந்து நாட்டில் உள்ள பெண்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.



## ரிலாக்ஸா வாசியுங்க

**பேரன் :** தாத்தா தூக்கம் வருகுதில்லை. ஏதாவது கதைத்துக் கொண்டிருங்களேன்.

**தாத்தா :** சரிடா, என்ன கதைக்கலாம் ?

**பேரன் :** நாம் எப்போதும் 5 பேர் தான் இருப்போமா ? எங்கள் வீட்டில், நான் நீங்கள், அம்மா, அப்பா, தங்கச்சி

**தாத்தா :** உனக்கு கல்யாணம் முடிஞ்சதும் 6 பேர் ஆகிவிடுவோம்.

**பேரன் :** அப்ப தங்கச்சி கல்யாணம் செய்து போயிடுவாள். அப்பவும் நாம் 5 பேர் தானே.

**தாத்தா :** உனக்கு குழந்தை பிறக்கும். அப்போது 6 பேர் ஆகிவிடுவோம்.

**பேரன் :** அப்ப நீ செத்துவிடுவியே தாத்தா. அப்பவும் நாங்க 5 பேர்தானே

**தாத்தா :** உருப்படாதவனே, போய் ஒழுங்கா நித்திரையைக் கொள்!

## இப்படியும்

# நடிகை

தேவதை, அரங்கேற்றம் தொடர்களில் நடித்து வருபவர் சஞ்சனா. தற்போது இளைஞர்கள் சிலர் உருவாக்கிய ஒரு விழிப்புணர்வு குறும்படத்தில் சம்பளம் வாங்காமல் நடித்துக் கொடுத்திருக்கிறார்.

இதுபற்றி அவர் கூறியதாவது: தேவதை தொடரில் மட்டும் நடித்தபோது நிறைய நேரம் கிடைத்தது. அதனால் நடித்து முடித்து விட்டு பெங்களூருக்கு ஓடிவிடுவேன். இப்போது அரங்கேற்றத்திலும் நடிப்பதால் சென்னையிலேயே தங்கி இருக்கிறேன்.

இதற்கிடையில் எனது நண்பர்கள் சிலர் சர்வதேச குறும்படப் போட்டிக்கு அனுப்புவதற்காக ஒரு படம் எடுத்தார்கள். அதில் நடித்துக் கொடுத்தேன். அது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. அந்த படம் விருது பெறவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். கன்னட தொடர்களில் நடிக்க வாய்ப்பு வருகிறது. அதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. என்கிறார் சஞ்சனா.

# நாளைய தலைமுறையை பாதுகாக்க பெண்களே விழித்தெழுங்கள்!

■ சுகிபாலா, இணுவில்.

தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனை நாளாந்தம் மாற்றி வரும் சூழலில் பெண்களும் தமக்கான பொழுதுபோக்கு விடயங்களை நவீனத்துடன் இணைத்துள்ளார்கள். கிராமங்களில் சந்திகள் தோறும் மாலை நேரத்தில் கூடும் அக்காலப்பெண்களை தொலைகாட்சிப்பெட்டி காந்தமாக இழுத்து வீட்டுக்குள் அடக்கியுள்ளது. குடும்பப் பெண்ணோ அல்லது ஏனைய ஒரு சராசரிப் பெண்ணோ தன் வீட்டு வேலைகள் முடித்து தன் தாய், தந்தை சகோதரர்கள் கணவன், மனைவி என வீட்டின் அனைத்துத் தரப்பினருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவிட்டு தனது ஓய்வு நேரத்துக்காகவே அந்தக்காலங்களில் தொலைக்காட்சியைப் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்றோ அதிகாலை எழும்பியதும் காலைக் கடன்களை முடிக்கிறார்களோ இல்லையோ எழும்பியதுமே தொலைக்காட்சிக்கு முன் உட்கார்ந்திருக்கிறார்கள். இப்போது தான் வீட்டு வாசலடிக்கே காலை சிற்றுண்டிகள், நண்பகல் காய்கறிகள், பின்பு மாலையிலும் தள்ளு வண்டில்களில் இரவு உணவுக்கான சிற்றுண்டிகளை தயார் செய்து விற்பனை செய்து கொண்டு போகும் போது பெண்களின் வேலைச் சுமைகள் குறைந்து சோம்பேறியாகும் தன்மை கூடி கூடுதலான ஓய்வு நேரங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். ஆனால் இதுவே அவர்களுக்கு எண்ணற்ற நோய்களை ஏற்படுத்தப் போகின்றன என்பதை அவர்கள் அறிவதில்லை. ஒரேயடியாக இருந்து தொலைக்காட்சி பார்ப்பதால் அவர்களுக்கு அவ்வப்போது நொறுக்குத் தீனிகளை உண்ண ஆசை தூண்டப்படுவதால் அதிலிருந்த படியே நொறுக்குத் தீனிகளை உண்டு தம் உடற் பருமனையும் அதிகரித்து, வேண்டாத நோய்க்கும் ஆளாகின்றனர்.

கிராமமோ, நகரமோ இன்று எல்லாப் பெண்களையும் ஆட்டிப் படைப்பது தொலைக்காட்சி சீரியல்களே. அதில் பெண்களை வில்லியாகவும், மாமி யார் மருமகள்களை மோதவிட்டுப் பார்க்கும் தன்மையும், திருமண மானவன் என்று தெரிந்தும் அவனைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுதல் உறவுமுறைகளுக்கு இடையிலான சொத்து உரிமைப் போராட்டங்கள் என குடும்பங்களைச் சிதைக்கும் விடயங்களே திணிக்கப்படுகின் றன. ஆனால் அவை அனைத்தும் நடைமுறையில் நடப்பவை குறைவு. இந்த உலகில் எத்தனையோ புரிந்துணர்வான மாமி யார் மருமகள் உறவு முறைகள், ஒருவனுக்கு ஒருத்தி என வாழும் கற்பு நெறிகள் இருந்தாலும் தொலைக்காட்சி நாடகங்கள் இன்னும் வக்கிரத் தன்மையையும் பெண்களை இழிவுபடுத்துவதாகவும், வன்முறையை தூண்டிவிடுபவையாகவுமே காணப்படுகின்றன.

"பின்தூங்கி முன்எழுவாள் பத்தினி" என்பது அந்தக்கால பழமொழி. ஆனால் இன்றோ கணவன் இரவு வருவதும் தெரியாமல், காலையில் அவன் எழுந்து அலுவலகம் செல்வது கூடத் தெரியாமல் தூங்கும் பெண்களே அதிகம் உள்ளனர். காரணம் என்ன வென்று பார்த்தால் இன்றைய சின்னத்திரை சினிமாக்களே. இரவினில் குழந்தைகள், கணவன், வயதான பெற்றோர் என தமது அசதி, நோய்கள் என மருந்து மாத்திரைகளோடு காத்திருக்க இவர்கள் அவர்களைக் கண்டு கொள்வதில்லை. அவர்களுக்கான பராமரிப்பு உணவு என்பவை கூட கவனிக்கப்படுவதில்லை. அவர்களுக்கான உணவு பரிமாறல்கள் கூட சினிமாத் தொடர்களின் இடைவேளை நேரங்களிலேயே பரிமாறப்படுகின்றன. இதில் வேடிக்கைக்கு உரிய விடயம் என்ன வென்றால் சில பெண் கள் கூறுகிறார்கள்; தாம் சின்னத்திரை சினிமாக்களைப் பார்ப்பது நடிப்புக்காகவோ அல்லது கதைக்காகவோ அல்லவாம். வெறுமனே அவர்களின் உடை அலங்காரத்துக்காகவும், புதிய புதிய நாகரிக உடை களைத் தாம் தெரிந்து கொள்வதற்காகவுமேயாம். எது எப்படியோ சின்னத்திரை சினிமா பார்க்கும் பழக்கமுடைய பெண்கள் இம் மடமையை விட்டெறிந்து நம்மை சமுதாய அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இதனை விட எம் பெண்களை இன்னும் ஒரு சில காரணிகள் சீரழித்துக் கொண்டுதானிருக்கின்றன. தொழில்நுட்பம் வளர வளர மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததோ இல்லையோ பெண்களின் பாதுகாப்பு குறைந்து கொண்டே வருகிறது. அதுதான் பெண்கள் நடமாடும் இடங்களைக் குறிவைத்து கமராக்களைப் பொருத்துவதுதான். அதாவது பெண்கள் அதிகம் செல்லும் அழகு நிலையங்கள், போக்குவரத்து வாகனங்கள், புடைவைக் கடைகள் எனப் பல இவற்றில் உள்ளடங்குகின்றன. அந்தக் கமராக்கள் மூலம் பதிவு செய்து பின்பு அந்தப்பெண்களை மிரட்டுகின்றனர். இதை எதிர்பார்க்காத பெண்கள் குடும்ப மானம் மரியாதைகளுக்கு அஞ்சி சில சமயம் வெளியில் சொல்லத் தயங்குகின்றார்கள் அல்லாதுவிடில் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

இதனை விட தற்போது பெண்களின் புடைவைக் கடைகள், போக்குவரத்து வாகனங்களிலும் கமராக்கள் பொருத்தப்பட்டு பெண்களின் அந்தரங்க உறுப்புக்களை படம் பிடித்து அந்தப்பெண்களின் வாழ்க்கையைச் சீரழிப்பதாக நாம் அண்மைய இணைய, பத்திரிகைச் செய்திகளில் பார்த்திருக்கின்றோம். ஆகவே பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல வழிகளிலும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. சேலை மேல் முள் விழுந்தாலும் முள் மேல் சேலை விழுந்தாலும் பாதிப்பு என்னவோ சேலைக்குத் தான் என்பது போலவே பெண்களின் வாழ்வும் அமைந்துள்ளது. எனவே சிந்தியுங்கள் பெண்களே. உங்கள் வாழ்க்கை இன்றைய சின்னத்திரை சினிமாக்களாலும், ஆண் வர்க்க பாலியல் இச்சைகளாலும் சீரழிக்கப்பட்டு வருகின்றது. எனவே, உங்கள் கடமைகளையும் உணர்ந்து, போகும் இடங்களில் உங்கள் பெண்மையையும் காப்பாற்றி, அதனால் உங்களையும் பாதுகாத்து உங்களால் உருவாக்கப்படும் குடும்பகட்டமைப்புக்களையும் பாது காத்து நாளைய தலைமுறைகளைப் பாதுகாப்போம்.



**சேலை மேல் முள் விழுந்தாலும் முள் மேல் சேலை விழுந்தாலும் பாதிப்பு என்னவோ சேலைக்குத் தான் என்பது போலவே பெண்களின் வாழ்வும் அமைந்துள்ளது. எனவே சிந்தியுங்கள் பெண்களே. உங்கள் வாழ்க்கை இன்றைய சின்னத்திரை சினிமாக்களாலும், ஆண் வர்க்க பாலியல் இச்சைகளாலும் சீரழிக்கப்பட்டு வருகின்றது.**



பெண்ணடிமைக்கு எதிராக
மண்ணில் உதித்த பாரதி
தன் கவி வரிகளால்
பெண்களை மீண்டெழ வைத்தான்
மீண்ட பெண்களோ
நீண்ட சாதனைகளையும்
படைத்தார்கள்
ஆனால் இன்று...?
வீதியால் தனியாகச் சென்ற பெண்
வீட்டுக்கு வருகிறாள் சடலமாக...
கற்க சென்ற மாணவி
கற்பை இழந்து மாதவியாகிவிடுகிறாள்
புகுந்த வீட்டுக்குச் சென்ற மணப்பெண்
புண்களுடன் திரும்புகிறாள் பிறந்த வீட்டுக்கு...
சமூகத்தில் பெண்களுக்கு நடப்பது என்ன..?
பெண்கள் என்ன அடிமைகளா...?
பாரதி கண்ட புதுமைப் பெண் எங்கோ...?
பாரதத்தை மீட்டான் ஒரு பாரதி
ஆனால் நம் யாழ்ப்பாணத்தை
இல்லை... இல்லை...
யாழ்ப்பாண பெண்களை மீண்டெழ வைக்க
யார் வருவார்களோ
மாறாத இந்தக் கேள்வியுடன் .....

த. மோகனரூபன்.

## பெண்களின் தலைவிதியா...?

## கிளிநொச்சியில் மனவிருத்தி பாடசாலை

யாழ்ப்பாணம், செப்.28

சிவபூமி அறக் கட்டளையின் மனவிருத்திப் பாடசாலை ஒன்று அடுத்த ஆண்டில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி முல்லைத்தீவுப் பகுதிகளில் உள்ள மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சிப் பிரதேசத்தில் மனவிருத்தி பாடசாலை ஒன்றை அமைத்து சிறுவர்களுக்கு உதவவேண்டும் என்று அந்தப் பகுதிகளில் உள்ள பெற்றோர் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது. (வ-7)

## சிறுவர் நாடக போட்டி முடிவுகள்

வவுனியா, செப்.29

வவுனியாப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சிறுவர் நாடகப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை முதலாம் இடத்தையும் வ/தமிழ் மகாவித்தியாலயம், வ/நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் ஆகிய இருபாடசாலைகளும் இரண்டாம் இடத்தை பெற்றன. (ற-402)

# ஏற்று நீர்ப்பாசன திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துக

## புதுமுறிப்பு கிராம விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, செப் 29

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் புதுமுறிப்புக்குளம் உள்ளபோதிலும் குளத்தின் நீர் வயல் நிலங்களுக்குச் செல்வதன் காரணமாக ஒரு பகுதி விவசாயிகள் மட்டுமே பயனடைகின்றனர்.

வயல் நிலங்கள் இல்லாத பல குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெரும் எண்ணிக்கையான மக்கள் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் உள்ளதன் காரணமாக புதுமுறிப்புக் குளத்தை மையப்படுத்தி ஏற்று நீர்ப்பாசனத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி இந்தக் கிராமத்துக்கு பயணம் செய்த யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடமும் மக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (கு-18)



வவுனியா பொலிஸ் நிலையத்தில் உள்ள மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில், அங்குள்ள சிறு குற்றத் தடுப்புப் பிரிவு சேதங்களுக்கு உள்ளானது. (த)

# வீதிகளின் சீரின்மை காரணமாக வவுனியா மாணவர்கள் சிரமம்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, செப்.29

வவுனியாவில் மாணவர்கள் பயன்படுத்தும் வீதிகள் பல சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்றும் அதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. வ/கருப்பனிச்சங்குளம், வ/திருஞானசம்பந்தர் வித்தியாலயம், வ/மகா இறம்பக்குளம் அ.த.க.பாடசாலை, வ/மதினாநகர் வித்தியாலயம், வ/அண்ணாநகர் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு செல்லும் வீதிகள் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கருப்பிச்சங்குளம் பகுதியில் உள்ள 3 கிலோமீற்றர் நீளமான வீதி, ஸ்ரீராமபுரம் பகுதியில் உள்ள 2 கிலோமீற்றர் நீளமான வீதி, மகா இறம்பைக்குளம் பகுதியில் 3 கிலோ மீற்றர் நீளமான வீதி, மதினாநகரில் 2 கிலோமீற்றர் நீளமான வீதி, அண்ணா நகரில் 3 கிலோமீற்றர் வீதி என்பன மிக மோசமான நிலையில் உள்ளன என்று கூறப்படுகின்றது.

பல ஆண்டுகளாகத் திருத்தப்படாத இந்த வீதிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இது வரை இந்த வீதிகள் திருத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றது. தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் இந்த வீதிகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-402)

# ஊற்றுப்புலம் குளத்தைப் புனரமைத்து உதவுங்கள்

கிளிநொச்சி, செப் 29

கிளிநொச்சி ஊற்றுப்புலம் குளத்தைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

430 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் அணைக்கட்டு சேதமடைந்து காணப்படும் ஊற்றுப்புலம் குளத்தினை புனரமைப்பதன் மூலம் இந்தக் கிராம மக்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கிளிநொச்சி நகரத்துக்கும் ஊற்றுப்புலம் கிராமத்துக்குமிடையில் பஸ் சேவை ஆரம்பிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி ஊற்றுப்புலம் கிராமத்துக்கு பயணம் செய்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடமும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (கு-18)

# மாணவர்களுக்கான பஸ் சேவையை புதுமுறிப்புக்கும் நடத்துக

## பெற்றோர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.29

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கனகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு புதுமுறிப்புப்பகுதியிலிருந்து பெருமளவு மாணவர்கள் நாள்தோறும் சென்று வருவதன் காரணமாக பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு பஸ் சேவையொன்றை நடத்துமாறு புதுமுறிப்புக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தங்களுடைய பிள்ளைகள் மேற்படி பாடசாலைகளுக்குச் சென்றுவரவும், மாலை வேளையில் கிளிநொச்சி நகரத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றுவரவும் வாகன வசதி இல்லாததன் காரணமாக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி, சென்.திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்குப் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் நாள்தோறும் சென்றுவருவதாகவும், இதன் காரணமாக போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தமது பிள்ளைகளுக்குப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் கல்வியில் முன்னேற்றமடையமுடியுமென பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.



புதுமுறிப்பு, செல்வாநகர், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், பாரதிபுரம், விநாயகபுரம் ஆகிய கிராமங்களின் மாணவர்கள் கிளிநொச்சி நகரிலுள்ள பாடசாலைகளுக்கு வருகைதருவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். (கு-18)

# கண்ணிவெடியில் வாகனம் சிக்கி 22 பேர் உயிரிழப்பு

பிஸ்சாவ், செப்.29

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கினியா- பிஸ்சாவில் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள சென்ற வாகனம் நிலக்கண்ணிவெடியில் சிக்கி 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தலை நகர் பிஸ்சாவில் இருந்து 60 கி.மீ. தொலைவில் வடகிழக்கே மன்சோவா அருகே நேற்று முன்தினம் நடைபெற்றது. சம்பவ இடத்தில் கண்ணி வெடித்தாக்குதலுக்கு உள்ளான வாகனம் இரண்டாக உடைந்ததில் 19 பேர் உயிரிழந்தனர். காயம் அடைந்த 3 பேர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தனர்.

இது குறித்து அரசு அறிக்கை எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை. 1970 ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டுடன் மேற்கொண்ட சுதந்திர போர் மற்றும் 1990-ஆம்



ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டு போர் ஆகியவற்றின்போது புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளால் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கினியா- பிஸ்சாவ் நாட்டில் கொல்லப்பட்டுள்ளனர். கினியா- பிஸ்சாவ் நாட்டில் 2012 ஆம் ஆண்டு ஆட்சி முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இந்த வருடம் தேர்தல் நடைபெற்றது. புதிய அரசானது சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. (வ)

உலகச் செய்திகள்

# எங்களை கருணை கொலை செய்யுங்கள்

## மன்றாடும் பெற்றோர்

ப்ருசெல்ஸில், செப்.29

பெல்ஜியத்தைச் சேர்ந்த தம்பதியினர் ஒருவர் தங்களை கருணைக் கொலை செய்யுமாறு பிள்ளைகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெல்ஜியம் தலைநகர் ப்ருசெல்ஸில் பிரான்சிஸ்-ஆனி என்ற தம்பதியினர் தங்களது மூன்று பிள்ளைகளுடன் வசித்து வருகின்றனர்.



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பிரான்ஸிஸ் கடந்த 20 வருடங்களாகச் சிகிச்சை பெற்று வருகிறார். தற்போது அவருக்கு கண் பார்வை மங்கியுள்ளதுடன், செவித்திறனும் குறைந்து வருவதால் எந்நேரமும் அவர் இறக்கலாம் என்ற பீதி தம்பதியினருக்கு இடையே எழுந்துள்ளது.

எனவே தங்களை கருணை கொலை செய்யுமாறு பிரான்சிஸ்ஸும், ஆனியும் பிள்ளைகளிடம் தெரிவித்ததை அடுத்து அவர்களும் உரிய மருத்துவர்களைத் தேடி வருகின்றனர்.

# நிவாரணம் இல்லையேல் பட்டினிச் சாவே ஏற்படும்

## போரால் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர்

வவுனியா, செப்.29

வவுனியா மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட கணவனை இழந்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் அவல நிலையை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள இவர்கள், உரிய வீட்டு வசதிகளின்றியும், தொழில் வசதிகள் இன்றியும் உள்ளனர். அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட நிறைவேற்றமுடியாத நிலையில் உள்ளனர் என்று கூறுகின்றனர். உணவுக்கோ, அன்றாட செலவுகளுக்கோ திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், அரசியல்வாதிகள் கற்றல் உபகரணங்களை மட்டுமே வழங்குகின்றனர் என்றும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

**வாழ்வாதார உதவிகளை வழங்குமாறும் கோரிக்கை**

இந்த நிலை தொடருமானால் தாம் பட்டினிச்சாவையே எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்றும், உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து தமக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-402)



யாழ் முஸ்லிம்கள் குடியிருப்பு பகுதியில் 1908ஆம் ஆண்டு கட்டப்பட்ட மசுறுஜன் பாடசாலை போரின் பின்னர் பாழடைந்த நிலையில் உள்ளது. இந்த நிலையிலும் மாணவர்கள் அங்கு கல்விச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். பாழடைந்த பாடசாலையில் கல்வி செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்கள் இவர்கள். (த-21)

# வீணாகப் பணத்தை கொடுக்க வேண்டாம்

## மாவட்ட செயலகப் பதிவாளர் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்.மாவட்டச் செயலக பதிவாளர் திணைக்களத்துக்குரிய தேவைகளை நிறைவேற்ற வருபவர்கள், மாவட்ட செயலகத்துக்கு வெளியேயிருந்து பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களிடம் வீணாக பணத்தைக் கொடுக்க வேண்டாம் என்றும், மாவட்டச் செயலக பதிவாளர் திணைக்கள பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் அவற்றை இலவசமாகப் பதிவு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட காணி மற்றும் பதிவாளர் அலுவலகத்தின் சேவைகளைப் பெறுவதற்கு யாழ். மாவட்ட செயலகத்துக்கு பெருமளவான மக்கள் தினந்தோறும் வந்து செல்கின்றனர். அவ்வாறு வருகின்ற மக்கள் தமது சேவைகளைப் பெறுவதற்கு அங்குள்ள விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

அந்த விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து தருகின்றோம் எனத் தெரிவித்து, மாவட்ட செயலகத்துக்கு வெளியிலுள்ள சிலர் பணம் பெற்று வருகின்றனர். அவர்களால் பூரணப்படுத்திக் கொடுக்கும் விண்ணப்பப்படிவங்கள் பிழையாகப் பூரணப்படுத்திக் கொடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பணம் செலுத்தி, மாவட்ட செயலகத்துக்கு வெளியில் உள்ளவர்களிடம் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டாம் என்று கேட்டுள்ள மாவட்ட செயலக பதிவாளர் திணைக்களம், குறித்த படிவங்களைத் தமது அலுவலகர்களே இலவசமாகப் பூர்த்தி செய்து தருவார்கள் என்று தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்ட செயலக காணி மற்றும் பதிவாளர் திணைக்களப் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் அதற்குரிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள், பொதுமக்களால் கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு விண்ணப்பப் படிவங்களை இலவசமாகப் பதிவு செய்து கொடுப்பர் எனவும். இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டிய சேவைக்குப் பொதுமக்கள் வீணாகப் பணத்தைக் கொடுக்க வேண்டியதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-5)

## தவசிக்குளம் கிராமத்துக்கு மின் வழங்கக் கோரிக்கை



தென்மராட்சி, செப்.29

மிருசுவில் தவசிக்குளம் கிராமத்தில் மின்விநியோகம் வழங்கப்படாத இரு இடங்களுக்கு மின்விநியோகம் வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளை கோரியுள்ளனர்.

கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலைய வீதி மற்றும் நாச்சிமார் கோயில் வீதி ஆயிவற்றில் தலா 700 மீற்றர் தூரம் வரையான பகுதிகளுக்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

தற்போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மேற்படி வீதிகளில் உள்ள இரு வீதிகளுக்கும் மின்சார விநியோகம் வழங்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## நவீன சாதனங்களுடன் மண் ஆராய்ச்சி மையம்

### மாணவர்கள் பார்வையிடலாம்

அச்சுவேலி, செப்.29

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி பிரிவின் மண் ஆராய்ச்சி நிலையத்தின்' செயற்பாடுகளை மாணவர்கள் பார்வையிடலாம். பார்வையிட விரும்பும் பாடசாலைகளின் அதிபர்கள் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிப் பிரிவில் உள்ள மண் ஆய்வு மையம் கணினிமயப்படுத்திய நிலையில் நவீன சாதனங்களுடன் செயற்படுகின்றது.

ஆய்வு மையத்தில் மண்ணை ஆய்வு செய்வதற்கு 1,300 ரூபாவுக்கு மேல் செலவு ஏற்பட்ட போதிலும் 290 ரூபா மானியக் கட்டணத்துடன் மண் ஆய்வு செய்யப்பட்டு மண்ணில் உள்ள குறைபாடுகள், கூறுபாடுகள் தெரிவிக்கப்படுவதோடு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

மண் ஆய்வு மையத்தின் செயற்பாடுகளைப் பார்வையிடுவதற்கும் கற்றல் தொடர்பான கள ஆய்வை மேற்கொள்வதற்குப் பாடசாலை மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர் என விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் பொறுப்பதிகாரி தி.கருணநாயகம் தெரிவித்தார்.

பார்வையிட விரும்பும் பாடசாலை அதிபர்கள் முன்கூட்டியே தொடர்பு கொண்டு தமது பாடசாலை மாணவர்களின் வருகையைப் பதிவு செய்த பின்னர் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நவீன சாதனங்களுடன் செயற்படும் மண் ஆராய்ச்சி மையங்களில் யாழ்.மாவட்ட நிலையமும் ஒன்று. இந்த வகையில் மூன்று நிலையங்கள் இலங்கையில் செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

மண் ஆய்வுக்கு உட்படுத்த விரும்பும் விவசாயிகள் மற்றும் வீட்டுத் தோட்டக்காரர்கள் தமது பிரிவுக்குப் பொறுப்பான விவசாய போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் ஊடாகப் பூரணப்படுத்திய படிவம் மற்றும் மண் வகையை நிலையத்தில் சமர்ப்பித்து ஆய்வு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-11)

## ஊரத்தியில் 35 குடும்பங்களுக்கு காணி பங்கீட்டுக்கு இறுதித் தேர்வு

வலி.மேற்கு, செப். 29

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அராலி ஊரத்தி காணியில் உள்ள 35 குடும்பங்களுக்கு காணி பங்கீடு செய்வதற்கான இறுதிக் கட்டத் தேர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்றது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக குடியிருக்கும் மக்கள் காணி உறுதிப்பத்திரம் இல்லாத நிலையில் வீட்டுத் திட்டத்தைப் பெற முடியாத அவல நிலையை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் முதற் கட்டமாக நேற்றுமுன்தினம் சரியான அளவீடுகளில் வீடுகளுக்குச் செல்லும் பாதை, காணி பங்கீடு என்பன இடம்பெற்றன.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான ந.பி.இராஜ்குமார், சிவகுரு பாலகிருஷ்ணன், த.நடனேந்திரன், க.செல்வக்குமார், சசிகுமார், க.ஜெயலிங்கம், க.சபாநாயகம் மற்றும் தவிசாளர் திருமதி ஐ.நாகரஞ்சினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் இரு வாரங்களுக்குள் காணி உறுதிப் பத்திரம் வழங்குவது என அந்தப் பிரதேச மக்களுக்குச் சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேற்படி நிகழ்வில் முன்னாள் வருமானப் பரிசோதகர் சிதம்பரநாதன் சிறிகாந்தன், தொழில்நுட்ப அதிகாரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு திரண்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை முதலில் மேம்பாடு செய்யப் பாதைகளை அகலித்து வழங்குவதுடன் பாதைகளைச் சீரமைத்துத் தாரிட்டு வழங்குமாறு தவிசாளரிடம் கேட்டுக் கொண்டனர்.

எதிர்வரும் இரு வாரங்களில் அராலி ஊரத்தி மக்களுக்குக் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-50)

## சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், செப்.29

வல்வெட்டித்துறை பகுதியில் 12 வயதுச் சிறுமியை கடத்திச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறையில் வைத்து கைது செய்துள்ளனர். குறித்த சந்தேகநபர் பருத்தித்துறை பகுதியில் பதுங்கியிருந்த போதே கைது செய்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக தெரிய வருவதாவது:

கடந்த 24 ஆம் திகதி மாலை 6 மணியளவில் வல்வெட்டித்துறை, தெணியம்பை பகுதியில் தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 12 வயதுடைய மாணவி ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த மாணவி நாகர்கோவில் பகுதியில் அநாதரவாக நின்ற நிலையில் அந்தப் பகுதி மக்களால் மீட்கப்பட்டார். இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் உடனடியாக அந்தப் பகுதிக்கு பொறுப்பான கிராம அலுவலருக்கு தகவலை வழங்கினர். அதையடுத்து அங்கு விரைந்த கிராம அலுவலர் இது தொடர்பாக ஏற்கனவே குறித்த சிறுமியை காணவில்லை என வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப் பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிறுமியை மீட்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்தனர். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

சிறுமியிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் பொலிகண்டியைச் சேர்ந்த ரகு எனப்படும் 28 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் கடந்த மூன்று நாள்களாக தேடி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த சந்தேக நபர் பருத்தித்துறை பகுதியில் உள்ள மதுபானக் கடை ஒன்றுக்கு அருகில் நடமாடுவதாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்குத் தகவல் ஒன்று கிடைத்தது. அதையடுத்து அந்தப் பகுதியை சுற்றி வளைத்த பொலிஸார் நடத்திய தேடுதலின் போது அந்தப் பகுதியில் பதுங்கியிருந்த குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையிலும் நேற்றுப் பிற்பகல் முற்படுத்தப்பட்டதாகவும் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பிறிதொரு சந்தேக நபரை தேடி வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-109)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஜெயாவின் உச்சமும் திடீர் திருப்பமும்

தமிழ்நாடு முதலமைச்சராகவிருந்து சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் செல்வி ஜெயலலிதா ஜெயராம் ஒரு சினிமா நடிகையாக இருந்து வேறொரு சினிமா நடிகரின் துயரில் அரசியலுக்கு வந்து தனக்கு மிக்கார் யாருமில்லை என்று வகையில் தமிழ்நாட்டில் கோலோச்சிய ஒரு பெண்மணி யாவார்.

அவர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு 18 ஆண்டுகள் இழுபறிபட்டு 14 நீதிபதிகளால் விசாரிக்கப்பட்டு இறுதியில் கடந்த 27 ஆம் திகதி தீர்ப்புக் கூறப்பட்டு முடிவுற்றுள்ளது. இந்த வழக்கு ஆரம்ப காலம் முதல் இறுதிநாள் வரையில் ஒரு சினிமா பாணி நாடகம் போலவே நடந்து முடிந்துள்ளது.

இந்த வழக்கின் நெளிவு சுழிவுகள் எதுவாய் இருந்தாலும் இந்தியாவில் சட்டங்களும், நீதித் துறையும் தலையீடுகள் இன்றி- பாரபட்சமின்றி- நபர்களின் செல்வாக்கு அந்தஸ்து பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் செயற்படுவது மகிழ்ச்சிக்குரியது- ஆச்சரியத்துக்குரியது. இலங்கை போன்ற ஜனநாயகத்தை உதட்டளவில் பீற்றிக் கொள்ளும் நாடுகளுக்கு முன்மாதிரியானதுமாகும்.

அண்மையில் இந்தியாவில் நடந்து முடிந்த மக்கள் அவைத் தேர்தலின்போது இந்தியத் தேர்தல் ஆணையம் செயற்பட்ட விதத்தையும், எந்தவித உயர் அந்தஸ்து பெற்ற நபரும் தலையீடு செய்ய முடியாத வகையில் அது அமைந்துள்ளமையையும் சுட்டிக்காட்டியிருந்த இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் அதனை அண்மையில் இங்கு ஊவா மாகாணத்தில் நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலோடு ஒப்பிட்டு இங்குள்ள தேர்தல் ஆணையகத்தை விமர்சித்திருந்தார். அது மட்டுமல்ல இந்தியாவில் உண்மையான ஜனநாயகம் நிலவுவதாகவும் பாராட்டியிருந்தார்.

தேர்தல் ஆணையம் மட்டுமல்ல நாட்டில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுகின்ற ஒரு முக்கிய அம்சமான நீதித்துறையும் அங்கு தலையீடுகளுக்கு அப்பால் சுயாதீனமாகச் செயற்படுகிறது என்பதற்கு செல்வி ஜெயலலிதாவின் வழக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது.

குற்றம் புரிகிறவர்களைப் பாதுகாக்கும் அல்லது தப்புவிக்கும் வழிமுறைகள் நம் நாட்டிலோ தாராளம். உயர்மட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமிக்கும் ஏகபோகமும் கூட அரசியல் கட்சியொன்றின் தலைவரான நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனி நபரிடமிருக்கின்றது.

எதுவானாலும் செல்வி ஜெயலலிதா கைதானதும் சிறையில் அடைக்கப்பட்டதும் இலங்கைத் தமிழர்களுக்கும் அவர்களுக்கு ஆதரவான இந்தியத் தமிழர்களுக்கும் கவலையளிப்பதாகவே இருக்கும். ஆனால் அது வேறு விடயம். இலங்கைத் தமிழர் விடயத்தில் எம்.ஜி.ஆர். வகுத்தளித்திருந்த கொள்கை கோட்பாடுகளை அவருக்குப் பின் கட்சியின் தலைமையையும் ஆட்சியில் முதல்வர் பதவியையும் ஏற்றுக்கொண்ட ஜெயா அவைகளுக்கு மாறாகவே செயற்பட்டார், கருத்துக்களையும் வெளியிட்டு வந்தார், தமிழக மக்களின் உணர்வுகள் இலங்கைத் தமிழர்களுக்கு பெருமளவில் ஆதரவாக இருந்தமையால் அவர்களின் உணர்வுகளை தன் வயப்படுத்திக் கொள்ளத் தன் எதிர்ப்புப் போக்கை மாற்றிக் கொண்டார்- உண்மையில் அ.இ.அ.தி.மு.க.வின் கொள்கைகள் பெரும்பாலானவை எம்.ஜி.ஆர். கொள்கைகளில் இருந்து விடுபட்டு ஜெயலலிதா கொள்கைகளாகவே மாறிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

ஜெயாவுக்குப் பின் யார் முதலமைச்சர் ஆவார் என்பது தெரியாமல் இருந்தாலும் குறித்த வழக்கில் தீர்ப்பு பாதகமாக அமைந்தால் அந்தப் பதவியில் யார் அமர்வதென்பதில் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் மத்தியில் மறைமுகமான போட்டி நிலவியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே முன்பு அந்தப் பதவியிலிருந்துள்ளவரான ஓ.பன்னீர்ச் செல்வத்தின் பெயர் அடிபடுகிறது. ஜெயலலிதாவை தெய்வமாக வழிபடும் கட்சித் தலைவர்கள் அவரது ஆதிக்கம் கட்சியில் இல்லாது போகுமானால், நிச்சயம் பதவி போட்டிகளுக்கு குறைவிருக்காது. இருந்தாலும் ஜெயலலிதா தம்மீதான குற்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்து பிணையில் விடுதலையாகும் பட்சத்தில் மீண்டும் முதல்வர் ஆகாது போனாலும் அடுத்த தீர்ப்பு வரும் வரை கட்சியின் சர்வாதிகாரம் அவரிடமே இருக்கும். பதவிக்கு வருபவரும் அவர் கைப்பொம்மையாகவே செயற்படுவார் என்று சொல்ல வேண்டியதில்லை.

# தலைநிமிர்ந்து நிற்கின்றது இந்திய நாட்டின் நீதித்துறை

## ஜெயலலிதா வழக்கில் நிரூபணம்

சேரலாதன்



தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய அளவிலும் உலகத் தமிழர் மத்தியிலும் அதிகம் பேசப்பட்டுவந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தற்போது முன்னாள் என்ற அடைமொழியைத் தாங்கியவாறு சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கின்றார்.

இது அ.இ.அ.தி.மு.க.கட்சியைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய சோகத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் இந்தியாவின் ஜனநாயகத்துக்கும், நீதித்துதுறைக்கும் கிடைத்ததொரு பெரும் வெற்றியென்றே கூற வேண்டும். இந்திய நீதித்துறை ஒருவரின் அந்தஸ்தை எடைபோட்டு நீதி வழங்குவதில்லை என்பதை மீண்டுமொரு முறை நிரூபித்துள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் நாட்டிலுள்ள மொத்தமுள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 37 தொகுதிகளைத் தனித்துப் போட்டியிட்டு வென்று காட்டியவர் ஜெயலலிதா. இதனால் இந்திய அரசியலில் அசைக்க முடியாததொரு சக்தியாகவும், அவர் பார்க்கப்பட்டார். மத்தியில் காங்கிரஸ், பி.ஜே.பிக்கு மாற்றானதொரு அரசொன்று அமைந்திருக்குமாயின் பிரதம மந்திரியாக வந்திருக்கக் கூடிய தகுதியும் ஜெயலலிதாவிடம் காணப்பட்டது. ஆனால் பி.ஜே.பி. அறுதிப் பெரும்பான்மை பெற்றதால் இந்த நிலை தவிர்க்கப்பட்டது. மறைந்த பிரபல நடிகரும், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி. இராமச்சந்திரனின் வாரிசு என்று கூறத்தக்க வகையில் ஜெயலலிதா அ.இ.அ.தி.மு.க. கட்சியை வழி நடத்தி வந்தார். அந்தக் கட்சியில் அவர் இட்டதே சட்டமாக இருந்தது. அவரை எதிர்த்தவர்கள் தமது அரசியல் வாழ்க்கையையே இழக்க வேண்டியதாயிற்று. அமைச்சர்களாயினும் சரி, சாதாரண கட்சி உறுப்பினர்களாயினும் சரி அவரின் கால்களில் வீழ்ந்து வணங்குவதே வழக்கமாக இருந்து வந்தது. தேர்தல்களின் போது கட்சியை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும் தனித்திறமையும் அவரிடம் காணப்பட்டது. தேர்தல்களின் போது பணத்தை வாரி இறைப்பதில் ஜெயலலிதாவுக்கு நிகர் ஜெயலலிதா தான். இத்தனை ஆளுமை மிக்க அவர் சிறையில் முடங்கிக் கிடப்பதை அவரது கட்சி ஆதரவாளர்களால் பொறுத்துக்கொள்ள முடியுமா? தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தீவைப்பு, கல்வீச்சுச் சம்பவங்கள், நேரடி மோதல்கள், கொடும்பாவி எரிப்பு என ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் தமது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துள்ளனர்

1991 ஜூலை மாதம் ஜெயலலிதா முதலமைச்சராக வருவதற்கு முன்னர் அவரது மொத்தச் சொத்துக்களின் பெறுமதி 2 கோடியே ஒரு லட்சத்து 83 ஆயிரம் ரூபாவெனப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் 1996 ஆண்டு ஏப்ரல் மாதத்தினுள் இது 66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகப் பல்கிப் பெருகிக் காணப்பட்டது. ஜெயலலிதா தமது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக் குவித்துள்ளதாகவும் சசி

> குறிப்பாக நீதித்துறை வலுப் பெற்று விளங்குவதன் மூலமாக நாட்டில் அமைதி யையும், ஸ்திரத் தன்மை யையும் பேண முடியும். எது எவ்வாறு இருப்பி னும் ஜெயலலிதா வுக்கு வழங்கப்பட்ட தண்டனை இங்குள்ள அரசியல்வாதிகள் சிலரின் வயிற்றிலும் புளியைக் கரைத் திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

கலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் இதற்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சர்ச்சைக்குரிய அரசியல்வாதியான சுப்பிரமணிய சுவாமி அளித்த புகாரின் அடிப்படையில் முதல் கட்ட விசாரணை, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தல், சாட்சிகளை விசாரணை செய்தல் ஆகியன கடந்த 2003 ஆம் ஆண்டு வரை இடம்பெற்றன. பின்னர் கடந்த 11 ஆண்டுகளாக தமிழில் இருந்த ஆவணங்களை ஆங்கிலத் தில் மொழி பெயர்த்தல், சாட்சிகள் மீதான குறுக்கு விசாரணை குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தல், இறுதி வாதம் ஆகியன இடம்பெற்று வந்துள்ளன.

மேலும், அனைத்துவிசாரணைகளும் கடந்த ஓகஸ்ட மாதம் 28 ஆம் திகதி நிறைவு பெற்றதால் கடந்த 20 ஆம் திகதி தீர்ப்பு வெளியாகுமென சிறப்பு நீதிமன்றம் அறிவித்தது.

ஆனால் ஜெயலலிதா தனக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோரியதால் தீர்ப்பு வழங்குவது 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினமே தீர்ப்பும் வழங்கப்பட்டது.

ஆனால் வழக்கின் தீர்ப்புத் தொடர்பாக முன்னரே அறிந்து கொண்டவர்கள் போன்று அ.இ.அ.தி.மு.க. ஆதரவாளர்கள் நடந்து கொண்டுள்ளனர். தீர்ப்பு வெளியானகையோடு தயாராக வைக்கப்பட்டிருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கொடும்பாவியை அவர்கள் எரித்துள்ளனர். மேலும், அவரது வீடும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டது.

அரச பஸ்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகவும், கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மோசமாகத் தாக்குதல்களுக்கு ஆளானதாகவும் தமிழ் நாட்டிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிஸார் கைகட்டிக் கொண்டு இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாகப் பாதிக்கப்பட்டவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். இவற்றையெல்லாம் நீதிமன்றத் தீர்ப்பினால் கோபமடைந்த ஒரு பிரிவினரின் செயல்கள் எனக் கொள்ளமுடியும்.

ஆனால் இந்திய நீதித்துறை தலை நிமிர்ந்து நிற்பதைக் காணமுடிகின்றது. எமது நாட்டின் நீதித்துறையிலும் இத்தகைய மாற்றங்கள் ஏற்படாதா என மக்கள் ஏங்குவதைக் காண முடிகின்றது. நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையினால் நீதித்துறை தனது தனித்துவத்தை இழந்து நிற்கின்றது.

ஆளும் தரப்பின் விசுவாசிகள் எதைச் செய்தாலும் தண்டனைகளிலிருந்து விடுபட முடியுமென்ற நம்பிக்கை இங்கு வலுத்துக் காணப்படுகின்றது.

இதனால் தான் குற்றச் செயல்களும் தாராளமாக இடம்பெற்று வருகின்றன. இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்றால் ஜனாதிபதியின், நிறைவேற்று அதிகாரங்கள் ஒழிக்கப்படுவதோடு, நீதித்துறையும் சுயாதீனமாக இயங்குவதற்கு வழிவகை கொள்ளப்படல் வேண்டும் - சில வேளை அவ்வாறானதொரு நிலை இங்கு ஏற்படுமாயின் ஜெயலலிதாவைப் போன்று இங்கும் பல முக்கியஸ்தர்கள் சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்க வேண்டியதொரு நிலை ஏற்பட்டு விடும்.

ஒரு நாட்டின் மதிப்பை கடன்களைப்பெற்று அமைக்கப்படும் நெடுஞ்சாலைகளோ, விமான நிலையங்களோ அல்லது துறைமுகங்களோ தீர்மானிப்பதில்லை. நீதியாகச் செயற்படும் அரசும், குறுக்கீடுகள் எதுவுமற்ற நீதித்துறையும், வன் செயல்கள் இல்லாத சமூகமுமே இதனைத் தீர்மானிக்கின்றன.

குறிப்பாக நீதித்துறை வலுப்பெற்று விளங்குவதன் மூலமாக நாட்டில் அமைதியையும், ஸ்திரத் தன்மையையும் பேண முடியும்.

எது எவ்வாறு இருப்பினும் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை இங்குள்ள அரசியல்வாதிகள் சிலரின் வயிற்றிலும் புளியைக் கரைத்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் தாம் செய்த ஊழல்களை அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்குத் தண்டனை வழங்கும் நேரம் தான் இன்னமும் வாய்க்கவில்லை.

# இருளில் அமிழ்ந்து தவிக்கும் அளுத்கம முஸ்லிம் மக்கள்

## நீதி, நியாயம் கிடைக்குமா என்பதிலும் சந்தேகம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இறுதியாக பொலிஸார் அனைத்தையும் சமாதானமாக தீர்த்துக் கொண்டு வெளியேறிச்சென்ற முஸ்லிம் இளைஞரை அழைத்து வந்து சிறைப்படுத்தியது. இது அந்தத் தேரரை மகிழ்ச்சிக்குட்படுத்துவதற்காகும். முன்பு போன்று அன்றும் முஸ்லிம் மக்களது பொறுமை அத்துடன் முடிவுக்கு வந்து விடுகிறது. எனினும் அது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதுதான் இன்றைய கேள்வியாகும்.

**பெறுபேறு**

எரிந்த வீடுகள், கடைகள் மீள நிர்மாணிக்கப்படுகின்றன. எனினும் அங்கிருந்த பொருள்கள், இடம்பெற்ற சேதங்கள் தொடர்பாக எந்தவொரு தீர்மானமும் இல்லை. வீடு நிர்மாணிக்கப்படும் வரை அவர்கள் வாடகை வீடுகளிலேயே இருக்கிறார்கள். இவை எதுவும் அரசுடன் தொடர்புபட்டவைகள் அல்ல. எவ்வாறெனினும் எந்தவொரு நீதி நியாயமும் கூட வழங்கப்படவில்லை. இறந்த இருவரது குடும்பங்கள் அநாதரவாகியுள்ளன. இருவரது கால்கள் வெட்டப்பட்ட நிலையில் உள்ளன. அவர்கள் 17, 18 வயதுடைய இரு இளைஞர்கள்.



அவர்களது வாழ்க்கை தொடர்ந்தும் இருளில் மூழ்கப் போகின்றது. வீணான பிரச்சினையொன்றுக்கு இவர்கள் நிலையாகவே நட்டஈடு செலுத்தியுள்ளார்கள். இவர்கள் சிங்களவர்கள் பற்றி என்ன நினைப்பார்கள்? இந்த இரு கால்களும் இழக்கப்பட்டிருப்பது போர் ஒன்றில் பங்கு கொண்டதனால் அல்ல. இது கறுப்பு ஜூலை ஏற்படுத்திய எச்ச சொச்சம். மற்றொரு இளைஞரது வயது 19. அவரது தொடையில் பாய்ந்த சன்னத்தின் காரணமாக அவரும் நிலையான நோயாளியாக்கப்பட்டுள்ளார். இதற்கிடையே தாக்குதலுக்கு இலக்காகியுள்ள தாயொருவர் இன்றும் தமது முக மறைப்பை (பர்தா) சிறிது நேரத்துக்காக வேனும் அப்புறப்படுத்துவதாக இல்லை. அவரது விகாரமடைந்துள்ள முகத்துக்கு அஞ்சி அவரது குழந்தை பால் அருந்துவதற்கு மறுத்து வருவது மாத்திரமன்றி, தாயையும் புறக்கணித்து வருகிறது. அந்தக் குழந்தையின் தலையும் கல்லெறிக்கு இலக்காகி தையல் போடப் பட்ட நிலையில் உள்ளது. இவை அன்று ஏற்படுத்திய பெறுபேறுகளாகும். இது அவற்றின் ஒரு சிறு துளி மாத்திரமாகும்.



அவற்றை மீள வெளிப்படுத்திக் காட்டுவது இங்கு நோக்கமல்ல. எனினும் ஜனாதிபதி கூறுகின்ற சிறு சம்பவத்தின் பெறுபேற்றை இரு கண்களாலும் கண்டு கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது. இதனால் அன்றைய நாடகத்தின் உண்மை நிலைவரத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது. உண்மையிலே தீப்பற்றியது, எரிந்தது, சாம்பராகியது இந்த உயிர்களாகும்.

இன்று இந்தக் கிராமங்களில் சிங்கள, முஸ்லிம்களிடையே இருந்த அன்னியோன்னியம் எரிந்து சாம்பராகியுள்ளது. அதன் மீது தீ மூட்டியவர்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். தங்களுக்கு நியாயம் கிட்டவில்லையென இன்னும் முஸ்லிம்கள் கூறுகின்றார்கள்.

நியாயம் எப்படியாயினும் இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கான வழிமுறைகள் கூட முறையாக இடம்பெறாதுள்ளதாகவே மக்கள் நம்புகின்றனர். இவ்வாறான சந்தேகம் இராணுவத்தினர் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதால் மாத்திரம் ஏற்படப் போவதில்லை. இதனை அளுத்கமைக்குச் சென்றால் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

எனது கால் இல்லாத நிலையில் என்னைப்பற்றி நினைக்கவே முடியாது என்கிறார் அப்துல் ஹஸன் என்ற இளைஞர். அன்று எங்களது பள்ளிவாசலை தாக்கியவாறு எமது வீடுகளை உடைக்க வருவதாக கேள்விப்பட்டேன். நாங்கள் பாதைக்கு குறுக்காக இருந்து வருவதைத் தடுக்க முற்பட்டோம். சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் சென்றோம். அப்போது இருளடைந்திருந்தது. திடீரென தெருவிளக்குகளுக்கு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. முழுச் சூழலுமே இருளில் மூழ்கியது. அதனைத் தொடர்ந்து கடுமையான வெளிச்சமொன்று முகத்தின் மீது பாய்ச்சப்பட்டது. நான்கு பக்கத்திலிருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானித்தேன். எனது காலில் ஏதோ பட்டதை உணர்ந்தேன். அவர் சாரத்துக்குள் மறைந்திருந்த கட்டையான காலை வெளியே எடுத்தார். 18 வயதுடைய அழகான இளைஞன் அவர். அந்தப் பிரதேசத்தின் சிறந்த உதைபந்தாட்ட வீரனான அவன், மிகவும் கவலையோடிருந்தது காலில்லாத நிலையில் உதைபந்து எதற்கு என கூறுவது போலிருந்தது.

40 நாள்கள் வைத்தியசாலையில் இருந்தேன். குணமாக்க முடியாதெனக் காலை வெட்டி விட்டார்கள்.

இப்போது எனது வாழ்க்கை முடிந்து விட்டது. இனி எனக்குக் கால் இன்றி என்னைப்பற்றி யோசிக்கவே முடியாதுள்ளது. அவனது இரு கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. அவனது பேச்சை கேட்டுக் கொண்டிருந்த அவனது தாய் எம்மைவிட்டுமறைந்து விட்டாள். அது நாங்களும் சிங்களவர்கள் என்ற காரணத்தினாலும் இருக்கலாம்.

இவர் உதைபந்தாட்டப் போட்டியொன்றை கண்டு கழிப்பதற்கு கைத்தாங்கலோடு சென்ற வேளை- சிங்களவர்களது கூக்குரல் சத்தத்துக்கு ஆளாகிறார். இதன் பிரதிபலன் அன்று பொலிஸாரின் கெடுபிடிக்கு இலக்காகியதாகும். எனினும் முஸ்லிம் மக்கள் இதனை இதற்கப்பால் செல்லாது தடுத்துள்ளார்கள். அது மதிக்கப்படக்கூடிய தொன்றல்லவா? குடும்பத்தின் மூத்தவனான இவன் தந்தையை இழந்தவன். இன்று அந்தக் குடும்பத்தின் மூத்தவரது காலும் இழக்கப்பட்டுள்ளது.

**அனைத்தையும் இழந்தேன்**

இது காலையிழந்த மற்றொரு இளைஞன். அவர் சார்பாக அவரது தந்தை கருத்துக் கூறினார். பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இந்த 17 வயது இளைஞன் அழ ஆரம்பித்தான். இவர் இன்று கட்டிலோடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளார். இது எனது இரண்டாமவர். இந்தச் சம்பவம் நிகழும்போது நான் தொழில் வாய்ப்பொன்றுக்காக தென்னாபிரிக்கா சென்றிருந்தேன். இது பற்றி அறிந்தவுடன் வந்துவிட்டேன். உடனடியாக வந்ததன் காரணமாக எனக்கு கிடைக்கவிருந்தவற்றை மாத்திரமல்ல தொழிலையும் இழந்துள்ளேன். இன்று நாங்கள் அநாதைகளாகியுள்ளோம். போதாக் குறைக்கு எனது மகனின் காலையும் துண்டித்துள்ளார்கள். இந்தப் பிள்ளைக்கு வயது 17. இறந்தவர்கள் இறந்து விட்டார்கள். அந்தக்கவலை ஓரிரு மாதங்கள், வருடங்கள் கழிந்ததும் குறைந்து விடும். ஆனால் இந்தப் பிள்ளையைக் காணும் போதெல்லாம் எம்மால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது. நாம் என்ன தவறு செய்தோம். ஏன் இவ்வாறு செய்தார்கள்? அவரது கருத்துகள் வேகமாக வெளிவந்து கொண்டிருந்தன. எனது பிள்ளை அன்று துப்பாக்கிச் சூடுபட்டு நாகொடை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு உள்ளவர்கள் சிங்களவர்களைத் தாக்கினீர்களா? என்று கேட்டவாறு ஒதுக்கி வைத்துள்ளார்கள். ஒருநாள் முழுமையாக மருந்து வழங்காதிருந்துள்ளார்கள். அதன் காரணத்தால்தான் கால் அழுகியது. 45 நாள்கள் வைத்தியசாலையில் இருக்க வேண்டி நேரிட்டது. இன்னும் கட்டிலிலிருந்து இறங்கி நடமாட முடியாது.

இந்தத் தந்தையின் நிலைமையை புரிந்து கொள்ள முடிகிறது. கட்டிலில் இருந்த இளைஞன் அழத் தொடங்கினான். இந்த உறுதியற்ற தன்மையால் பாதிக்கப்படுவது தனது வாழ்க்கையென்பதை அவன் நன்றாக அறிந்திருந்தான். இந்த 17, 18 வயதுடைய சிறுவர்கள் செய்த தவறென்ன? எனினும் அவர்கள் இதற்கு நட்டஈடு செலுத்தியுள்ளார்கள். கறுப்பு ஜூலை அதிகமானோருக்கு மறந்து விட்டாலும் இந்த உயிர்கள் வாழும்வரை இவர்களது குடும்பங்களுக்கு இதனை மறந்து விட முடியுமா?

**நடமாடச் சிரமப்படுகிறேன்**

எனது தொடைக்கு துப்பாக்கிச் சூடுபட்டு, சன்னம் தொடையினுள் சிக்கியுள்ளது. அதனை எடுக்க முடியாதென நாகொடை வைத்திய சாலையில் கூறினார்கள். ஆயினும் எமது சகோதரர்கள் பணம் சேகரித்து நவலோகாவுக்கு அழைத்துச் சென்று குணப்படுத்தினர். எனது காலிலிருந்த ரவை அகற்றப்பட்டது. இன்னமும் நடப்பதற்கு கஷ்டமாக உள்ளது. எந்த நேரமும் மின்சாரம் தாக்குவது போல் உடம்பு புல்லரிக்கிறது என்று கூறுகிறார் மொஹமட் நசீம் என்ற இளைஞர்.

**மொஹமட் ராசிக்**

2014 ஜூன் 15ம் திகதி தர்கா நகரிலுள்ள வலிப்பிட்டிய முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்ட மொஹமட் ராசிக், எங்களது சகோதரர். 2014 ஜூன் 15ம் திகதி வலிப்பிட்டியவில் கலகக்காரர்களால் அவரது வர்த்தக நிலையம் கொள்ளையடிக்கப்பட்டு, எரிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்ததும் அங்கு சென்றேன். அந்த வர்த்தக நிலையத்துக்கு அண்மையில்தான் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருந்தது. மண்டையோட்டைச்சிதைத்துக்கொண்டு ரவை உள்ளே சென்றிருந்தது. வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே இறந்து விட்டார். அவருக்கு வயது 41. நால்கு இரண்டரை வயதுகளையுடைய இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். தற்போது அந்தப் பிள்ளைகளுக்கு போக, வர இடமில்லாதுள்ளது.

வீடு, கடைகளை நிர்மாணித்தாலும் அந்தப் பிள்ளைகளுக்கு தந்தை எங்கே? இந்தக் குடும்பத்தை பார்த்துக்கொள்வது யார்? எந்தவொரு நட்டஈடும் இந்த உயிர்களுக்கு இல்லை. இறுதியில் இது துப்பாக்கிச் சூட்டினால் அல்ல, வெட்டப்பட்டதால் என்ற நிலைக்கு அரசு வந்தது. சடலத்தைத் தோண்டியெடுக்குமாறு நாம் கூறினோம். ஏனென்றால் இறந்தவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். துப்பாக்கிச் சூட்டினால் தான் இறந்துள்ளாரென தற்போது ஏற்றுக் கொண்டிருக்கிறார்களாம். எமக்கு உடற்கூற்றுப் பரிசோதனை சான்றிதழொன்று வழங்கப்பட்டது. ஏனையவற்றைப் பெறுவதற்கு நாம் இதுவரை செல்லவில்லை.

*(தொடரும்)* நன்றி-ராவய

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சங்கரப்பிள்ளை
**செல்லத்துரை**

(ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை)



மலர்வு 18.01.1951 — உதிர்வு 01.10.2011

கண் இமைபோல எமைக்காத்த எம் தந்தையே!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்களின்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
மாரைக்காய்,
புலோலி தெற்கு, புலோலி. (52507)(4.6.3) குடும்பத்தினர்.


## உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளன பொதுக்கூட்டம்

தென்மராட்சி, செப்.29

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் நான்காவது ஆண்டு பொதுக் கூட்டமும் இயக்குநர் குழுத் தெரிவும் எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள ஹெக்டர் கொப்பேக்கடுவ கமநல ஆராய்ச்சி நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

கூட்டத்தில் இயக்குநர் குழுவுக்கு தலைவர், 2 உப தலைவர்கள், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் மற்றும் 6 உறுப்பினர்கள் உட்பட 12 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதாக சமாச தேசிய ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹேமந்தி குணசேகர அறிவித்துள்ளார்.

சமாசத்தில் 7 மாநகர சபைகள், 17 நகர சபைகள், 49 பிரதேச சபைகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

(வ-9)


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**ஆறுமுகம் கமலநாதன்**

(முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் வலிகாம வலயம் - B.A.Dip.in.Edu.S.L.P.S. Grade.I. English)

திதி: பூர்வபக்க ஷஷ்டி
(29.09.2014)

தோற்றம் 22.12.1939 — மறைவு 15.10.1999



மறைந்தும் மறையாமல் எம் உள்ளத்தில்
உறைந்து நிற்கின்றவரே
ஒளிர்கின்ற தீபத்தின் விரிகின்ற ஒளிச்சுடரே
ஆண்டவன் அடி அழைத்து
ஆண்டுகள் பதினைந்து ஆனதுவே

என்றும் உங்கள் நினைவில்
அன்பு மனைவி, குடும்பத்தினர்.
திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன்,
ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## எங்களுக்கு உயிர்தந்து உணர்வாய் எங்களுடன் வாழும் அப்பாவுக்கு ஐந்தாம் ஆண்டு கண்ணீர் பூக்கள்



அமரர்
**கந்தசாமி தங்கராசா (பத்தர்)**

திதி: (29.09.2014)
பூர்வபக்க ஷஷ்டி

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 15.04.1949 | 24.09.2009 |

அப்பா கண்மூடித் திறப்பதற்குள்
ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டது
நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து,
அப்பா இனி உங்களை எப்போது காணப் போகின்றோம்
எங்கள் அருமை அப்பா நீங்கள் எங்களுடன்
இருந்த நாள்கள் ஒவ்வொன்றும்
இனிமையானது அற்புதமானது
அவை மீண்டும் எங்களுக்கு கிடைக்காதா? அப்பா.

குடும்பத்தினர்.
கண்ணன் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28.11.1989
மறைவு 29.09.2011



அமரர்
**நவரத்தினம் அனோஜன்**

மூன்றாண்டுகள் ஓடோடிப் போனாலும் - உம்
நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு நீங்காது.
எம்மிடத்தில் இருந்து உம்மைப் பிரிப்பதற்கு
எப்படித்தான் ஆண்டவனுக்கு மனம் வந்ததோ
உம்முடன் வாழ்ந்த காலங்கள் திரும்பாதோ
என ஏங்கித் தவிக்கின்றோம்
என்றும் உம் நீங்கா நினைவில்
உம் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.



## ஆத்மசாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்



இணுவில் மேற்கைச் சேர்ந்த
அமரர்
**சோமசுந்தரம் விக்கினேஸ்வரன்**
(சாலினி அரைக்கும் ஆலை அன் இன்டஸ்றி உரிமையாளர்)

அகம் மகிழ 25.11.1944
அகம் நெகிழ 30.08.2014

30.08.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல்கூறி தேற்றியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், இறுதிக்கிரியைகளின் போது பல்வேறு வகைகளிலும் உதவி, ஒத்தாசை நல்கியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (29.09.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:** எமது தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

[illegible] கோயிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில். (52615)(7.6.3)

குடும்பத்தினர்
தொ.பே : 021 224 1730



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.03.1990 | 12.10.2013 |

**ஜெகநாதன் ஜெகரூபி புவிகரன்**

ஆண்டு ஒன்று ஆனதடி - உனை
எண்ணி கண்களும் தூங்க மறுக்குதடி
உன்னை, தினம் தினம் எண்ணி எமது இதயம்
குற்றுயிராய் துடிக்கின்றது.

அன்னாரின் முதலாம் ஆண்டு திவச நிகழ்வு 01.10.2014 புதன் கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து ந.ப. 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இமையாணன் கிழக்கு,
பாடசாலை வீதி, இமையாணன்.

குடும்பத்தினர்
T.P. : 077 822 2149

(49789)(7.6.3)

# டயமன்ஸ், கருணாகரன் வெற்றி

கரணவாய்.செப்.29

எதிரணியினர் தமக்குத்தாமே கோல் அடிக்க சுவாரசியமான வெற்றியைப் பெற்றுக்கொண்டது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக்கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதினர். ஆனால் அராலி அண்ணா விளையாட்டுக்கழக வீரர்கள் செய்த தவறினால் அவ்வணி வீரர்களே 6 ஆவது மற்றும் 12 ஆவது நிமிடங்களில் 'ஓன் கோல்' போட்டு தமது அணி வீரர்களையும் பார்வையாளர்களையும் வெறுப் பேற்றினர். தொடர்ந்து கோல் போடுவதற்கு கடுமையாகப் போராடிய டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் பிரதீபன் உதவியுடன் 14 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட டயமன்ஸ் அணியின் வெற்றி உறுதிசெய்யப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் 3:0 என்ற கோல் கணக்கில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் தொடர்ந்த ஆட்டத்தில் இரு அணியினரும் புது உத்வேகத்துடன் களமிறங்கினர். கோல்களைப் போடுவதற்கு கடும் முயற்சிகளை மேற் கொண்டும் அவை சாத்தியமற்றுப் போக, 3:0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

அதற்கு முன் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகமும் பண்டத்தரிப்பு பிறை ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதின மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் 2:1 கோல் கணக்கில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

கருணாகரன் அணி சார்பாக இளவரசன் 15 ஆவது நிமிடத்திலும், கவிகரன் 32 ஆவது நிமிடத்திலும் கோல் போட, பிறை ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சார்பாக நிதர்சன் 2 ஆவது நிமிடத்திலும் கோல் போட்டார். (ரி-108)

# கே.ஸி.ஸி.ஸி சம்பியன்

யாழ்ப்பாணம்.செப்.29

சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழகம் துடுப்பாட்டத்தில் சொதப்ப 8 இலக்குகளால் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கி சம்பியனானது கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக ஏ அணி.




கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ்.மாவட்ட ரீதியிலான விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் 40 ஓவர்களைக் கொண்டதாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 21.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் வினோத்குமார் 31 ஓட்டங்களையும், ஜேம்ஸ்யண்சன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கேஸிஸிஸிவிளையாட்டுக்கழக அணி சார்பில் பார்த்தீபன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சாம்பவன் 3.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், யனுதாஸ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும். ராகுலன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

76 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக ஏ அணியினர் 10.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இதில் சந்தியன் 12 ஓட்டங்களையும், உமாநாத் 15 ஓட்டங்களையும், ஜெயரூபன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும், யனுதாஸ் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்ற லைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக பந்துவீச்சாளர் டார்வின் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை வீழ்த்தினார்.

சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதினை சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் வினோத்குமாரும், சிறந்த பந்துவீச்சளாருக்கான விருதினை கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி வீரர் பார்த்தீபனும், சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதினையும், ஆட்ட நாயகனுக்குமான விருதினையும் கே.ஸி.ஸி.ஸி ஏ அணி வீரர் யனுதாஸும் பெற்றுக்கொண்டனர். (ரி-23-422)

# உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்.செப்.29

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் தலைவர் கிண்ணத்திற்கான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமையும், நேற்று ஞாயிற்றுக்கிழமையும் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

நேற்று இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் கனகபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்தது உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநகர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கீஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் வட்டக்கச்சி விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

# சமனிலை தவிர்ப்பு உதையில் கரவைச்சுடர் வெற்றி

கரணவாய், செப்.28

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளினதும் கோல் காப்பாளர்களின் அதீத முயற்சியுடன் கோல் போடும் அரிய சந்தர்ப்பங்களை தடுக்கப்பட சமனிலை தவிர்ப்பு உதை மூலம் எதிரணியை வீழ்த்தியது கரவைச் சுடர் விளை யாட்டுக் கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகமும், கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் போடுவதற்கு பலத்த முயற்சிகளை மேற்கொண்டபோதும் கோல் காப்பாளர்களின் முயற் சியால் அவை தடுக்கப்பட்டன. அதிலும் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகத்துக்கு 4 தடவைகள் இலகுவாக கோல் பெறும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அந்த அணியின் முன்னணி வீரர்கள் அவற்றை கோல் காப்பாளரை வெட்டி அடிக்க முற்பட்டு அனைத்தையும் வீணடித்தனர். இதனால் இரு அணியினரும் எவ்வித கோல் களையும் போடாத நிலையில் 0:0 என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

தொடர்ந்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் 5:4 என்ற நிலையில் கரவை சுடர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் முழுமையான ஆதிக்கம் செலுத்திய நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம், 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக பொபிநாத் 5 கோல் களையும் பிரியந்தன் ஒருகோலை யும் உசானந் 2 கோல்களையும், எதிரணியினர் ஒன் கோலும் ஒன்று போட்டனர். சென் தோமஸ் அணிசார்பாகரவி வர்மன் ஒருகோலைபோட்டார். (ரி-108)

# இன்றைய ஆட்டம்



கரணவாய்.செப்.29

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும்,

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(ரி-108)

# தீக்கம் உதைபந்தாட்ட தொடரின் முடிவுகள்

கரணவாய், செப். 29

விதுசன் அதிர்ச்சிக் கோல் அடிக்க 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம்.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் லீக் முறையிலான ஆட்டங்கள் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் சாவற்காட்டு மஹாத்மா விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ் ஆட்டம் தொடங்கி 2ஆவது நிமிடத்திலேயே அருமையான கோல் ஒன்றைப் போட்டு எதிரணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார் மனோகரா விளையாட்டுக் கழக வீரர் விதுசன். இதனால் சற்று நிலைகுலைந்த மஹாத்மா அணி வீரர்கள் தம்மை சுதாகரித்துக் கொண்டு எதிரணியினர் மேலதிக கோல்களைப் போடுவதை தடுத்ததுடன் தாம் கோல் போடுவதற்கும் பெரு முயற்சி செய்தனர். ஆனால் அவர்கள் கோல் போடுவதற்கு முட்டுக்கட்டை போட்டனர் மனோகரா அணியினர். இதனால் ஆட்டம் 1:0 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் ஆட்டம் விறு விறுப்பின் உச்சக் கட்டத்துக்கே சென்றது. இரு அணியினரும் கோல் போடுவதற்கு பகிரதப் பிரயத்தனம் செய்தனர். இச் சூழ்நிலையில் ஆட்டத்தின் 42ஆவது நிமிடத்தில் மனோகரா அணியின் மற்றொரு வீரரான அனோஜன் தனக்குக் கிடைத்த பந்தைச் சரியாக பயன்படுத்தி கோல் ஒன்றைப் போட அவ் அணியின் வெற்றி உறுதி செய்யப்பட 2:0 என்ற கோல் கணக்கில் மனோகரா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.



அடுத்து இடம்பெற்ற மற்றொரு பரபரப்பான ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் இரு அணியினரும் தலா ஒரு கோலைப் போட ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. லீக் முறையில் இப்போட்டி இடம்பெற்றதால் இரு அணியினருக்கும் புள்ளிகள் சமமாகப் பகிரப்பட்டன.

இப் போட்டியில் கொலின்ஸ் அணி சார்பாக நிசாந்தனும், நியூட்டன் அணி சார்பாக தார்மீகனும் தலா ஒவ்வொரு கோலைப் போட்டனர். (ரி-108)



# அரசியலுக்கு இடமில்லை

## அத்தப்பத்து



எந்த காரணங்களிற்காகவும் இலங்கைக் கிரிக்கெட் அணிக்குள் அரசியலை நுழைய விடமாட்டேன் எனத் தெரிவித்துள்ளார் அணியின் தலைமைப் பயிற்சியாளர் மாவன் அத்தப்பத்து.

இலங்கை அணிக்கு தலைமைப் பயிற்சியாராக பணியாற்றிய முன்னாள் இங்கிலாந்து வீரர் பால் பார்பிரஸ் கடந்த ஏப்ரல் மாதத்துடன் பதவி விலகியதைத் தொடர்ந்து, இலங்கை அணியின் முன்னாள் வீரர் மாவன் அத்தப்பத்து புதிய பயிற்சியாளராக கடந்த வாரம் நியமிக்கப்பட்டார்.
இந்த நிலையில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த மாவன் அத்தபத்து கூறுகையில், இலங்கையின் குடிமக்கள் என்ற ரீதியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவுள்ளதாகவும், எந்த காரணங்களிற்காகவும் இலங்கை கிரிக்கெட் அணிக்குள் அரசியலை நுழைய விடமாட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

# பேர்த்தை வீழ்த்தியது சென்னை

ஜடேஜா - டோனியின் அதிரடியான இணைப் பாட்டத்தின் மூலம் பேர்த் ஸ்கோர்சர்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதி வாய்ப்பைத் தக்கவைத்துக் கொண்டது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.
சம்பியன் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் பேர்த் ஸ்கோர்சர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வென்ற பேர்த் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்ய, சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான் ஸ்மித்தும், மக்கலமும் தலா 11 ஓட்டங்களிலும், அதிரடி வீரர் ரெய்னா ஒரு ஓட்டத்துடனும் நடையைக் கட்டி ஏமாற்றமளித்தனர். மிகவும் மெதுவான ஆரம்பத்தை பெற்ற சென்னை அணி 10ஆவது ஓவரிலேயே 50 ஓட்டங்களைக் கடந்தது. பின்னர் மான் கஸ் 18 ஓட்டங்களிலும், பிராவோ 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க சென்னை அணி 14.3 ஓவர்களில் 79 ஓட்டங்களை மட்டும் பெற்று 5 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் ஆடிய ஜடேஜா, டோனி இருவரும் அணியின் இலக்கை உயர்த்தினர். 16 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்ஸர்களை விளாசி 35 ஓட்டங்களை குவித்த டோனி இறுதி ஓவரில் ஆட்டமிழந்தார். 20 ஓவர்கள் முடிவில் சென்னை அணி 6 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. 28 பந்துகளில் 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 44 ஓட்டங்களைச் சேர்த்த ஜடேஜா இறுதி வரை ஆட்டமிழக் காமல் இருந்தார்.
இதையடுத்து 156 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பேர்த் அணிக்கு தொடக்க வீரர்களாக சிம்மன்ஸ்ஸும், வோஜஸும் அதிரடியான தொடக்கத்தை அளித்தனர். சிம்மன்ஸ் 13 ஓட்டங்கள் எடுத்தி ருந்த நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த வீரர்கள் பெரிதளவில் அதிரடியாக ஆடாத நிலையிலும், இலக்குகள் சரிக்கப் படவும் 20 ஓவர்கள் நிறைவில் பேர்த் அணி 7 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ளமுடிந்தது. இதன் மூலம் சென்னை அணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதி வாய்ப்பைத் தக்கவைத்துக் கொண்டது. ஆட்டநாயகனாக ஜடேஜா தெரிவானார். (ரி)

# முறியடிக்கப்பட்டது உலகசாதனை

பேர்லினில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் முன்னைய உல்க சாதனை முறியடிக்கப்பட் டுள்ளது.
பேர்லினில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் கென்ய ஓட்ட வீரரான டென்னிஸ் கிமெட்டோ பழைய சாதனையை முறிய டித்து புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். 30 வயதான கிமெட்டோ குறித்த மரதன் போட்டியில் மொத்தத் தூரத்தையும் 2 மணித் தியாலங்கள், 2 நிமிடங்கள், 57 விநாடிகளில் ஓடி முடித்தார். இது முன்னைய சாதனையை விட 26 விநாடிகள் குறைவானதாகும். அந்த சாதனையை கிமெட் டோவின் சொந்த ஊர்க்காரரான வில்சன் கிப்சங் கடந்த ஆண்டு இதே போட்டியில் படைத்திருந்தார். (ரி)



# லயன்ஸிடமும் தோற்றது டொல்பின்ஸ்

தொடர்ந்து மூன்றாவது தோல்வியையும் தழுவிக் கொண்ட டொல்பின்ஸ் அணி தொடரில் இருந்து வெளியேற, அரையிறுதிக் கனவைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டது லாகூர் லயன்ஸ்.
சம்பியன் லீக் தொடரில் நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் அணியும், தென்னாபிரிக்காவின் டொல்பின்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய லாகூர் அணி 5 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைச் சேர்த்தது.
தொடக்க வீரர்கள் சொதப்ப, 34 ஓட்டங்களுக்கே 4 இலக்குகளை இழந்த போதும், நஸிம், உமர் அக்மல், ராஸ்கா ஆகியோர் டொல்பின்ஸ்ஸின் பந்து வீச்சை அடித்தாடினர். இதில் அதிகபட்சமாக உமர் அக்மல் 5 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். நஸிம் 43 ஓட்டங்களையும், ரஸ்கா 19 ஓட்டங்களையும் பெற்றனர்.
பின்னர் 165 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு ஆடிய டொல்பின்ஸ் தொடக்கத்தில் இருந்தே திணறியது. வான்வைக் 36 ஓட்டங்களையும், வன்டியர் 29 ஓட்டங்களையும் பெற்றனர். இறுதி நேரத்தில் அதிரடியாக ஆடிய பிரைஸிங் 27 பந்துகளில் 6சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் விளாசி 63 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இவரது தனிமுயற்சி பலிக்காமல் போக, 20 ஓவர்களில் டொல்பின்ஸ் அணி 9 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களை மட்டுமே பெற்று 16 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. ஆட்டநாயகனாக உமர் அக்மல் தெரிவானார். தொடர்ந்து 3ஆவது தோல்வியைத் தழுவிய டொல்பின்ஸ் அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது. இன்னும் ஒரு ஆட்டம் மீதமுள்ள நிலையில் லாகூர் அணியின் அரையிறுதி வாய்ப்பு தொடர்ந்தும் நீடிக்கிறது. (ரி)





# உயரத்தில் நடந்த கிரிக்கட் போட்டியானது உலக சாதனை

இங்கிலாந்து முன்னாள் வீரரான ஆஷ்லி ஜைல்ஸ் தலைமையிலான ரைநோஸ் அணி 10 ஓவர்களில் 9 இலக்குகளைக்ளை இழந்து 64 ஓட்டங்களையே பெற்றனர். இதில் நீட்னி, ஸரிபன் ஸ்மித் ஆகியோரும் பங்குபற்றி இருந்தனர்.
நீதி சேகரிப்புக்காக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 8 நாட்கள் மலையேறி குறித்த உயரத்திற்கு சென்று இந்த ஆட்டத்தில் வீரர்கள் விளையாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

[illegible]

## இன்றைய CLT-20 ஆட்டம்

இரவு 8 மணி

டொல்பின்ஸ் Vs கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

# அரையிறுதிக்கு முன்னேறியது கோபேர்ட் ஹரிக்கேன்ஸ்



டொஹெற்றியின் சுழலுக்குத் தாக்கு பிடிக்க முடியாமல் பார்படோஸ் வீரர்கள் ஆட்டமிழக்க, சம்பியன் லீக் ரி- 20 தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் பார்படோஸ் ரிடென்ற்ஸ் அணியை எதிர்த்து கொபேர்ட் ஹரிக்கேன்ஸ் அணி

மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோபேர்ட் அணி, பார்படோஸை துடுப்பெடுத் தாடப் பணித்தது. அதன்படி களமி றங்கிய பார்படோஸ் அணியின் வீரர்கள் சீரான இடைவெளிகளில் ஆட்டமிழக்க 19.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 113 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பாக கார்ரெர் 42 ஓட்டங்களையும், முனவீர 18 ஓட்டங்களையும், பிராங் ளின், கொசின் தலா 12 ஓட்டங்க ளையும் பெற்றுக்கொள்ள ஏனை யோர் ஒற்றை இலக்கங்களுடன் சுருண்டனர். பந்து வீச்சில், ஹரிக் கேன்ஸின் டொஹெற்றி 4 இலக்குக ளையும், ஹல்பினாஸ், பொலிஞ்சர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தி னர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய கோபேர்ட் ஹரிக்கேன்ஸ் அணி 18.2 ஓவர்களில் 4 இலக்கு களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை எட்டியது. சொய்ப் மலிக் 39 ஓட்டங்களையும், வெல்ஸ் 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். ஆட்டநாய கனாக பந்துவீச்சில் அசத்தி பார்ப டோஸை நிலைகுலையச் செய்த டொஹெற்றி தெரிவானார். (ரி)



## சேனநாயக்க பந்து வீசலாம்

கிரிக்கெட் சபையினால் பந்து வீச முடியாது என தடை செய்யப்பட்ட இலங்கை கிரிக் கெட் அணியின் வீரர் சசித்திர சேனநாயக்க, இலங்கையில் நடைபெறும் உள்ளூர் ஆட்டங் களில் பந்துவீச இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி வழங் கியுள்ளது. இதன்படி நவம்பர் மாதம் ஆரம்பிக்க வுள்ள வர்த்தக நிறுவன கிரிக்கெட் ஆட்டங் களில் சசித்திர சேனநாயக்க பந்து வீச வுள்ளார்.

பந்தை விதிமுறைகளை மீறி வீசி எறிகின்றார் என சர்வதே சக் கிரிக்கெட் சபை, சோதனை களின் பின் சசித்திர சேனநாயக்க பந்துவீச முடியாது என அண்மையில் தடைசெய்திருந்தது. இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா சென்று தனது பந்துவீச்சில் மாற்றங்களை செய்து நாடு திரும்பினார். சசித்திர சேனநாயக்கவின் பந்துவீச்சில் மிகப் பெரிய முன்னேற்றம் உள் ளதாகவும், ஆஸ்திரேலியாவில் மேற்கொண்ட பயிற்சி மூலம் அவரின் பந்து வீச்சுக் கோணம் 15 பாகையினுள் வந்துள்ளதால் இனி அவர் பந்துவீச முடியும் எனவும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ரி)

## சதமடித்திருந்தால் துடுப்பு

நோர்தர்ன் டிஸ்ரிக்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் வோக்ரா சதமடித்தால் அவருக்கு தனது துடுப்பை பரிசளிக்க வேண்டும் என விரும்பியதாக தெரிவித் துள்ளார் பஞ்சாப் அணியின் தொடக்க ஆட்டக்காரரான விரேந்திர சேவாக்.

மொகாலியில் கடந்த வெள் ளிக்கிழமை நடைபெற்ற சம்பியன் லீக் ரி- 20ஆட் டத்தில் 120 ஓட்டங்களால் நோர்தன் டிஸ்ரிக்ஸ் அணி யைத் தோற்கடித்த கிங்ஸ் லெவன் பஞ்சாப் அரை யிறுதிக்கு முன்னேறியது.

அந்த ஆட்டத்தில், முதலில் துடுப் பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு தொடக்க ஜோடியான சேவாக் - வோக்ரா அதிரடியான தொடக்கத்தை அளித்து 215 எனும் இமாலய இலக்கை நிர்ணயிக்க வழி செய்த னர். இதில், 32 பந்துகளில் வோக்ரா 65 ஓட்டங்களைக் குவித்தார்.

வெற்றிக்கு பின்னர் பேசிய சேவாக், இந்த ஆட்டத்தில் சதமடித்தால் எனது துடுப்பை உங்களுக்கு பரிசளிக்கிறேன் என வோக்ரா விடம் கூறியிருந்தேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரால் சதமடிக்க முடியாமல் போய்விட்டது. மொகாலி ஆடுகளம் ரி- 20 ஆட்டத்துக்கு ஏற்றதல்ல. பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருந்தது. துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்தை அடிக்கலாமா என சிந்திப் பதற்குள் பந்து சுழன்று எங்கேயோ போய் விடுகிறது. பாராட்டுகள் அனைத் தும் எங்கள் அணி யின் துடுப்பாட்ட வீரர்களுக்கே சேரும் என்றார். (ரி)

## தொடர்ச்சிகள்

### ஐ.நா. விசாரணைகள்

மனித உரிமைகள் சபைக்குத் தெரியப்படுத்தியுள்ளது. மேலும், இலங்கை அரசால் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வுள்ள சாட்சி பாதுகாப்பு சட்ட வரைவை கவனமாக பரி சீலிப்பதாகவும் தெரிவித்துள் ளது. அதாவது குறித்த சட்ட வரைவு சர்வதேச நியமங்க ளுக்கு ஏற்புடையதாக உள் ளதா? என்பதை தீவிரமாக ஆராய்வதாக அது சுட்டிக்காட் டியுள்ளது.

இந்தச் சட்டவரைவு தொடர் பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம், தம்மிடம் சுட்டிக்காட் டியுள்ளமையை ஐக்கிய நாடு களின் மனித உரிமைகள் அலு வலகம் குறிப்பிட்டுள்ளது.(ந-5)

### வலி.தென்மேற்கு

கடந்த வெள்ளிக்கிழமை தவி சாளர் எஸ்.சிவகுமார் தலைமை யில் சபை மண்டபத்தில் நடை பெற்றது.

நிகழ்ச்சி நிரலின்படி காலை 9.30 மணிக்கு இறைவணக் கத்துடன் ஆரம்பமான இந்தக் கூட்டம் தவிசாளரின் தலைமை யுரையைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டறிக்கை, செயற் பாட்டு அறிக்கை வாசிக்கப் பட்டுத் திருத்தங்களுடன் ஏற் றுக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் ஏற்கனவே வாக்கெடுப்புக்கு விடப்பட்டுத் தீர்மானிக்கப்பட்ட விடயம் குறித்து ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் பேச முற்பட்டபோது முடிந்த விட யத்தைப் பற்றிப் பேச வேண் டாம் என்றும் கதிரை யில் அமருமாறும் பல தடவைகள் தவிசாளர் கூறிய போதும் உறுப் பினர் தொடர்ந் தும் தனது கருத் தைத் தெரிவிக்க முற்பட்டதால் அமை தியை நிலைநாட்ட முடியாத தவி சாளர் கூட் டத்தை இடை நடுவில் ஒத்தி வைத்து சபையை விட்டு வெளி யேறினார்.

கூட்டம் ஒத்தி வைக்கப்பட்ட தால் அன்றைய கூட்டத்தில் ஆராயப்படவேண்டிய பல அபி விருத்தி வேலைத்திட்டங்க ளும் மற்றும் பல முக்கியமான விடயங்களும் கிடப்பில் போடப் பட்டுள்ளன. இதேவேளை, பிர தேச சபையின் மாதாந்த, விசேட கூட்டங்கள் கடந்த காலங் களில் பல தடவைகள் நிறைவு பெறா மல் ஒத்திவைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (ந-115)


**வாடகைக்கு**

யாழ்நகர மத்தியில் பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் இரு அறைகள், வரவேற்பறை மற்றும் சமையல் அறை, குளியலறையென ஒன்றி ணைந்த சிறிய வீடு வாடகைக்கு உண்டு வங்கி, அரசாங்க ஊழியர் மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்ந்த மூன்று பேர்கொண்ட குடும்பத்தினருக்கு ஏற்றது. முற்பணம் எதிர்பார்க்கப்படும். (52666)

தொடர்புகளுக்கு 077 516 0291


### ஓமந்தையில்

வத்தினர் பிடித்தனர்.

ஏன் அவரைப் பிடிக்கின்றீர்கள் என்று கேட்டதற்கு, விசாரணை செய்த பின்னர் விடுவிப்பதாகத் தெரிவித்து அவரைப் பிடித்தனர். அதன் பின்னர் எனது சகோதர னுடன் எனக்கு எந்தத் தொடர் பும் இல்லாமல் போய்விட்டது. அவரை இன்று வரையில் காண வில்லை" என்று அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

இன்னொரு பெண்மணி சாட்சி யமளிக்கையில், "2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, எனது கணவருடன் இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் வந்தேன். இதன் போது இராணுவத்தினர், தமிழீழ விடு தலைப் புலிகள் அமைப் பில் இருந்தவர்களைச் சரணடை யுமாறு ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தனர். அதனடிப்படை யில் எனது கணவர் இராணு வத்தினரிடம் சரணடைந்தார். அவரைப் போன்று பலர் அங்கு சரணடைந்தனர்.

அதன் பின்னர் இராணுவத் தினர் என்னை, நலன்புரி நிலை யத்துக்கு அனுப்பினர். இராணு வத்தினரிடம் சரணடைந்த கணவர் இன்று வரையில் வீடு வரவேயில்லை"- என்று சாட் சியமளித்தார். (ந-5.18)

### காரைநகர்

ருந்தவர். அப்போது கோட்டை அடிபாடு நடந்தது. இதனால் பாடசாலைகள் விடுமுறை விடப் பட்டிருந்தது. பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்ப தைப் பார்ப்பதற்காக எழுவை தீவிலுள்ள எங்கள் வீட்டிலி ருந்து படகில் புறப்பட்டு, ஊர்கா வற்றுறை சுருவிலுக்கு படகில் சென்றார். அங்கு சென்று, நண்பர்களிடம் பாடசாலை ஆரம் பமாகவில்லை என்ற தகவ லைப் பெற்று படகில் மீள திரும்பி வந்துள்ளார். அவருடன் 12 பேர் வந்தனர்.

இதன் போது கடலில் துப்பாக் கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. எனது மகன் வீடு வரவில்லை. சில தினங்களின் பின்னர் மீன்பிடிக்கச் சென்றவர்கள், எனது மகனும் ஏனைய 12 பேரும் பயணித்த படகை காரை நகர் கடற்படை முகாமில் கண் டனர். ஆனால் 24 வருடங்கள் கடந்தும் எனது மகன் எனக்கு இன்னமும் கிடைக்கவில்லை" என்று அவர் தனது சாட் சியத்தில் குறிப்பிட்டார். (ந-5)

### பணம்

வீட்டினுள் 10 பேர் வரையில் வந்தனர். வெளியில் 20 பேருக்கு மேற்பட்டோர் நின்றி ருந்தனர். சிங்களத்தில் கதைத் தவர்களே மருமகனை கடத்திச் சென்று பவள் வாகனத்தில் ஏற் றினர். பூவரசங்குளம் 10 ஆம் கட்டையடியிலுள்ள இராணுவ முகாமுக்கு அந்த பவள் வாக னம் சென்றதாகக் குறிப் பிட்டார்.

அதே போன்று தனது 13 வயதான மகன் தலைமுடி வெட் டுவதற்காக வவுனியாவுக்குச் சென்ற போது காணாமற் போனார். அவர் காணாமற் போன போது அந்தப் பகுதியை ஸ்ரீலங்கா படையினரே கட்டுப் பாட்டினுள் வைத்திருந்தனர். இந்த நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு எனது கணவர் வவுனியாவுக்குச் சென்ற போது, தம்மை சி.ஐ.டி என்று அறி முகப்படுத்திய இருவர், பொலிஸ், ஆமி ஒரு இடமும் போக வேண்டாம். உங்கள் மகன் சிறைச்சாலையில் இருக்கின் றான். அவன் வருவான் என்று தெரிவித்து தங்களது தொலை பேசி இலக்கத்தையும் குறித்துக் கொடுத்தனர். ரஞ்சித், சமீரவே அவ்வாறு தொலைபேசி இல கத்தை தந்தார் என்று குறிப் பிட்டார்.

இதன் போது ஆணைக்குழு வின் தலைவர், அப்படியான வர்களுடன் தொடர்பு வைத்தி ருக்க வேண்டாம். அவர்கள் போலிகள். காசு பறிப்பதற்காக இவ்வாறு செயற்படுகின்றனர். அவர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று தெரிவித் தார். (ந-5)

### சரமாரியாக

யில் இடம்பெற்று வருகின்றது. கடந்த ஜூலை மாதம், ஆணைக் குழுவின் விடயப் பரப்பில் இறு திக் கட்டப் போர்க் குற்றம் தொடர்பிலும் விசாரணை மேற் கொள்ளுமாறு ஜனாதிபதியி னால் பணிப்புரை விடுக்கப் பட் டிருந்தது. அதற்கமைய போர்க் குற்ற சாட்சியங்கள் திரட்டும் நோக்கிலான கேள்விகள் ஆணைக் குழுவினரால் எழுப்பப்பட்டு வருகின்றது. அதனடிப்படை யில் கிளிநொச்சி முழங்காவி லில் இடம்பெற்ற அமர்வில் இந்தக் கேள்விகள் ஆணையா ளரால் எழுப்பப்பட்டிருந்தது.

மக்களுடன் மக்களாக சிவில் உடையில் எல்.ரீ.ரீ.யினரும் வந்தனரா? என்று ஆணைக்கு ழுவினர் எழுப்பிய கேள்விக்கு, அவ்வாறு அவர்கள் வரவில்லை என்றே பெரும்பாலானவர்கள் பதிலளித்தனர். மக்களுடன் நின்ற எல்.ரீ.ரீ.யினர் இராணு வத்தினர் மீது சுட்டார்களா ? என்று கேட்ட போது அவ்வாறு சம்பவம் ஒன்று இடம்பெற வில்லை என்று மக்கள் தெரி வித்தனர். உங்களை இடம் பெயர வேண்டாம் என்று யாரா வது தடுத்தார்களா ? என்ற கேள்விக்கு சகலரும் அவ்வாறு யாரும் தடுக்கவில்லை என்று தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்து தங்க வைக்கப் பட்டிருந்த அகதி முகாமிலி ருந்து யாராவது களவாக வெளி யேறிச் சென்றார்களா ? என்ற கேள்வி சிலரிடம் மாத்திரமே எழுப்பப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளித்த மக்கள், தங்களுக் குத் தெரியவில்லை என்றும், ஒருவர் மாத்திரம், அவ்வாறு பணம் கொடுத்து களவாகச் சென்றதாக கேள்விப்பட்டதாகத் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல், கடற்படையினரின் 'கண் போர்ட்' தாக்குதல், கிபிர் தாக்குதலாலேயே தாம் இடம் பெயர நேரிட்டது என்றும் மக்கள் சாட்சியம் வழங்கினர். (ந-5)

### ஐ.நா. விசாரணைக்குழு

இன அழிப்பின் மூலமான இனப் பரம்பலை மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவ டிக்கைகள் தொடர்பிலும் அவர் சாட்சியமளித்துள்ளார்.

வாய்மொழி மூலமான் சாட்சி யத்துக்கு மேலதிகமாக 40 பக்கங்களைக் கொண்ட ஆதா ரங்களையும், ஐ.நா விசார ணைக் குழுவிடம் அவர் சமர்ப் பித்துள்ளார். (ந-5)

### யுவதி சாவு;

யில் சடலமாகக் காணப்பட்டுள் ளார். அது தொடர்பில் பொலி ஸார் விசாரணை மேற் கொண்டுள்ளனர். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். உடற்கூற் றுப் பரிசோதனை யின் பின்னர் சடலம் உறவி னர்களி டம் ஒப்படைக்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணை மேற் கொண்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ந-4)




**மரண அறிவித்தல்**

**வினாசி ஞானப்பிரகாசம்**

நீர்வேலி தெற்கு வெள்ளந்தள்ளியைப் பிறப்பிடமாகவும் இல 85 கன்னாதிட்டி யாழப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசி ஞானப்பிரகாசம் கடந்த (27/09/2014) சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசி-பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவரான பொன்னையா மற்றும் பவளம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் மரியமலரின் அன்புக் கணவரும், சசிகரன், சசிப்பிரியா (ஜேர்மனி), சசிசோமியாழினி (சோபிகா), சசிநிக்ஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதா(ஆசிரியர்,யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம் ), ஜெயகாந்த்(ஜேர்மனி), மயூரன் ஆகியோரின் மாமனாரும், ஜான்சன் (ஜேர்மனி), கீரா (ஜேர்மனி) மதுமிதா, திவ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற தேவராசா செபமாலையம்மா (ராணி), சகாயமலர் (பட்டு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரிபூரணம் (குஞ்சு), பாக்கியநாதன், பிரான்சிஸ், மரியதாஸ், மரியராணி, பழம், சுரேஜினி, சுகந்தினி, தவராசா, ஆனந்தராசா, செல்வரத்தினம், காலஞ்சென்றவர்களான சுரேஸ், பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்சடங்குகள் (30/09/2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நீர்வேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி பரலோகமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டு நீர்வேலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பூதர்மடம் வீதி,நீர்வேலி தெற்கு.
T.P: 077 132 1871

(52698)

தகவல்:
குடும்பத்தினர்

# தீர்வு கிடைக்காவிடில் உயிரைப் பணயம் வைத்து நிச்சயம் குதிப்போம் சாத்வீகப் போராட்டத்தில்

## மட்டக்களப்பில் தலைவர் மாவை சேனாதிரராசா தெரிவிப்பு



மட்டக்களப்பு, செப். 29

தீர்வு வழங்கப்படாவிட்டால் அடக்குமுறைக்கு எதிராக உயிரைப் பணயம் வைத்து நாம் சாத்வீகப் போராட்டத்தில் நிச்சயம் குதிப்போம்' என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கிளைக்கான புதிய நிர்வாகிகளுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு, துளசி மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தீர்வு வழங்காவிட்டால் எமது கட்சியின் மாநாட்டு பிரகடனத்தின் பிரகாரம் நாம் எமது சாத்வீகப் போராட்டத்தை தொடங்குவோம். இதற்காக தமிழ் மக்கள் அனைவரும் எமக்கு பின்னால் அணிதிரள வேண்டும். இந்த அரசாங்கம் மட்டுமல்ல, சிங்கள தலைவர்கள் அனைவருமே எம்மை ஏமாற்றி வந்துள்ளனர். ராஜபக்ஷ அரசு தமிழ்த் தேசத்தை அழித்து வருவதுடன் தமிழ் பிரதேசங்களில் அராஜகத்தையும் அடக்குமுறையையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

முஸ்லிம்களின் மத அடையாளத்தையும் இனத்தின் பெயரால் அழித்து வருகின்றது. தமிழர்களின் காணி இன்று இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் எமக்கான தீர்வு வழங்காவிட்டால் நாம் சாத்வீகப் போராட்த்தில் இறங்குவோம். இதற்காக முஸ்லிம்களின் ஒத்துழைப்பையும் மலையக மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் இந்த சாத்வீகப் போராட்டத்தை நடத்துவோம்.

தமிழ் பேசுகின்ற மக்கள் அனைவரும் முஸ்லிம்கள் சிவில் அமைப்புகள் மலையக தமிழர்கள் ஒன்றிணைந்தால் சாத்வீகப் போராட்டம் வெற்றியடையும் இதற்கு நாம் தயாராக வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்த மாகாணமாகவே எப்போதும் இருக்க வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒருங்கிணைத்துப் பார்த்தால் எமக்கு 41 ஆசனங்கள் இருக்கின்றன. சிங்களவர்களுக்குள்ள இறைமையும் நீதியும் தமிழ் பேசுகின்ற மக்களுக்கும் இருக்கின்றது. நீதியும் சமத்துவமும் பேணப்படல் வேண்டும். அந்த நீதிக்காக தமிழரசுக்கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் குரல் கொடுக்கும். இந்திய பிரதமரும் தமிழ் மக்களின் தற்போதைய நிலை பற்றி நன்றாக விளங்கிக் கொண்டுள்ளார். இது எமக்கு சாதகமாக அமையும்.

என்னைத்தலைவர் என்று சொன்னபோது எனக்கு கஷ்டமாக இருந்தது. எனது வரலாறு இரத்தம் தோய்ந்த வரலாறு. அன்று நான் இளைஞனாக இருந்த போது சாத்வீக போராட்டத்துக்காக மட்டக்களப்புக்கும் வந்துள்ளேன். அப்போது நான் கைதுசெய்யப்பட்டேன். மட்டக்களப்பு சிறைச்சாலையில் எந்தவித விசாரணையுமின்றி ஏழு எட்டு மாதங்கள் அடைத்து வைக்கப்பட்டேன். தமிழ் மக்களும், முஸ்லிம்களும் ஒன்றாக சேர்ந்து இந்த அடக்குமுறைக்கு எதிராக அணி திரள்வதுடன் எமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' எனத் தெரிவித்தார். (ஒ-10)

# நெஞ்சக் கதவில் கொஞ்சம்........

## நாக்குச் செத்துப் போனவர்கள்

அக்கரைச்சீமையில் இருந்து தாய் மண்ணுக்கு வந்த ஒரு தம்பதியர், தாம் சென்ற முறை வந்துபோன போது எடுத்துச் சென்ற பயத்தம்பணியாரம், அரியதரம், சிப்பிப்பணியாரம், முறுக்கு, எள்ளுப்பாகு ஆகியவற்றை சுவைத்த அந்த நாட்டவர்கள், எவ்வளவு காசு என்றாலும் திரும்பி வரும் போது உற்பத்தி நிறுவனங்களில் ஓடர் கொடுத்து இந்தப் பலகார வகைகளைக் கூடுதலாக வாங்கி வருமாறு கோரியதாகவும், "நல்ல வேளை இவர்களுக்கு தோட்டச்சு, பால்ரொட்டி கொண்டு போய் காட்டாமல் விட்டது. இங்குள்ளவர்களது சீத்துவம் அவர்களுக்கு எங்கே தெரியப்போகுது" எனச் சலித்துக் கொண் டனர். சில வீட்டுக் கேற்களில் "உழுந்து அரைத்துக் கொடுக்கப்படும்" என்ற அறிவித்தலை இவர்கள் பார்த்தால் காலப்போக்கில் எங்கள் சமையல் தளபாட உபகரணங்கள் ஒதுக்கப்பட்டு விடும் எனும் முடிவுக்கும் வந்துவிடலாம்.

இப்போது யாழ். நகரில் தெருவுக்குத் தெரு இரண்டு மூன்று என சைவ, அசைவ உணவகங்கள் பெரும் எடுப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உபசாரங்களும் அந்த மாதிரித்தான். தடல்புடலான விளம்பரங்கள் வேறு. முன்னரெல்லாம் தொழில்களின் நிமித்தம் வெளியூர்களில் இருந்து வந்து வாடகை அறைகளில் தங்கி இருப்போரில் அதிகமானோர் சம்சாரியோ, பிரமசாரியோ மூன்று வேளையும் கடைச்சாப்பாடுதான். நாக்குச் செத்துப் போச்சு என்றும், அல்சர் வந்து விட்டது என்றும் எப்போ ஊருக்குப் போய் வீட்டுச்சாப்பாட்டை வாய்க்கு ருசியாக சாப்பிடலாம் என்றிருப்பர். இன்றோ குடும்பமாக உள்ளவர்களே வீட்டுச்சாப்பாடு அலுத்து விட்டது என உணவகங்களுக்கு வருகின்றனர்.

முன்னரெல்லாம் சில கிராமங்களில் மட்டும் தேத்தண்ணிக் கடை என்ற பெயரில் ஓலைக் கொட்டிலாலான உணவகங்கள். பிளேன்ரீ, வாய்ப்பன், உள்ளூர் பணிஸ், பிஸ்கற், வாழைப்பழம் ஆகியனதான் விற்பனைப் பண்டங்கள். ஏனெனில் இவை நான்கைந்து நாள்கள் வரை தாக்குப் பிடிக்கும். அழுகும் வாழைப்பழங்கள் வாய்ப்பனாகிவிடும். இலையான் கலைத்துக் கொண்டிருந்தாலும் முதலுக்குமோசமில்லை. அந்த அளவுக்கு வியாபார லட்சணம். இப்போ இங்கும் சந்திக்குச் சந்தி சைவ. அசைவ உணவகங்கள். ரொட்டி, றோல்ஸ், மிதிவெடி, கொத்து, பன்ரா, பெப்சி என்று போகிறது. வீட்டுச் சாப்பாட்டுக்கு நாக்குச் செத்துப் போச்சு என்று சொன்னாலும் ஆச்சரியமில்லை. எல்லாம் பணநாதனின் தாராளப் புரளுகையாக்கும்.

செல்வவேலாயுதம்.

## பாடசாலைக்கு தளபாடங்கள்

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களை விநியோகிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நிலாவெளி அல் பத்தாஹ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவற்றை வழங்கினார். இந்த நிகழ்வின் அல் பத்தாஹ் மகா வித்தியாலய அதிபர் பஸீல் உட்பட ஊர்ப்பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-10)

## தச்சர் வீதி மதகை புனரமைக்குமாறு கோரிக்கை

கல்முனை, செப், 29

கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிராமத்தின் தச்சர் வீதி மதகை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் கூறுகையில்.

நீண்ட காலமாக இந்த மதகு உடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினை குறித்து உரிய தரப்பினருக்கு அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் மக்கள் போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாம் நீண்ட காலமாக மாற்று வீதிகளையே பயன்படுத்திவருகின்றோம். இந்த மதகினுள் முதியவர் ஒருவர் விழுந்து படுகாயமடைந்ததுடன் வாகனங்களில் செல்பவர்களும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே எதிர்வரும் காலம் மழை காலம் என்பதை கருத்தில் கொண்டாவது உடைந்த மதகினை திருத்தி அப்பகுதியூடான போக்கு வரத்தினை சீர்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்,

(ஒ-10)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




2014ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி
161 (நூற்றி அறுபத்தி ஒன்று) புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த
எமது பாடசாலை மாணவன்
**செல்வன் வ.சுபிராஜ்**
இனைப் பாராட்டி வாழ்த்துவதோடு
வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற செல்வி ம.மீரா 154 புள்ளிகள்,
செல்வி சி.திபியா 151 புள்ளிகள்
ஆகியோரையும் இவர்களைக் கற்பித்த ஆசிரியரையும் மனதார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்
யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை
தெல்லிப்பழை.

**மருந்தாளர் வகுப்புக்கள்**
**Pharmacy Classes**

- தகைமை – க.பொ.த (உ/த) கணித/விஞ்ஞான பாடத்தில் சித்தி (வயது எல்லை இல்லை)
- அரச வைத்திய வித்தியாலயத்தினால் (Ceylon Medical College Council) நடத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்காக விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டது.
- முழுமையான செயன்முறை பயிற்சிகளை உள்ளடக்கியது.
- வகுப்புக்கள் சனி/ஞாயிறு தினங்களில் பதிவு செய்யப்பட்ட அனுபவம் வாய்ந்த தகுதியான மருந்தாளர்களினால் நடத்தப்படுகின்றது.


ஆரம்பம்:
03.10.2014
பி.ப. 4.00 மணி
(விஜயதசமி அன்று)

உடனடி வேலைவாய்ப்பு நிச்சயம்

தொடர்புகளுக்கு:
072 706 3300
076 668 8287

**Institute of Family Medicine**
No. 125, Main Street, Jaffna. (52688)(7.6)

**கண்ணீர்த் துளிகள்**



**திருமதி பாமதி அமிர்தகுமார்**
(ஆசிரியை - யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்)

பதினாறு ஆண்டுகள் சீரிய தமிழ்ப் பணி புரிந்து மாணவர்கள் உயர்வுக்கு உழைத்து அமரத்துவம் அடைந்த திருமதி பாமதி அமிர்தகுமார் அவர்களுக்கு எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்),
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்), தமிழ்பாட ஆசிரியர்கள்,
**வலிகாமம் கல்வி வலயம்.**
(ே15988) (12.6)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள உணவகத்துக்கு கொத்துரொட்டி, அப்பம் மற்றும் ஏனைய உணவுகள் தயாரிக்கும் முன் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
தொ.பே: 077 352 4810
(52687)(12.6)

**விற்பனைக்கு**

100 அடி சோடினைப் பந்தல் செற், பூ மணவறைகள் செற்றும், கண்ணாடியினாலான தளபாட செற்றும், பன்சி ஹவுஸ் அழகுசாதனப் பொருள்களும், கண்ணாடியினாலான தளபாட செற்றும் விற்பனைக்குண்டு. (52690) (12.6)
தொ.பே: 077 975 0846/ 077 855 9884/021 300 2162

**முதலாம் ஆண்டு நீங்கா நினைவினிலே**

அன்னை மடியில்
03 . 12 . 1933



இறைவன் அடியில்
09 . 10 . 2013

அமரர் **தம்பு மயில்வாகனம்**

திதி: பூர்வபக்க பஞ்சமி

நினைவகலா நினைவுடனே இறையடி சேர்ந்து
இன்று ஓராண்டு கடந்ததுவோ
நிழலாக எம்மனதில் என்றுமே வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
எல்லாம்வல்ல மாவடி விநாயகனை
இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்....
குடும்பத்தினர்.
மத்திய வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
(C15387)(12.6)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28.11.1989

மறைவு 29.09.2011



அமரர்
### நவரத்தினம் அனோஜன்
(அப்பன்)

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை உன் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத அப்பனே
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கைதடி, நுணாவில்
சாவகச்சேரி

என்றும் உன் நினைவுடன்
சாாஸ் மின் ஒப்பந்தக்காரரும்,
சகஊழியர்களும்

(52694)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



64/4 A பொற்பதி வீதி
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

### வினாசித்தம்பி காசிலிங்கம்

திதி 29.09.2014

ஆண்டுகள் இரண்டு
சென்றாலும் - எம்
ஈரவிழிகள் இன்னும்
காயவில்லை அப்பா
ஆண்டவன் அடியில்
இருந்து எம்மை
ஆசீர்வதியுங்கள்
எம் ஆருயிர் அப்பா

குடும்பத்தினர்

## காணவில்லை



கிறிஸ்து அரசர் ஆலயம், ஊரியவத்தை, புலோலி வடக்கு பருத்தித்துறையை சேர்ந்த **ஜெகநாயகம் சுரேஸ்** என்பவரைக் காணவில்லை. அவரை கண்டவர்கள் கீழ் வரும் T.P எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு :குடும்பத்தினர்
077 8073317
077 9538099

(கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.)


## திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

Play Group மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கான அனுமதி :

இன்றைய சிறாங்களின் ஆளுமை வளர்ச்சியில் வழமையான அம்சங்களுடன் ஆங்கிலமும் கணினியும் அவசியமென உணரப் படுகின்றது. அதனை ஈடுசெய்யும் வகையில் எமது 'சிமாட் கிட்ஸின்' கலைத்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலாப நோக்கமின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி 'சிமாட் கிட்ஸ்' முன்பள்ளியில் உங்கள் குழந்தைகளுக்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்களுக்கு நவீன யுக்திகளுடன் தரமான ஆசிரியர் குழாமால் சிறந்த கல்வியை வழங்க முடியும். 15 மாணவர்களுக்கு இரு ஆசிரியர்கள் (பொது மற்றும் ஆங்கிலம்) என்ற வகையில் செயற்படுத்தப்படுகின்றது.

புற நிகழ்ச்சிகளாக மாணவரின் வளர்ச்சி கருதி விளை யாட்டு விழா, வருட இறுதி கலை விழா, நவராத்திரி விழா, Jolly Evening, சுற்றுலா போன்றவை செயற்படுத்தப்படு கின்றது.




மழலைகளின் திறனை மேம்படுத்த CALSDA ஆங்கில நெறி, CHESS மற்றும் Art வகுப்புக்கள் இடம் பெறுகின்றன.
மாதாந்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் சிறார்களுக்கிடையே உறவை மேம்படுத்தும் நோக்குடன் PARENTS' CIRCLE அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

அனுமதி பெற விரும்புவோர் 15.10.2014 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**வித்தியாரம்பம் விஜயதசமியன்று (03.10.2014) வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணி**

திரு.அ.பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர்
யா/இந்துக் கல்லூரி)
தலைவர்

திரு.ப.பாலமுகுந்தன்
ஆங்கில ஆசிரியர்,
நிறைவேற்று இயக்குனர்
T.P: 021 205 2262

(C 15991)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா நம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் 5ஆம் ஆண்டில் கல்விகற்று வரும் புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ப.தயானந்தரூபன் - பத்மபிரியா தம்பதிகளின் செல்வப் புதல்வன்


### த.அபினேஸ்

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 195 அதி கூடிய புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டத்திலும் வட மாகாணத்திலும் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சிஅடைகின்றோம். இவர் தொடர்ந்தும் கல்வியில் சிறக்க எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள். மேலும் இவருக்கு கல்வி கற்பித்த மகாவித்தியாலய அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அப்பப்பா அப்பம்மா - சு.பரதனாலிங்கம், கனிதம்மா (புதுக்குடியிருப்பு)
ஆசையப்பா - தவரட்ணம் குடும்பம் (புதுக்குடியிருப்பு)
சித்தப்பா - Dr சத்தியரூபன் குடும்பம் (புதுக்குடியிருப்பு)
மாமா - பேபின்பராசா குடும்பம் (லண்டன்)
மாமா - முரளிதரன் குடும்பம் (புதுக்குடியிருப்பு)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை புலேந்திரன்



கச்சனாவலடி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை புலேந்திரன் அவர்கள் நேற்று (28/09/2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நல்லம்மா தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மேந்திரா, பாலேந்திரா, ஹரிஹரேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், அஜந்தா, சிபானி, திருஷாந்தி ஆகியோரின் மாமனும், பிரணுஜனின் அன்புப் பேரனும், பூபாலனின் அன்புத் தம்பியும், கமலாதேவி, சிவஞானேஸ்வரன், லிங்கேஸ்வரி, யமுனா, உஷாதேவி ஆகியோரின் மைத்துனரும், மாலினி, மகேந்திரன், யோகராசா, சந்திரபாலன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 28/09/2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''ஓம் சாயி''ராம், கந்தரோடை, சுன்னாகம்.

(52693)

தகவல்:
குடும்பத்தினர்

## தொடர்ச்சிகள்

### மஹிந்தவின்

மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில், தாய் ஒருவர் சாட்சியமளித்தார். தனக்கு ஒரே ஒரு மகன் என்றும், அவனை தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டாயப்படுத்தி சேர்த்தனர் என்றும் அவர் தனது சாட்சியத்தில் கூறினார்.

"போரின் இறுதிக் கட்டத்தில் எனது மகன் வட்டுவாகலில் நிற்கும் போது கண்டேன். என்னுடன் வருமாறு அழைத்த போது, இராணுவத்தினரிடம் வந்தால், அவர்கள் என்னைப் பிடித்து விடுவார்கள். நான் இயக்கத்தில் இருந்தது என்று சொல்லி அவர்கள் பிடித்து, விட மாட்டார்கள். நீங்கள் போங்கள். பின்னால் வருகின்றேன் என்று சொன்னான். நான் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் எனது மகனும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தான். அதன் பின்னர் காணாமற் போய்விட்டான். இன்று வரையில் அவன் கிடைக்கவில்லை"- என்று அந்தத் தாய் கூறினார்.

அதற்கு ஆணைக்குழுவினர், உங்களுக்கு வீட்டுத் திட்டம் கிடைத்து விட்டதா ? வாழ்வாதாரம் இருக்கின்றதா என்று கேட்டனர். இதற்கு அந்தத் தாயார், நான் தனி ஒரு நபர் என்பதால் எனக்கு வீட்டுத் திட்டமோ எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார். அதற்கு ஆணைக் குழுவினர் அதனைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாகவும், வாழ்வாதாரத்துக்காக ஆடு, கோழி பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தனர்.

ஆணைக்குழு முன் சாட்சியமளித்து விட்டு வெளியே வந்த அவர், மிகப் பெரிய சத்தமாக, 'மஹிந்தவால எனக்கு எந்த நன்மையுமில்லை. மஹிந்தவின்ர ஆட்சி விரைவில கவிழும். கடவுள் இருக்கிறார். அவர் எல்லாத்தையும் பாத்துக் கொண்டிருக்கிறார். என்ர பிள்ளை காணாமற்போறதுக்கு காரணமான இவங்கள் மண்ணோடு மண்ணாளிஞ்சு போவாங்கள். பூமி பிளந்து இவங்கள் உள்ளுக்க போவாங்கள். உள்ளுக்கிருக்கிற அவங்கள் வெளில வருவாங்கள். இது நடக்கும். இவங்கட 2 ஆட்டுக்குட்டி, என்ர பிள்ளை இருந்து உழைச்சுத் தர்ர மாதிரி வருமா ? ஆருக்குப் பேக்காட்டிறியள்" - என்று சத்தமிட்டுக் கதறினார். (ற-5)

### தமிழரசுக்

இந்தக் கூட்டத்தில் இம்மாதம் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 15 தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், கட்சியின் செயற்பாடுகளை மாகாணம், மாவட்டம் மற்றும் பிராந்திய ரீதிகளில் மேம்படுத்துவது பற்றியும் மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

அதில் அனைவரினதும் விருப்பத்துக்கிணங்க உள்நாட்டு மற்றும் சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதற்காக அரசியல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் சம்பந்தனைத் தலைமையாகக் கொண்டுள்ள இந்த அரசியல் குழுவில் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா, பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான கி.துரைராஜசிங்கம், கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராஜா, எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாணசபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த அரசியல் குழு கூடுகின்ற வேளைகளில் தேவையேற்படும்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி ஆகியோரையும் இணைத்துக்கொள்ளும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் உள்நாட்டு மற்றும் சர்வதேச பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காக மாவட்ட ரீதியில் உப மாநாடுகளை நடத்துவது எனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய முதலாவது உப மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், பொன்.செல்வ ராஜா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன், பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் மற்றும் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ற)

### தமிழகத்தின்

கூட்டம் சென்னையில் உள்ள அ.தி.மு.க. தலைமையகத்தில் நேற்று நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில், சட்டசபையின் அ.தி.மு.க. குழுத் தலைவராக பன்னீர் செல்வம் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து, அவர் இன்று ஆளுநர் மாளிகையில் நடக்க வுள்ள ஒரு எளிய விழாவில் முதல்வராக பதவி ஏற்றுக்கொள்ளவுள்ளார்.

அப்போது முக்கிய அமைச்சர்களும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

தமிழகத்தின் முதல்வர் பதவியில் பன்னீர் செல்வம் 2 ஆவது முறையாக அமர்கிறார். இந்தப் பதவியில் ஏற்கனவே அவர் 2001 ஆம் ஆண்டுமுதல் முறையாக அமர்ந்துள்ளார். அப்போதும்கூட உச்சநீதிமன்றம் முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் நியமனம் செல்லாது என்று உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர் பதவி விலகியதால், பன்னீர் செல்வம் முதல்வரானார். இப்போது அதே ஜெயலலிதாவுக்கு மீண்டும் சட்டச் சிக்கல் ஏற்பட்டு பதவி பறிபோன நிலையில் மீண்டும் முதல் வராகியுள்ளார் பன்னீர் செல் வம். 1951 ஆம் ஆண்டு பிறந்த ஓட்டக் காரத்தேவர் பன்னீர் செல்வம் என்று அழைக்கப்படும் ஓ.பன்னீர் செல்வம், ஜெயலலிதாவின் முழுமையான விசு வாசி ஆவார். தற்போது நிதியமைச்சராக, பொதுப் பணித்துறை அமைச்சராக உள்ள பன்னீர்செல்வம், முன்பு வருவாய்த்துறை உள்ளிட்ட பல முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

**விவசாயி - தேநீர்கடை அதிபர்**

விவசாயம், தேநீர்கடை என்று வேறுசில முகங்களும்கொண்ட பன்னீர்செல்வம், பணிவுக்கும் பெயர் போனவர். ஜெயலலிதாவிடம் மட்டுமல்லாமல், தான் பணியாற்றும் துறைகளிலும்கூட அதிகாரிகளிடம் அதிர்ந்து பேசாத பண்பாளர் என்ற பெயரைப் பெற்றவர்.

முக்குலத்தின் முதல் முதல்வர் 2001 ஆம் ஆண்டு இவர் முதல்வர் பதவியில் முதல் முறையாக அமர்ந்தார். முக்குலத்தோர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் முதல்வர் பதவியில் அமர்ந்தது அதுவே முதல் முறை என்பதால் முக்குலத்தோரின் அன்பையும், ஆதரவையும் பெற்றார் ஜெயலலிதா.

**2006 இல் எதிர்க்கட்சித் தலைவர்**

2006 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியை இழந்தபோது ஓ.பன்னீர் செல்வம் சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றினார். (ற-சி)

### வடக்கு

அதில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த வவுனியா ரம்பைக்குளம் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவன் அபினேஸ் தயானந்தரூபன் 195 புள்ளிகளைப் பெற்று தமிழ்மொழி மூலம் தோற்றிய மாணவர்களில் வடக்கு மாகாண மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

அகில இலங்கை ரீதியில் எம்பிலிப்பிட்டிய ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த டபிள்யூ.ஏ.வேனுஜா நிம்சத் என்ற மாணவி 199 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றார். யாழ்.மாவட்ட ரீதியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த இ.கபிசன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த பா.வனோஜா மற்றும் அருணோதயா கல்லூரியைச் சேர்ந்த ப.சஞ்சயன் ஆகியோர் 192 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த சே.சிவகுமாரன், புனித திரேசா பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த வி.மதுமிதா, அம்பிகை வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜீவகன் விதுர்சன், தருமபுரம் இல 01 அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த சி. கயல்விழி ஆகியோர் 183 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத் தில் விசுவமடு விசுவநாதர் வித்தியாலயத்தைச் சேர்ந்த கெ.ஆதித்யா 193 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை செல்வி. குணசீலன் ஆன்பொபிசா 190 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

(ற-10,7,402,108,405,36-421)

### தெரிவுக்குழுவின்

அத்துடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் ஜனாதிபதி மஹிந்தவால் தெரிவிக்கப்பட்ட கருத்தையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இரண்டாவது தடவையாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நியூயோர்க்கில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை - இந்தியா இடையேயான உறவுகளை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் இணைந்து பணியாற்றுவதற்கு இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளனர். சுமுகமாக இடம்பெற்ற கலந்துரையாடலில், இரு நாடுகளுக்கும் பொதுவான பல்வேறு விடயங்கள் குறித்து இரண்டு தலைவர்களும் உரையாடியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மையில் சந்தித்திருந்தனர். இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்தியப் பிரதமர், ஜனாதிபதியிடம் விவரித்துள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முக்கியத்துவத்தையும் பிரதமர் மோடி ஏற்றுக்கொண்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசு எப்போதும் தயாராகவே இருக்கின்றது என்று பிரதமர் மோடியிடம், ஜனாதிபதி ராஜபக்ஷ விளக்கியுள்ளார், அத்தோடு அதற்கான பொறிமுறையானது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். வடக்கு மாகாணத்திற்கு அரசு உதவிவரும் வழிகள், குறிப்பாக நிதியியல் வளங்கள் தொடர்பாக பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி விளக்கியுள்ளார்.

மீனவர் விடயத்தை நிதானமாக கையாள வேண்டும் என்பதை இரு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அடிக்கடல் மீன்பிடிப்பு முறை தொடர்பான தனது கவனத்தை மீள வலியுறுத்தினார்.

'அடிக்கடல் மீன்பிடி தான் மிகப் பெரிய பிரச்சினை. தற்போது அது சட்டரீதியற்ற நடைமுறை. இலங்கை மீனவர்களுக்கு நாங்கள் அடிக்கடல் மீன்பிடியை தடைசெய்துள்ளோம். இது கடற்படுக்கைகளுக்கும், வளங்களுக்கும் நிரந்தரமான சேதத்தை ஏற்படுத்துகிறது' என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள மீனவர்களுக்கு அடிக்கடல் மீன்பிடி தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், இந்திய மீனவர்களுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டால் அதை வடக்கிலுள்ள இலங்கை மீனவர்கள் அநீதியாக நோக்குகிறார்கள் என்றும் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பில், இந்தியாவின் ஆதரவுக்கும், ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களுக்கும் பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார். 'நாங்கள் ஒன்றாக இணைந்து வாழ வேண்டும். ஆகவே ஒருவருக்கொருவர் உதவவேண்டும்' என்று பிரதமர் மோடி பதிலளித்துள்ளார். (ற-5)

### பல சேனாவுடன்

சிங்கள - பௌத்த அமைப்பான பொது பல சேனாவின் இரண்டாவது தேசிய மாநாடு கொழும்பு, சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்றது. அதில் சிறப்பு பிரதிநிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே விராது தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த உலகில் வாழும் மக்களில் அஹிம்சாவாதிகளாகவும் சிறுபான்மையினத்தவர்களாகவுமே இந்த பௌத்த மக்கள் கருதப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களைப் பாதுகாப்பதென்பது அவசியமான ஒன்றாகும். ஆனால், உலகையே அச்சுறுத்தும் இந்த ஜிகாத் தீவிரவாதிகள் தற்போது பௌத்தர்களுக்கும் அச்சுறுத்தலாக வந்துவிட்டனர்.

இந்தத் தீவிரவாதிகளுக்கு பின்னால் இயங்கும் சில ஊடகங்களாலேயே பௌத்த மக்கள் இன்று சர்வதேச மத்தியில் தீவிரவாதிகளாகவும், ஜிகாத் தீவிரவாதிகள் அஹிம்சாவாதிகளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இது மிகவும் அபாயகரமானதோர் விடயமாகும். இந்த ஜிகாத் தீவிரவாதி களை வளர விடுவது உலகுக்கு ஆரோக் கியமான விடயமல்ல.

ஆகவே, இந்த ஜிகாத் தீவிரவாதிகளை அடியோடு அழித்தொழிக்க எமது 969 அமைப்பானது எதிர்காலத் தில் பொது பல சேனாவுடன் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்கும்" என்று அவர் தனது உரையின்போது குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை முஸ்லிம் தீவிர வாதத்திற்கு எதிராக இயங்கும் பொது பல சேனாவுக்கும், தன்னை இலங்கைக் குள் நுழைய அனுமதித்து நுழைவிசைவு வழங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அசின் விராது தனது நன்றிகளை யும் தெரிவித்துக் கொண்டார்.

அதேநேரத்தில், சுமார் 6 ஆயிரத் துக்குமதிகமான உள்நாட்டு, வெளி நாட்டு பிக்குகள், நூற்றுக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு பௌத்த அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடக வியலாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பௌத்த மாணவர்கள் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். (ற-சி)

### அரசை

மியான்மாரின் சர்ச்சைக்குரிய பௌத்த மதகுரு விராது உட்பட பெருமளவு மதகுருமார் முன்னிலையில் உரையாற்றிய அவர் பொது பலசேனா அமைப்பின் மீது குத்தப்படும் பயங்கரவாத முத்திரையை முற்றாக நிராகரித்தார்.

"பௌத்தர்களின் கரிசனைகள் குறித்த ஆவணமொன்றை அரசிடம் கையளிக்கவுள்ளோம். அரசு அதற்குத் தீர்வைக் காணாவிட்டால் கிராமத்திலிருந்து நாட்டை ஆள ஒருவரை கொண்டு வருவோம். மாற்றத்தை ஏற்படுத்துவோம். இலங்கையில் பெருமளவு சட்ட விரோத குடியேற்ற வாசிகள் மசூதிகள் உட்பட பல இடங்களில் வாழ்கின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வைக் காணவேண்டும்"- என்று அவர் அங்கு மேலும் வலியுறுத்தியுள்ளார். (ற)

### போதைப்

கடத்தப்பட்டமை தொடர்பில் தாய் ஒருவர் சாட்சியமளித்தார். அதற்குப் பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர், "உங்கள் மகன் கொழும்பில் தனித்து இருந்துள்ளார். அவர் போதைவஸ்து பாவனைக்கு இலக்காகி தவறான வழியில் சென்றிருக்கக் கூடும். அதனூடாக அவர் காணாமற் போயிருக்கலாம். கொழும்பு, இளம் பிள்ளைகள் பெற்றோரின் கண்காணிப்பு இன்றி தனித்து வாழ்வதற்கு பாதுகாப்பான இடமல்ல" என்று கூறியுள்ளார். (ற-5)

### மலர்

யொன்றை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

பழ மரக்கன்றுகள் மற்றும் அலங்காரத்தாவரங்களை உற்பத்தி செய்பவர்களுடனான கலந்துரையாடல் நேற்று வட மாகாண விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போது அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது.

மரக்கன்றுகள் உற்பத்தி வட மாகாணத்தில் இதுவரை கண்டு கொள்ளப்படாத ஒரு துறையாக இருக்கிறது. ஆனால் தென்னிலங்கையில் மாதந்தோறும் மரக்கன்றுகளுக்கான கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. இதனால் பொது மக்களுக்கிடையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மரநடுகையும் அங்கு அதிகரிக்கப்பட்டு வருகிறது. வடக்கைப் பொறுத்த வரையில் மரங்கள் கண்மூடித்தனதாக அழிக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் மரநடுகை மாதமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் உள்ளூர் மரக்கன்றுகளின் உற்பத்தியாளர்கள் நாற்று மேடைகளை அமைப்பதிலும் விற்பனை செய்வதிலும் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். இதற்காக 9 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகளாக உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் விற்பனை தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் விற்பனையைப் பெருக்கும் வகையில் கண்காட்சியை மாதம் தோறும் நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதற்காக பொருத்தமான இடம் தீர்மானிக்கப்பட்டு நிரந்தரமாக அங்கு மாதம் தோறும் கண்காட்சி நடைபெறும்.

கார்த்திகைப் பூச்செடி தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக மரத்தின் விதைகள் மருந்துக்காக பயன்படுத்தப்படுவதால் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக அதிகளவு வருமானத்தை விவசாயிகள் பெற்று வருகின்றனர்."- என்று தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் மாகாண பிரதி விவசாயப்பணிப்பாளர் சி.சிவகு மார், யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபாலசுந்தரம் மற்றும் வடக்கின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த மரக்கன்று உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். (ற-14)

# மண்முனைப்பற்றில் வீடுகள் கையளிப்பு



மட்டக்களப்பு, செப்.29

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மண்முனை மற்றும் ஒல்லிக் குளம் மேற்கு கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் சனிக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

குறித்த வீடுகளை பொருளாதார அபிவிருத்தி பிரதிய மைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் திறந்து வைத்து பயனாளிகளிடம் கையளித்தார்.

பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியால் சவூதி அரேபிய நாட்டு முக்கியஸ்தரின் நிதியுதவியுடன் மண் முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மண்முனை மற்றும் ஒல்லிக்குளம் மேற்கு கிராமங்களில் மீள் குடியேறிய 10 குடும்பங்களுக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன.

மேற்படி இரண்டு கிராமங்களிலும் 7 இலட்சம் ரூபாய் செலவில் தலா 5 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. (வ)

# கிழக்கு மக்களின் குறைகள் அரசுக்குச் செல்லவில்லை

## விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா தெரிவிப்பு



அம்பாறை, செப்.29

கிழக்கு மாகாண மக்களின் குறைகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எதுவும் இதுவரை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படவில்லை அந்தப்பணியை குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த எந்தவொரு அரசியல்வாதியும் மேற்கொள்ளவில்லை என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மருத முனை அல்மனார் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மக்களது குறைகளைக் கேட்டு அதற்கேற்ப செயற்படவில்லை' என்றும் இதன்போது தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்:

'அவர்கள், அவர்களின் சுகபோகங்களை நிலை நிறுத்தவும் தங்களது அரசியல் நடவடிக்கைகளை கையாள்வதற்குமே மக்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக நாம் இங்குள்ள பிரதேசங்கள் அனைத்துக்கும் சென்று மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அதனை ஜனாதி பதியின் கவனத்துக்குக் கொண்டு செல்கின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதேச மக்களுடைய கருத்துக்களைபெற்று அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து அரசியல் பிரதிநிதிகளைக் கொண்டு பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பிராந்தியம் நாட்டின் விவசாயத்துறைக்கு பிரபலமானது. இங்குள்ள மக்களுடைய விவசாயப் பிரச்சினைகளை அறிந்து அதற்காகவும் நான் கூடுதலான உதவிகளைச் செய்யவுள்ளேன்"-என்றார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் இஷட். ஏ.றஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தொழில் மற்றும் தொழில் உறவுகள் பிரதி அமைச்சரியர் அட்மிரல் சரத் வீரசேகர, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் டபிள்யூ.டீ.வீரசிங்க, மகநெகும பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக்க, மைஹோப் மற்றும் ஜவா நிறுவனத்தின் பணிப்பாளர் சித்தீக் நதீர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ)

# தெரு நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்துக

## கல்முனை மக்கள் கோரிக்கை

கல்முனை, செப்.29

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் தெரு நாய்களின் தொல்லை தினமும் அதிகரித்து வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் கல்முனை நகர் பிரதேசத்தில் கூட்டமாக நிற்கும் நாய்கள் வீதியில் பயணிக்கும் பொது மக்களுக்கு பல்வேறு இடர்களை ஏற்படுத்தி வருகின்றது. இதன் காரணமாக வீதி விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன.

கல்முனை மாநகர சபை பிரதேசத்தில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்தியது போன்று தெரு நாய்களின் தொல்லையையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச பொது மக்களும் பாதசாரிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (வ)




நவ்ரு முகாமில் சிறுவர்களை கம்போடியாவுக்கு அனுப்பும் திட்டத்தைக் கண்டித்து சிறுவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். ஆஸ்திரேலியாவில் அகதி களை ஈவிரக்கமற்ற முறையில் குடிவரவு அமைச்சரும், ஆஸ்திரேலியா அரசும் தொடர்ந்து சிறுவர்களை சிறைக்கூடத்தில் அடைத்து வைத்துள்ளது. இதன்காரணமாக மிகவும் மனமுடைந்த சிறுவர்கள் 3 தினங்களாக கவன ஈர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சிறுவர்களை கம்போடி யாவுக்கு அனுப்பும் திட்டத்தைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்று வருகின்றது. கடந்த 26 ஆம் திகதி ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் தற்போது சிறுவர்கள் முன்னெடுப்பதாக இயன் தெரிவித்துள்ளார். (வ)

# தேங்காய் உற்பத்தி மட்டக்களப்பில் வீழ்ச்சி

## தென்னை மரங்களில் 'மைற்றா' பூச்சித் தாக்கம் அதிகரிப்பால்

மட்டக்களப்பு, செப்.29

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள தென்னை மரங்களில் 'மைற்றா' எனப்படும் பூச்சித் தாக்கம் அதிகரித்துள்ளதால் தேங்காய் உற்பத்தியில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தென்னைப் பயிர்ச் செய்கையின் பிராந்திய அலுவலகத் திட்டமிடல் அதிகாரி பெருமாள் உதயச்சந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வறட்சி காரணமாக இந்த மைற்றாவின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான கதிரவெளியிலிருந்து கல்லாறு வரை தென்னை மரங்கள் பாதிப்படைந்துள்ளன.

இந்தத் தாக்கத்தின் காரணமாக தென்னங் குலைகளில் உள்ள குரும்பைகள் உதிர்ந்து விடுகின்றன. அதனால் தேங்காய்களின்றி வெறும் நெட்டிகளுடனேயே குலைகள் காணப்படுகின்றன.

இக்காலப்பகுதியிலே இதனைக் கட்டுப்படுத்தா விட்டால் தெங்குச் செய்கை யாளர்கள் பெரியளவில் இழப்பைச் சந்திக்க வேண்டிவரும்.

இந்தத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் கட்டுப்பாட்டுமுறையை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரை செய்துள்ளது.

இம்முறையினூடாக பாதிக்கப்பட்ட நான்கு மரங்களுக்கு ஒரு மரம் என்ற வீதத்தில் உயிரியல் கட்டுப்பாட்டு முறையை பிரயோகிப்பதன் மூலம் மைற்றா நோயை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

அத்துடன் இம்முறையை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பலதடவைகள் பாவிப்பதன் மூலம் தாக்கத்தைப் பலமடங்காகக் குறைக்கலாம்.

இந்த உயிரியல் முறையில் மைற்றாவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான இரை கௌவியை உற்பத்தி செய்யும் ஆய்வுகூடங்களில் மட்டக்களப்பு தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை முன்னணியில் உள்ளது.

இதனூடாக உற்பத்தி செய்யப்படும் இரைகௌவி பைக்கற்றுகளை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை, மட்டக்களப்பு அலுவலகத்தில் இருந்து விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும்.



அவற்றை அம்பாறை, பொலநறுவை, திருகோணமலை அனுராதபுரம் போன்ற இடங்களுக்கும் மட்டக்களப்பிலிருந்து வழங்கக் கூடியதாகவுள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை, மட்டக்களப்பு அலுவலகத்தில் 15 ரூபா செலுத்தி ஒரு இரை கௌவி பையை கொள்வனவு செய்து பாதிக்கப்பட்ட 4 தென்னை மரங்களுக்குப் பாவிக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோரம் உட்பட சுமார் ஏழாயிரம் ஏக்கரில் தென்னை மரங்கள் காணப்படுகின்றன-என்றார். (வ)

# அடுத்த ஆட்டமே இலக்கு - கம்பீர்

சம்பியன் லீக் தொடரில் கிண்ணத்தை வெல்வது யார் என்பதைப் பற்றி சிந்திப்பதை விட அடுத்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதில் தான் கவனம் செலுத்த விரும்புகிறோம் என கொல்கத்தா அணியின் தலைவர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

சம்பியன் லீக் கிண்ணத்தை வெல்வதற்கு இன்னும்நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. லீக் சுற்றே இன்னும் முடியவில்லை. கடைசி லீக் ஆட்டத்தில் டொல்பின்ஸ் அணியுடன் மோத வேண்டியுள்ளது. தொடர்ந்து அரையிறுதிப் போட்டி இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னது போல ஓர் அணி சிறந்த அணி என்பதற்காக மிக முன்கூட்டியே அந்த அணி தான் கிண்ணத்தை வெல்லும் என எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒவ்வொரு ஆட்டத்திலும் முழுப்பலத்துடன் விளையாடி வெற்றி பெற முயற்சிப்பது எங்களுக்கு மிக முக்கியமான தாகும். எனவே அடுத்த போட்டியில் மட்டுமே எங்கள் கவனம் உள்ளது. இது வரை நாங்கள் அப்படித்தான் விளையாடி வந்திருக்கிறோம். அப்படி இல்லாவிட்டால் சிறப்பான வெற்றிகளை பெற்றிருக்க முடியாது என்றார்.

(ரி)

**ENGLISH - Personal Class**

நீண்ட அனுபவம் உள்ள பட்டதாரி ஆசிரியர். தேவையான திறன்களில் விசேட கவனம் தரப்படும். குறுகிய காலத்தில்நிறைவான முன்னேற்றம் பெறலாம். T.P:077 9309740

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**விசேட வகுப்புக்கள்**

**SLAS இன்**
ஆகவபூரவமான பகுப்பாய்வு வினாத் தாளுக்குரிய விடயங்கள்
செவ்வாய், புதன் மாலை 5.00-7.00 மணிவரை.

பிரிவு II புதன் (1/10)
மாலை 3.30-6.00
ஒவ்வொரு புதனும் நடைபெறும்
T.P : 0754164564
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

**வேலையாள்கள் தேவை**

- கல்விச் சஞ்சிகைளை கிளிநொச்சி, வவுனியா, யாழ் பிரதேங்களில் விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவை.
- பான்சி கடைக்கு விற்பனையாளர் தேவை.
- நல்லூர் பகுதியில் உள்ள காரியாலயத்தில் பணிபுரியக்கூடியவர்கள் தேவை.(இருபாலாரும்)

தொடர் : 0772174751

**VACANCY**

A Leading Company looking for an enthusiastic & young Individual for them Customer Service in Jaffna.

***Required Qualification:***

- Minimum 3 A/L Pass.
- Spoken English is essential.
- Experience in Customer Service is preferable
- Salary Negotiable
- Age limit 25 to 35 years

●Clossing date : 05.10.2014

Please Send your updated CV to following address or email.

Ad. No. 5018
C/O.New Uthayan Publication (Pvt) Ltd.
No.361, Kasthuriyar Road, Jaffna.
Email: jaffnavacancy@gmail.com

**இன்று முதல் வவுனியா மக்களுடன்**

Nation popular travels & tours

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**Nation Popular Travels & Tours**
Vavuniya Branch

திகதி: 29/09/2014
இடம்: 179 புகையிரத வீதி வைரவபுளியங்குளம் வவுனியா
நேரம் : பி.ப 1.00 மணிக்கு

**சிறப்பு விருந்தினர்கள்**

கௌரவ முன்னாள் நீதியரசர் C.V.விக்னேஸ்வரன் - முதலமைச்சர்-வடமாகாணம்

கௌரவ சிவசக்தி ஆனந்தன் - பாராளுமன்ற உறுப்பினர் - வன்னி
கௌரவ Dr.P.சத்தியலிங்கம்

Shri.S.D
கௌரவ R.இராஜேந்திரா - வடமாகாண சபை உறுப்பினர்
கௌரவ A.D.D - வடமாகாண சபை உறுப்பினர்
கௌரவ M. - வடமாகாண சபை உறுப்பினர்
Abacus IT.
Airindia

**Nation Popular Travels & Tours**
Head Office:#16,1/2,E.S.Fernando mawatha Colombo-06
#128,Brown Road, Jaffna
Hot Line: 0114651199,0214920920

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்றைய தினம் வெளிவந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவச் செல்வங்களுக்கும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற திறமைசாலிகளுக்கும் சுடர் ஒளி குழுமம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

சுடர் ஒளி THE SUDAR OLI
புலமைச்சுடர்
ஒளி அரசி

**பெற்றோர்களே, ஆசிரியர்களே, அதிபர்களே உங்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி !**

தரம் 5 பரீட்சையில் சித்தியடைந்து உங்களுக்கு பெருமை சேர்த்த மழலைச் செல்வங்களை மிகக் குறைந்த கட்டணத்தில் 'சுடர் ஒளி' தேசிய பத்திரிகையிலும், புலமைச்சுடர் கையேட்டிலும் பாராட்டி வாழ்த்த 'சுடர் ஒளி' குழுமம் வழங்கும் ஓர் அரியவாய்ப்பு.

**மிகக் குறைந்த சலுகைக் கட்டண விவரங்கள்:**

★ தனிப்பட்ட ஒரு மாணவரின் புகைப்படத்திற்கு 250 ரூபா. ★2 - 5 வரையான மாணவர்களின் குழுப் படத்திற்கு 500 ரூபாவும். ★ 6 - 10 வரையான குழுப்படத்திற்கு 1,000 ரூபாவும். ★ 10 - 15 வரையான குழுப்படத்திற்கு 1, 250 ரூபாவும். ★ 16 - 20 வரையான குழுப் படத்திற்கு 1, 500 ரூபாவும். ★ 20 பேருக்கு மேற்பட்ட குழுப் படத்திற்கு 2,000 ரூபாவும் அறவிடப்படும்.

புகைப்படங்களையும், வாழ்த்துவோர் விவரங்களையும் உறுதிப்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்களையும் பணம் செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டையும் இணைத்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி விசேட சலுகையினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்.

**கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை**

"Landmark Enterprises"
Commercial Bank
New Vision media syndicate (pvt) Ltd.

**குறிப்பு:**
மின்னஞ்சல் மூலம் அனுப்ப விரும்புவோர் மேற்படி ஆவணங்களை kalvisudarinfo@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி 0716850005 / 0714273035 என்ற இலக்கத்திற்கு தெரிவிப்பதன் மூலம் இலகுவாக விளம்பரத்தினை பிரசுரிக்க முடியும்.

**'சுடர் ஒளி' கல்விப் பிரிவு:**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
மேலதிக தொடர்புகளுக்கு: கொழும்பு 0787273035, யாழ். 0776569617

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.